தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

விலை 30 ரூபா • தீபம் 177 • 10.03.2019




## ஞானம் ஐஸ்கிறீம்

திருமண நாள் மற்றும் பிறந்த நாள் பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும் ஓடர் மூலம் வழங்கப்படும். கோடை காலத்தை குளிர்மையாக்கிட குடும்பத்துடன் சென்று மகிழ்ந்திட ஞானம் ஐஸ்கிறீம்.

இதோ புதுப் பொலிவுடன் பசுமைப் பூங்காவில் ஞானம் ஐஸ்கிறீம்.

டிப்போ சந்தி அருகில் கனகபுரம் வீதி. கிளிநொச்சி.
தொலைபேசி இல: 0775230064






## ரணிலின் புதிய தந்திரம்

## முகிலைத் துளைத்த புலிகள் புதிய தொடர் ஆரம்பம்



# பாடுகள் சுமந்த பெருமகனை தொழுபவர்களின் கைகள் வன்மங்கள் சுமக்கலாமா...?



## YARL AHI ICE CREAM
## யாழ் அகி ஐஸ்கிறீம்

திருமண நாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய விழாக்களுக்கும்
வாகன வசதியுடன் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களை அறிந்திட www..yarlahi.com ஐ பார்வையிடவும்.



இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P: 021 791 7585 / 077 023 2328





# உலகை ஈர்த்த சம்பா





பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் புகழ் பெற்ற சம்பா நடனத் திருவிழா கடந்த வாரம் நடந்து முடிந்துள்ளது.



ஆண்டுதோறும் பிரேசிலில் நடத்தப்படும் கார்னிவல் திருவிழாவில், சம்பா நடன கலைஞர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகின்றனர்.

உலகப் புகழ்பெற்ற களியாட்ட திருவிழா தூறல் மழைக்குள்ளும் வாத்தியங்கள் முழங்க, உற்சாகம் ததும்ப, நடன கலைஞர்கள் வீதிகளில் வலம் வந்தனர். கண்கவரும் வண்ண உடைகளில், ஆடல் பாடலுடன் அணிவகுத்த அவர்களை, வீதியில் திரண்டிருந்த பொதுமக்கள் உற்சாகமூட்டினர்.

வண்ண, வண்ண உடை அணிந்த கலைஞர்கள் ஆடல், பாடலுடன் மாநகர வீதிகளில் வலம் வந்தனர். ரியோ டி ஜெனிரோ போலவே சல்வடார், ரேசிபி உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் சம்பா நடன விழா தொடங்கி உள்ளது.



# ஒரேஞ் பழ திருவிழா

உலகப் புகழ்பெற்ற ஒரேஞ் பழ சண்டைத் திருவிழா இத்தாலி நாட்டில் நடைபெற்று வருகிறது. இம்முறை சுமார் 50 லட்சம் ஒரேஞ் பழங்கள் வீசப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் இத்தாலியில் நடைபெற்று வரும் ஒரேஞ் பழச் சண்டை (battle of orange) இந்த ஆண்டும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது.

இந்த விழாவுக்கான வரலாறு சரியான முறையில் தெரியாவிட்டாலும், 12 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த போட்டி நடக்கிறது என்கிறார்கள். அக்காலத்தில், மில்லர் என்பவரின் மகள் வையோலட்டாவுக்கு திருமணம் நிச்சயக்கப்பட்ட நாளில், அந்த ஊரின் கொடுங்கோலன் அவரை பலாத்தகாரம் செய்ய முயன்றான் என்றும், வையோலட்டா அந்த கொடுங்கோலனின் தலையை கொய்தார் என்றும் கூறப்படுகின்றது.

# போதிக்கும் ரோபோ

ஜப்பானின் கியோட்டோ நகர பௌத்த விகாரையில் போதனைகளை ரோபோ பிக்கு வழங்கி வருகிறது. அண்ட்ராய்டு கனான் என்று அழைக்கப்படும் இந்த றோபோ, கருணை பாரம்பரிய பௌத்த தெய்வத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை கோடாய்ஜி விகாரையில் அதன் முதல் போதனைகளை வழங்கியது, இதனை தொடர்ந்து மார்ச் மாதம் பொது மக்களுக்கு தனது போதனைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



உலகம் பலவிதம்



# பொம்மை திருவிழா

ஹினாமாட்சூரி எனப்படும் பொம்மை திருவிழா ஜப்பானில் கொண்டாடப்படுகிறது. பெற்றோர் தங்கள் மகளின் சுபீட்சத்துக்காக இதில் பிரார்த்திக்கின்றனர். இதற்கு மோமோ நோ சேகு (Momo no Sekku) அதாவது பீச் பூங்கொத்து திருவிழா (Peach Blossom Festival) என்ற பெயரும் இதற்கு உண்டு.

பீச் மலர் பெண்மையின் பல உன்னத குணாதிசயங்களை கொண்டதாக ஜப்பானில் போற்றப்படுகிறது. விழா நிறைவு நாளன்று நாரால் செய்யப்பட்ட பொம்மைகளை காகிதப் படகுகளில் வைத்து ஆற்றுநீரில் விட்டால் தீயவை, அகலும், பெண் குழந்தைகளுக்கு தீமை நேராது என்பது ஐதீகம். பெண்கள் விழா நாளன்று அழகிய ஆடைகளில் வலம் வருவர்.



## முகிலைத் துளைத்த புலிகள் - 01

# அச்சத்தில் உறைந்த சிங்களமும் சர்வதேசமும்

**1998 மாவீரர் நாள் அது.**

இராணுவ புலனாய்வுப் பிரிவு தனக்குக் கிடைத்த செய்தியை உறுதி செய்யப் பகீரதப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அரச புலனாய்வுப் பிரிவினரும் தங்கள் உளவாளிகள் மூலம் அதே செய்தியை ஊர்ஜிதம் செய்யத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் மட்டு மல்ல வல்லரசு சக்திகளும் கிடைத்த செய்தி உண்மைதானா? என்பதை அறிய ஆளாளுக்குப் பறந்தார்கள்.

பரவிய செய்தியால் ஆட்சி யாளர்கள் அச்சத்தில் பேச்சடங்கிக் கிடந்தார்கள். செய்தி உண்மையாகி விடக்கூடாது என்பதே அவர்களின் எல்லாப் பிரார்த்தனையாகவும் இருந்தது. ஆனால் அவர்களின் கெட்ட காலம் அந்த செய்தி உண்மை என்றே கிடைத்த தகவல்கள் சொல்கின்றன. ஆனால் புலிகள் தரப்பிலிருந்து பலத்த மௌனமே பதிலாகக் கிடைக்கிறது. புலிகளின் ஊடகங்கள் அதுபற்றி வாயைத் திறக்கவில்லை. வழமைபோல் புலிகள் திட்டமிட்டுப் பரப்பிவிட்ட வதந்தியாக இருக்குமோ...? என்றுகூட இராணுவத் தரப்புகள் சந்தேகம் கொண்டன.

ஆனால், மக்கள் பேசிக் கொண்ட விடயங்களில் உண்மையில்லாமல் இல்லை என்பதை புலனாய்வுத் தரப்புகள் உறுதி செய்தன. புலிகளின் விமானம் முள்ளிய வளையில் பறந்ததும் உண்மை. துயிலும் இல்லத்திற்குப் பூ தூ வியதும் உண்மை. இந்தச் செய்தியை புலனாய்வுத் தரப்பு



உறுதி செய்தபோது சிங்களப் பேரிவாதிகளின் சித்தம் கலங்கியது. புலிகள் சும்மாவே அந்த அடி அடிப்பார்கள். அவர்களிடம் இப் போது விமானம் வேறு இருக்கிறது என்றால்... கேட்கவா வேண்டும்...?

புலிகளிடம் விமானம் என்று நினைக்கவே சிங்களப் பேரினவாதிகளுக்கும் அண்ட மெல்லாம் கிடுகிடுத்தது. சப்த நாடிகளும் அடங்கி ஒடுங்கியது. ஆனாலும் புலனாய்வுத் துறையும் ஆட்சியாளர்களும் சர்வதேசமும் தங்கள் ஆட்களை கேள்விகளால் துளைத்து – நோண்டி நொங்கெடுத்துக் கொண் டிருந்தனர். 'புலிகளிடம் விமானம் உண்மையா?', 'விமானம் பறந்தது உண்மையா?', 'என்ன வகை விமானம்?', 'புலிகள் கைக்கு விமானம் வந்தது எப்படி?', என்பதே அனைவரினதும் கேள்விகளின் முக்கிய அம்சங்களாக இருந்தன. புலிகளின் விமானம் பற்றி அறிய ஆளாளுக்குப் பறந்தாலும் புலிகளின் விமானம் குறித்து எந்த ஒரு தகவலும் எவருக்கும் உருப்படியாக எவருக்கும் கிடைக்கவில்லை. ஆனால் அடுத்தடுத்து வந்த ஆண்டுகள் புலிகள் தங்களின் வான் கட்டமைப்பை வலிமையாக உருவாக்கி விட்டார்கள் என்பது அனைத்துத் தரப்பினருக்கும் துல்லியமாகத் தெரிந்தது. இதை உறுதிப்படுத்துவது போன்று 2000 ஆம் ஆண்டை 'வான் புலிகள் ஆண்டு' என தலைவர் பிரபாகரன் அறிவித்தார்.

2000 ஆம் ஆண்டில்தான் வான்புலிகளின் கட்டமைப்பு தனியாக உருவாக்கப்பட்டது என்றாலும், அதற்கும் 15 வருடங் களுக்கு முன்னரே புலிகள் விமானப் படை குறித்த கட்டுமானத்தை ஆரம்பித்து விட்டார்கள் என்பதே உண்மை. புலிகள் அமைப்பு முகிழ்விட்டபோதே தலைவர் பிரபாகரனிடம் முப்படைகள் பற்றிய கட்டமைப்புக் கனவு இருந்தது. அவரின் இந்தக் கனவுதான் புலிகள் அமைப்பை அவர் பார்த்துப் பார்த்துக் கட்டமைத்திருந்தார். இங்கு, இன்னொரு விடயத்தையும் நாம் நோக்க வேண்டும். இந்தக் கட்டமைப்புகள் புலிகளின் அவசிய தேவை – முக்கியத்துவம் கருதி முன்னுரிமை அடிப்படையில் உருவாக்க சாத்தியம் குறித்தும் சிந்தித்துக் கட்டமைக்கப்பட்டது என்பதுதான்.

1985 இராணுவத்துக்கு எதிராகப் போர் சற்று தீவிரமாக ஆரம்பித்த காலம் அது. புலிகள் தவிர ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் எனப் பல அமைப்புகள் செயற்பட்ட காலம். அனைத்துத் தேவைகளுக்கும் இந்தியாவையே இந்த அமைப்புகள் நம்பியிருந்தன. ஒவ்வொரு அமைப்புகளும் தனித் தனியாகவே இராணுவத்துக்கு எதிரான போரில் ஈடுபட்டிருந்தனர். ஒவ்வொரு அமைப்புகளும் தங்களுக்கெனத் தனித்துவத்தைக் கொண்டி ருக்க விரும்பினர். ஈ.பி. ஆர்.எல்.எவ். மோட்டார் எறிகணையை தயாரித்தனர். அதேகாலத்தில் புலிகள் விமானங்களை தயாரிக்க முற்பட்டனர்.

> **2000 ஆம் ஆண்டில்தான் வான்புலிகளின் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது என்றாலும், அதற்கும் 15 வருடங்களுக்கு முன்னரே புலிகள் விமானப் படை குறித்த கட்டுமானத்தை ஆரம்பித்து விட்டார்கள் என்பதே உண்மை. புலிகள் அமைப்பு முகிழ்விட்டபோதே தலைவர் பிரபாகரனிடம் முப்படைகள் பற்றிய கட்டமைப்புக் கனவு இருந்தது.**

விமானத் தயாரிப்பு முயற்சிகளில் அக்காலத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டவர் கிட்டு மாமா. சதாசிவம் கிருஸ்ணகுமார் என்ற இயற்பெயர் கொண்ட கிட்டு அப்போது யாழ். மாவட்டத் தளபதியாக இருந்தார். தலைவர் பிரபாகரனைப் போலவே முடிவுகளை எடுப்பார். எப்போதும் எதிலும் தனித்துவத்தைப் பேண விரும்புபவர். அக்காலத்தில் புலிகள் அமைப்பில் செல்வாக்குப் பெற்ற தளபதிகள் இவரின் தோழர்களாகவோ அல்லது இவரின் கீழ் பயிற்சி பெற்றவர்களாகவோ அல்லது இவரது அன்பைப் பெற்றவர்களாகவோ இருந்தனர். எப்போதும் திறமையானவர்களை தட்டிக் கொடுத்து முன்னேற்றி விடுவதில் வல்லவர்.

பன்முகத் திறமை கொண்ட கிட்டு மாமாவின் அணியினர்தான் முதலில் விமானம் ஒன்றைக் கட்டமைத்திருந்தனர். வாகனத்தின் இஞ்சின் ஒன்றை வைத்து அந்த விமானம் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த விமானத்தைப் பறக்க விடும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு இருந்தனர். இந்த விடயத்தை முரசொலி நாளிதழ் தலைப்பு செய்தியாகப் பிரசுரித்திருந்தது. விமானப் பறப்புக்கான இடமாக யாழ்ப்பாணம் – கல்லுண்டாய்வெளி தெரிவு செய்யப்பட்டது.

விமானத்தைப் பறக்க விடும்



குழுவில் மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு, லெப்.கேணல் அப்பையா ஆகியோருடன் வேறு சில போராளிகளும் இருந் தனர். மேஜர் கேடில்ஸ் (மகாலிங்கம் திலீபன் – கண்டாவளை, கிளிநொச்சி) யாழ்ப்பாணம் – தென்மராட்சிப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்தவர். கிட்டு மாமாவின் நேரடி கண்காணிப்பில் வளர்ந்தவர்.

புலிகளின் விமான ஓட்டியாகி இராணு வத்தளங்களை குண்டுவீசி அழிக்க வேண்டும் என்ற கனவுடன் வளர்ந்தவர்.

(05 ஆம் பக்கம் பார்க்க...)

# ரணிலின் புதிய தந்திரம்

மு.திருநாவுக்கரசு

யுத்தத்தின் போது போர்க் குற்றத்தை இரு தரப்பினரும் புரிந்துள்ளனர் என்றும் இவற்றை இருதரப்பும் ஒப்புக் கொண்டு 'மறப்போம், மன்னிப்போம்" என்ற அடிப்படையில் போர்க் குற்ற விசாரணைகளோ, தண்டனைகளோ எதுவுமற்ற வகையில் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்கள் மத்தியில் கூறியுள்ளார்.

வடபகுதிக்கான 3 நாள் அரசமுறை பயணத்தை மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்ரமசிங்க 15-2-2019 அன்று கிளிநொச்சியில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார். தமிழரசுக் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம் சித்தார்த்தன் (தலைவர், புளொட்), எஸ்.ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையில் ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு பேசினார்.

விடுதலைப் போராட்டத்தின் பின் தென்னாபிரிக்காவில் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக Truth and Reconciliation Commission (TRC) அமைகக்கப்பட்டு போர்க் குற்றங்கள் மன்னிக்கப்பட்டு, நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டது போல இலங்கையிலும் அவ்வாறு ஒரு TRCI அமைத்து போர்க் குற்றங்களை இரு தரப்பும் மறப்போம் - மன்னிப்போம் என்ற வகையில் செயற்பட்டு நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்றவாறு பிரதமர் பேசியிருந்தார்.

இது ஒரு சுத்த அபத்தமான ஏமாற்றாகும். தென்னாபிரிக்க உதாரணம் சிறிதளவும் இலங்கை இனப்படுகொலை குற்றத்திற்கு பொருந்தாது. தமிழ்த் தலைவர்களை அறிவிலிகள் என்று நினைத்துக் கொண்டு அறிவிற்கு முற்றிலும் மாறான இத்தகைய ஏமாற்றுகரமான பேச்சை ரணில் தமிழ் மண்ணில் நின்று பேசியுள்ளார். இதற்குத் தக்க பதிலாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விஸ்வநாதன் ருத்ரகுமாரன் ஒரு காட்டமான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

முதலாவதாக தென்னாபிரிக்க உதாரணம் இங்கு ஈழத் தமிழர் விவகாரத்தில் சிறிதும் பொருந்தாது என்பதை தெளிவுறச் சுட்டிக் காட்டி பின்வருமாறு கூறியுள்ளார். 'இனப் படுகொலைக்கு உள்ளான தென்னாபிரிக்க கறுப்பர்கள்,அரசியல் விடுதலை பெற்று ஆட்சியில் இருந்தவாறு, வெள்ளையர்களை மன்னித்த தென்னாபிரிக்க உதாரணம், இனப்படுகொலைக்கு உள்ளாகி உரிமைகள் மறுக்கப்பட்டு, அடிமைகளாக இருக்கும் ஈழத் தமிழருக்குப் பொருந்தாது. தென்னாபிரிக்காவின் பிரச்சினை வேறு. ஈழத் தமிழர்களின் பிரச்சினை வேறு. இரண்டையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட முடியாது.

தென்னாபிரிக்காவின் மொத்த குடித்தொகையில் 8.9 விழுக்காட்டைக் கொண்ட வெள்ளையர்கள் பெரும்பான்மை கறுப்பின மக்களை Apartheid என்று சொல்லப்படுகின்ற இனத்துவேசக் கொள்கையின் கீழ், இனப்படுகொலைகளுடன் கூடிய பாரிய இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகினர். நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ், தீரத்துடன் போராடி 1995 ஆம் ஆண்டு வெள்ளையினத் துவேச ஆட்சியாளர்களைத் தோற்கடித்து, கறுப்பர்களின் கையில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது.

இதன் ஊடாக இனத்துவேச வெள்ளையர்கள் தோற்கடிக்கப்பட்டு Apartheid என்ற இனத்துவேசம் வரலாற்றில் இருந்து அகற்றப்பட்டது. அத்துடன் ஒடுக்கப்பட்ட கறுப்பர்களின் கைக்கு ஆட்சி அதிகாரம் மாறியது. வெற்றிபெற்ற கறுப்பர்கள் எட்மண்ட் டுட்டு (Desmond Tutu) என்ற கறுப்பினத் தலைவரின் கீழ் மேற்படி விசாரணை ஆணையத்தை அமைத்து, வெள்ளையர்களுக்கு மன்னிப்பு அளித்தமை வரலாற்றில் நீதிமான்கள் அளித்த மன்னிப்பாக அமைந்தது.

ஆனால் இலங்கையின் நிலைமை அப்படியல்ல. ஒன்றரை இலட்சம் தமிழ் மக்களை இனஅழிப்பு புரிந்த ஆட்சியாளர்களும், அந்த இனமும் தொடர்ந்தும் அதிகாரத்தில் உள்ளார்கள். இன அழிப்பு புரிந்த இனத்தின் கையில் அரசியல் அதிகாரம் அப்படியே உள்ளது. இங்கு அரசியல் இறைமைக்காக போராடிய தமிழ் மக்கள் ஆக்கிமிரமிக்கப்பட்டவர்களாய், படுகொலை செய்யப்பட்டவர்களாய் அவமானத்துடன் வாழ்கின்றனர். அத்துடன் இனஅழிப்பு புரிந்த சிங்கள இராணுவம் தொடர்ந்தும் தமிழ் மண்ணை தம் இரும்புப் பிடிக்குள் வைத்திருக்கிறது.



> "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அணைத்து அவர்களினது ஆதரவை சர்வதேச சமூகத்தின் முன்னும், ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையத்தின் முன்னும் உயர்த்திக் காட்டியவாறு இனப்படுகொலை குற்றத்திலிருந்து மேற்படி தலைவர் களையும், இராணுவத் தளபதிகளையும் காப்பாற்றுவதில் ரணில் முதற்கட்ட வெற்றியை ஈட்டிவிட்டார். அதேவேளை போர்க்குற்றத்தை இராணுவ சிப்பாய்கள் மட்டத்திற்கு உரியதாக சுருக்கி அவர்களை சர்வதேச கலப்பு விசாரணைக்கு உட்படுத்துவதாக ஒரு தோரணையை கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாகக் காட்டி பிரச்சினையை சர்வதேச அரங்கில் பெரிதும் தணித்தார்."

ஆபிரிக்காவில் நிகழ்ந்த கறுப்பின மக்களின் ஒரு நல்ல வரலாற்று உதாரணத்தை தலைகீழாகப் புரட்டி இனப்படுகொலை புரிந்த சிங்கள ஆட்சியாளர்களை காப்பாற்றும் வகையில் ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு பேசினார். தமிழரின் அரசியல் அறிவை மட்டரகமாக நினைத்து, இப்படியொரு உதாரணத்தைப் பிழையாகக் காட்டி அதன் மூலம் இனப்படுகொலை ஆட்சியாளர்களை காப்பாற்றுவதற்கு ஏதுவான வகையில் ரணில் விக்ரமசிங்க பேசியுள்ளார்.

போர்க் குற்ற விசாரணை என்பதை இராணுவ சிப்பாய் மட்டத்திலான விசாரணையாக சுருக்குவதில் சிங்கள ஆட்சியாளர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். உண்மையில் இலங்கையில் நடந்திருப்பது சாதாரண போர்க் குற்றமல்ல. அது ஒரு பாரிய இனப்படுகொலை. 1945ஆம் ஆண்டு ஜப்பானின் இரு பெரும் நகரங்களான ஹிரோஷிமா, நாஹசாஹி நகரங்கள் மீது வீசப்பட்ட இரு அணுகுண்டுத் தாக்குதல்களுக்கும் உள்ளாகி இறந்த மக்களின் மொத்தத் தொகை 1,40,000. ஆனால் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் போது கொல்லப்பட்ட மக்கள் தொகை 1,50,000க்கும் மேல் என அஞ்சப்படுகிறது.

அந்தளவிற்கு நிகழ்ந்திருக் கக்கூடிய ஒரு பாரிய இனப்படு கொலைக்கு பொறுப்பான தலை வர்கள், தளபதிகள், மற்றும் நிர்வாக அதிகாரிகள் என விசாரணை தீர்மானம் எடுத்த, அதை நிறைவேற்றிய மேல்மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். சேர்பியர்கள் புரிந்த இனப்படுகொலைக்குப் பொறுப்பாக ஜனாதிபதி மிலோசவிக் கைது செய்யப்பட்டு சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டார். அவர் விசாரணைக் கைதியாக சிறையில் இருந்த வேளையில் அவர் மரணமடைந்தார் என்பது வேறு கதை.

இங்கு அந்த இனப் படுகொலைக்குப் பொறுப் பான ஜனாதிபதி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட முன்னுதாரணத்தை முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை விடயத்திலும் பின்பற்ற வேண்டும். எனவே முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குக் கட்டளையிட்ட ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தலைமைத் தளபதி, மற்றும் தளபதிகள், களநிலை அதிகாரிகள் என இனப்படுகொலையோடு சம்பந்தப்பட்ட மேல் மட்டத்தவர்கள் முற்றிலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

(05 ஆம் பக்கம் பார்க்க...)

# பலவீனப்படுத்தப்படும் தமிழ்த் தேசியம்

தமிழர் தாயகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுந்த மத முரண்பாடு, பிரச்சினை இப்போது வன்முறையாக வெடித்துள்ளது. இந்த வன்முறையின் பின்னால் பலமான அரூபக் கரம் உள்ளது என்பது சாதாரண கண்களுக்கும் தெரியும். வெடுக்குநாறி, செம்மலை, திருக்கோணேஸ்வரம் என பௌத்தம் நேரடியாக தமிழர்களின் பிரதேசங்களை ஆக்கிரமித்தது. ஆனால், இப்போதோ நிலைமை வேறுவிதமாக உள்ளது.

மன்னாரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெற்று - உருப்பெற்ற கிறிஸ்தவ - இந்து முரண்பாடு வன்முறையாக வெடித்தது. இதில் குளிர் காயும் விதமான நடவடிக்கையை அந்த அரூப கரம் இப்போது முன்னெடுத்து வருகின்றது. இதில் பேஸ்புக், ருவிற்றர், வைபர், வட்ஸ் அப் என சமூகவலைதளங்களின் வகிபங்கு மிகப் பெரியது.

## தீபம்

இதேபோன்றதொரு அனுபவத்தை ஏற்கனவே கண்டிக் கலவரத்தின் போது இலங்கை சந்தித்தது. அப்போது சமூகவலைதளங்கள் முடக்கப்பட்டன. ஆனால், வதந்திகள், இன, மத உணர்வுகள் குறித்து பதிவு செய்வோருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அவ்வளவும் ஏன்? அதன் பின்னர் கூட வதந்திகளை - உணர்வுகளை தூண்டும் விதத்திலான பதிவுகளை தடை செய்ய அல்லது பெயருக்குத்தன்னும் நடவடிக்கை எடுக்கிறோம் எனக் கூறும் விதமான சட்ட நடவடிக்கைகள்கூட இன்றுவரை இல்லை. அதன் விளைவுதான் இப்போது, இந்துத் தமிழன், தமிழ் கிறிஸ்தவன் என்று உணர்வுகளை தட்டியெழுப்பும் விதமான கருத்துக்கள் வலைதளங்களில் வலம் வருகின்றன. இந்த மத வன்முறையை மேலும் ஊக்குவிக்கும் விதமான பிரசுரங்களும்கூட அரூப சக்தியால் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இது தமிழர்களைப் பிரித்தாள முயற்சிக்கும் ஒரு சூழ்ச்சியாகும். ஏற்கனவே, தமிழ் பேசும் மக்களாக - சிறுபான்மை இனங்களாக ஒன்றாக இருந்த தமிழரையும் முஸ்லிம்களையும் பிரித்தது இந்த அரூப சக்தியே. அன்று பிரித்த இனத்தை இன்றுவரை சேரவிடாதும் பார்த்துக் கொள்கிறது அந்த சக்தி. இப்போது அதே சக்தி தமிழனாக சேர்ந்து இருக்கக்கூடாது என்பதற்காக இந்துக்களையும் கிறிஸ்தவர்களையும் பிரித்துவிட கங்கணம் கட்டியுள்ளது.

இந்தவேளையில் நாம் விழித்துக் கொள்ளாவிட்டால் வரலாறு நம்மினத்தை மன்னிக்காது. தமிழால் இணைவோம்...! தமிழனாக வாழ்வோம்...!!

# பாடுகள் சுமந்த....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனிவாவில் மனித உரிமை விடயம் பேசப்படுகின்ற சமயம் இலங்கைத் தமிழ் மக்களிடையே இனப் பிரச்சினை இல்லை, மதப் பிரச்சினையே உண்டென்று சொல்வதற்கு ஏதுவாக அவரே இந்த நாடகத்தை அரங்கேற்றி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு நீங்களும் உங்கள் மக்களும் பலியாகப் போகிறீர்களா? அவர் ஒரு கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்த முயற்சித்திருப்பதாகவே நம்பப்படுகிறது.

கீழ்வரும் விடயத்தை மதத் தூண்டுதலுக்காகவோ உங்களை சிறுமைப்படுத்தவோ சொல்லவில்லை.

எங்கே? திருக்கேதீஸ்வரக் கோவில் புதாதைகளை அகற்றிய போல இஸ்லாமியர்களோடோ, ஏன் அதுவும் வேண்டாம் மன்னாரின் வெட்ட வெளிகளில் திடீர் திடீரென முளைக்கும் பௌத்த விகாரைகளில் உங்கள் நிழல்பட்டும் பார்க்கலாம். அப்போது உங்கள் வீரமும், மதமும் எத்தகைய சோதனைக்கு உள்ளாக்கப்படும் என்பது தெரியும்? ஆணிவேரோடு பிடுங்கி எறியப்படுவீர்கள்? வங்காலையில் ஒரு புல் பூண்டு கூட இருக்காது.

இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இதுபோன்ற விடயங்களில் அதிகம் எதிர்ப்பைத் தெரிவிப்பதில்லை. அந்த நல்ல பண்பாட்டையே நீங்கள் உங்களுக்குச் சாதகமாக எண்ணுகிறீர்கள்.

தமது முன்னோர்களும் இந்துக்களே என்ற வரலாற்றை அவர்கள். மறந்து செயற்படுகிறார்கள். தாங்களும் இந்து மதத்திலிருந்து மதமாற்றத்திற்குள்ளானவர்கள் என்ற வரலாறு அவர்களுக்குத் தெரியவில்லை. இதுவே உண்மையும் இலங்கையின் வரலாறும் ஆகும்.

**இவ்வண்ணம்,**
**இந்துசமயி**

# ரணிலின் புதிய...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இங்கு எதுவும் உதிரிச் சம்பவங்களாகப் பார்க்கப்படாமல் கொள்கை முடிவிற்குள்ளால் பார்க்கப்பட்டு அத்தகைய கொள்கை முடிவை எடுத்தத் தலைவர்களும், அதனை நிறைவேற்றி தளபதிகளும், அதிகாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

மேலும் உருத்திரகுமாரனின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு "Genocide Can be compensated only by secession" என்பதே சரியானதாகும். இனப்படுகொலை புரிந்த ஆட்சியாளர்களுடனும், இராணுத்தினருடனும் ஒருபோதும் சேர்ந்து வாழ முடியாது. இத்தகைய அபாயகரமான ஒரு பின்னணியிற்தான் இலங்கையை இரண்டாக உடைந்துவிடாது பாதுகாக்கவும், இனப்படுகொலை புரிந்த ஆட்சியாளர்களையும், இராணுவத்தினரையும் அதிகாரிகளையும் பாதுகாப்பதற்கு ஏற்ற பாதையில் ரணில் விக்ரமசிங்க கடந்த 5 ஆண்டுகள் பயணித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அணைத்து அவர்களினது ஆதரவை சர்வதேச சமூகத்தின் முன்னும், ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையத்தின் முன்னும் உயர்த்திக் காட்டியவாறு இனப்படுகொலை குற்றத்திலிருந்து மேற்படி தலைவர்களையும், இராணுவத் தளபதிகளையும் காப்பாற்றுவதில் ரணில் முதற்கட்ட வெற்றியை ஈட்டிவிட்டார். அதேவேளை போர்க்குற்றத்தை இராணுவ சிப்பாய்கள் மட்டத்திற்கு உரியதாக சுருக்கி அவர்களை சர்வதேச கலப்பு விசாரணைக்கு உட்படுத்துவதாக ஒரு தோரணையை கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாகக் காட்டி பிரச்சினையை சர்வதேச அரங்கில் பெரிதும் தணித்தார். அதனை நோக்கி தென்னாபிரிக்கப் பாணியில் Truth and Reconciliation Commission (TRC) குழுவை அமைக்க ஒரு வரைவு திட்டம் ஒன்றைத் தயாரித்து பெப்ரவரி 12ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

தற்போது அந்த வரைவு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையத்தில் வழங்கப்பட்ட 2 ஆண்டுகால நீட்டிப்பு முடிவுறும் இத்தருணத்தில் மேலும் ஒரு புதிய நாடகத்தின் மூலம் தமது அடுத்தகட்ட நகர்வை சிங்கள ஆட்சியாளர்கள் முன்னெடுக்கின்றனர். இத்தகைய ஏமாற்று அரசியலுக்கு தமிழ்த் தலைவர்கள் யாரும் இனியும் இடங்கொடுக்கக்கூடாது.

# அச்சத்தில் உறைந்த...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளூர் தயாரிப்பான விமானத்தை ஓட்டுவது ஆபத்தானது என்று தெரிந்தும் துணிச்சலாக இறங்குபவர்.

கப்டன் வாசு (உருத்திராபதி சுதாகர் வல்வெட்டித்துறை) பொறியியல் தொழில்நுட்பத்தில் சிறந்தவர். விமானத்தைக் கட்டமைக்கும் பணியில் மிகச் சிறந்த பங்கை இவர் ஆற்றியிருந்தார். இவர்கள் இருவரும் 1987 நாவற்குழி முகாம் மீது தாக்குதல் நடத்துவதற்காக வெடிமருந்து நிரப்பிய பௌசர் வாகனத்தை தயார் செய்தபோது நிகழ்ந்த தவறுதலான வெடி விபத்தில் லெப்.கேணல் பொன்னம்மான் உள்ளிட்ட 10 பேருடன் வீரச்சாவு அடைந்தனர்.

லெப்.கேணல் அப்பையா (ஜயாத்துரை இராசையா - யாழ்ப்பாணம்) வெடிபொருட்கள், ஆயுதங்களை செய்யும் அளவு தொழில்நுட்ப அறிவு கொண்டவர். கடற்கண்ணிகள் உட்பட வித்தியாசமான முறைகளில் கண்ணிவெடிகளை அறிமுகப்படுத்தியதில் இவரின் பங்களிப்பு உண்டு. 80 களின் ஆரம்பத்திலேயே புலிகள் அமைப்பில் இணைந்துகொண்டவர். 1997 ஆம் ஆண்டு இவரைத் தமிழினம் இழந்தது.

இவர்களுடன் புலிகளின் தொழில்நுட்பவல்லுநர்கள் இணைந்து தயாரித்த விமானத்தைப் பறக்க விடுவதைப் பார்க்க கல்லுண்டாய்வெளியில் மக்கள்கூடியிருந்தனர். விமானத்தை புலிகள் இயக்க ஆரம்பித்தனர். விமானம் நகர ஆரம்பித்தது. ஆனால் பறப்பதாகத் தெரியவில்லை. மீண்டும் பறக்கும் முயற்சியை ஆரம்பித்தனர். விமானம் தரையிலிருந்து சற்று உயர்ந்து ஆனால் மீண்டும் கீழே விழுந்தது. விமானத்துக்கு எதுவும் நடக்கவில்லை. இதையடுத்து பொறியியலாளர் குழு மீண்டும் விமானத்தைப் பரிசோதித்தார்கள். நெடுநேர சோதனையின் பின்னர் மீண்டும் பறப்பு முயற்சியில் ஈடுபட்டனர்.

இம்முறை விமானம் எழுவதும் விழுவதுமாக இருந்தது. இன்னமும் வேகத்தைக் கூட்டினால் பறந்து விடலாம் என நினைத்து வேகத்தைக் கூட்டினார் விமானி. அந்த நேரத்தில் எதிர்பாரத விதமாக அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

விமானத்துக்கு என்ன நடந்தது? அதன் பின்னர் நடந்த சம்பவங்களையும் அடுத்த வாரம் பார்ப்போம்...!

# அசைவ உணவு நமக்கு நல்லதா...?

நான் சுத்தமான அசைவப் பிரியன். ஓடுவது - நடப்பது - நீந்துவது என ஏதாவது ஒன்று எனக்கு இருந்தே ஆக வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு அசைவ உணவுகளை விரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வீட்டில் சமைத்தாலும் விதவிதமான அசைவ உணவுகளை அன்றாடம் வீட்டிற்கே வரவழைத்து உண்ணும் அளவுக்கு அசைவப் பிரியர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். வீதிக்கு வீதி முளைத்துவிட்ட கடைகளில், பிரியாணி, பிறைட்றைஸ், கொத்துரொட்டி என வாசம் மூக்கைத் துளைத்தெடுக்கும்போது அந்த இடத்தைக் கடக்கும் போது மனம் மயங்கித்தான் போகிறது.


ஓரிரு வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் ஓட்டுமடப் பகுதியில் இறைச்சியில் நாய் இறைச்சி என்று பரபரப்பானது. பணிஸ்க்குள் அட்டை, கொத்துரொட்டிக்குள் கரப்பான், பிரபல பெருநிறுவனம் ஒன்றின் கோழி இறைச்சியில் புழு என்று சர்ச்சை கிளம்பி அசைவ பிரியர்களின் வயிற்றில் கறியைக் கலக்கியது.

தற்போது கடல் உணவிலும் உடலுக்கு கெடுதல் விளைவிக்கும் புறொய்லர் மீன் சர்ச்சை கிளம்பியுள்ளது. வெளியில் செய்யப்படும் அசைவ உணவுகள் தரமானவையா என்று ஆராய்ச்சி செய்வது இருக்கட்டும். ஆனால் உடல் உழைப்பு குறைந்துவிட்ட இந்தக் காலகட்டத்தில் வயிற்றின் சமிபாட்டுச் சுமையை அதிகரித்து பாதிப்பை உண்டாக்கும். அசைவ உணவுகளில் கட்டுப்பாடு தேவை என்று மருத்துவர்கள் எச்சரித்து வருகின்றனர்.

முந்தைய தலைமுறையில் அசைவ உணவு என்பது ஆட்டுக்கறி, ஊர்க்கோழி, வயல் நண்டு, குளத்து மீன், கடல் உணவுகளான மீன், இறால், நண்டு என பரவலாக இருந்தது. அசைவ நாட்டம் கொண்டவர்கள் அதிகபட்சம் வான்கோழி, காடை, கௌதாரி போன்றவற்றைச் சாப்பிட்டார்கள். அசைவம் என்றால் குழம்பும், பொரியலும், தலைக்கறியும், இரத்த வறையும், சுறாப் பிட்டும் தாண்டி அதிகபட்சம் நேர மெனக்கெட்டு செய்யப்படும் கூழ் மட்டுமே இருந்தது. ஒடியல் மா, அதிக கடலுணவு வகைகளை சுத்தமாக்குதல், அதிக மிளகு சேர்த்து காய்ச்சப்படும் களி, இருமல் காணாமல் போய்விடும் என்று பாட்டிகளும் அம்மாக்களும் மணக்கமணக்கச் சமைத்துப் போட்டார்கள்.

அசைவ உணவுகளுக்காகவே ஊர்க்கோழிகளை வீட்டில் வளர்த்தவர்களும் உண்டு. உடல் ஆரோக்கியம் குறைந்தால் கூட கோழி அடிச்சு மிளகு போட்டு குழம்பு வைச்சு சாப்பிட்டா சரியாகிடும் என்று அசைவத்தை ஆரோக்கியமாக சமைத்தார்கள். ஊர்க்கோழி முட்டைகளை பச்சையாகவே குழந்தைகளை குடிக்கவைத்தார்கள். புறொய்லர் கோழிகள் என்பதெல்லாம் மருந்துக்கும் கிடையாது.

குளங்களில் இருக்கும் மீனை உயிருடன் பிடித்து குழம்பு வைத்தார்கள். வயலில் தென்படும் நண்டுகள் உரலில் இடிக்கப்பட்டு ரசமாக்கப்பட்டன. வாரம் ஒருமுறை மட்டுமே அசைவ உணவுகளை அவசியமாக்கி வந்தார்கள். ஆண்கள் வெளியிலும் பெண்கள் வீட்டிலும் குழந்தைகள் திண்ணையிலும் என ஓடிக்கொண்டே இருந்தார்கள். அவர்களது கடின உழைப்பு, சமிபாட்டைச் சிறப்பாக வேலை செய்ய வைத்தது. குறிப்பாக ஆடுகள் பசுமையான இலைதழைகளையும், கோழிகள் சத்துமிக்க நவதானியங்களையும் உண்டு வளர்ந்து சத்துக்களை நமக்குக் கொடுத்தது.





ஓய்வு நேரத்தில், விடுமுறை நாளில் மட்டுமே அசைவம் சாப்பிட வேண்டிய நிலை இப்போது மாறிவிட்டது. சைவ உணவகங்களை விட அதிக எண்ணிக்கையில் அசைவ உணவகங்கள் இயங்குகின்றன. மேலும் வீட்டில் சமைக்கப்படும் அசைவ உணவுகளை விட தினுசு தினுசாய் கண்ணைக் கவரும் வகையில் வேகவைக்காமல் அடுப்பில் சுட்டு, எண்ணெயில் பொரித்து, நிறங்களை நிரப்பும் அசைவங்கள் ஆச்சரியப்படுத்துகின்றன. நாக்கில் எச்சில் ஊற வைக்கின்றன.

மாட்டுக் கொத்து, ஆட்டுக் கொத்து, கோழிக் கொத்து, கோழிக் கால் பொரியல், பிறைற் றைஸ், நண்டுப் பொரியல், ஆட்டு கபாப், இந்திய அசைவ உணவு வகைகளான பெப்பர் சிக்கன், முந்திரி சிக்கன் குருமா, க்ரில்டு சிக்கன், சிக்கன் பக்கோடா என எண்ணுக்கணக்கற்ற வகைகளில் அசைவ வகைகள் அஜினோமோட்டோ சுவைக்கூட்டும் இரசாயனம் சேர்த்து சுவையூட்டப்பட்டு புதிய பெயருடன் வலம் வந்து அசைவப் பிரியர்களை கவர்கின்றன. எனவே வீட்டில் செய்யப்படும் அசைவ உணவுக்காக காத்திருக்கத் தேவையில்லாமல் சுகாதாரம் பற்றிய கவலையுமில்லாமல் வெளியில் வயிறு முட்ட உண்கின்றனர்.

ஆடு, ஊர்க்கோழி மாதம் இருமுறை என்பதே நம் பட்ஜெட்டுக்குள் பற்றாக் குறைதான் என்பதால் குறைந்த விலையான புறொய்லர் கோழி தவறாமல் வாரம் ஒரு முறையாவது வீட்டில் கொதிக்கிறது. புறொய்லர் கோழியின் உபயம் நாக்குக்கு உண்டாக்கும் சுவை மட்டுமே. சிறுமிகளுக்கு புறொய்லர் கோழியை அதிகம் கொடுத்தால் ஹோர்மோன் மாற்றம் ஏற்பட்டு குழந்தைப் பருவத்திலேயே (8 முதல் 11) பூப்பெய்தும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என்கிறார்கள் மருத்துவர்கள்.

இதைத்தொடர்ந்து சில சிறுமிகளுக்கு சீரற்ற மாதவிடாய் பிரச்சினைகள், அதிக உதிரப்போக்கு கூட ஏற்படுகின்றன. ஊசி மூலம் பெரிதாக்கப்படும் புறொய்லர் கோழியால் என்ன சத்து கிடைத்து விடப்போகிறது. சத்தான ஆகாரங்கள் மனித இனத்துக்கே கேள்விக்குறியாக இருக்கும் போது, ஆடுகள் இலைதழையின்றி பேப்பர் உண்பதை கண்கூடாக பார்க்கிறோம். கடல் உணவுகள் உடலுக்கு நன்மை தரும் என்றாலும் தற்போது மீனைப் பதப்படுத்துவதற்கான முறைகளும், நாட்டு மீன்கள் குறைந்து வருவதால் புதிதாகக் கிளம்பியிருக்கும் புறொய்லர் வகை மீன்களும், கடலில் கண்ணுக்குத் தெரியாமல் கலக்கும் இரசாயனங்களை சாப்பிடும் மீன்களை உண்ணுவதாலும் உடலுக்கு கேடு மட்டுமே தருகின்றன என்பதை மறுக்க முடியாது.

வெப்பம் மிக்க இறைச்சியை மேலும் மின்சார உபயத்தால் சூடாக்கும் போது அதன் வெப்பம் உடல் நிலையை மேலும் பாதிக்கிறது. தினம் ஒரு அசைவ உணவு அல்லது அசைவத்தை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு மலச்சிக்கல், உடல் பருமன், இதய நோய், அதிக இரத்த அழுத்தம், கல்லீரல் பாதிப்பு, பித்தப்பையில் கல் (சமிபாட்டுப் பிரச்சினை), தாமதமான செரிமானம் என உடலில் உள்ள பெரும் பாலான பாதிப்புகள் விரைவாக ஏற்படுகிறது.

கடும் உடல் உழைப்பால் எளிதாக சாத்தியமாகும் சமிபாடு, இன்றைக்கு எகிடுதகிடாகிப் போனது. வீட்டின் தலைவாசலை தாண்டியதும் மோட்டார் சைக்கிள், காரின் உபயோகமில்லாமல் கால்கள் ஒத்துழைக்காதவர்களுக்கு அதிலும் அசைவ பிரியர்களுக்கு எப்படி சாத்தியமாகும். கடின உழைப்பாளிகளுக்கு அசைவ உணவு ஒன்றும் செய்யாது என்றாலும் அதிலும் அளவு தேவை.

தற்போது வரும் சமையல் எண்ணெயில் உடலுக்கு ஒவ்வாத கலப்பும் சிறிதளவு இணைந்துள்ளது எனும் போது எண்ணெயில் பொறித்த அசைவ உணவுகள், அரை அவியல் இறைச்சி, உடல் ஆரோக்கியத்தை நிச்சயம் சீர் குலைக்கும் என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. போதாக்குறைக்கு நிறமூட்டியும், சுவைக்குச் சேர்க்கும் செயற்கையூட்டிகளும் இணைந்து உடலுக்குள் சின்னச் சின்னப் பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன.

அசைவ உணவுகளை முற்றிலும் தவிர்த்தால் நல்லது. (குறிப்பாக புறொய்லர் சிக்கன்) என்றாலும் அசைவப் பிரியர்கள் எச்சரிக்கையோடு தகுந்த இடைவெளியில் தரமான முறையில் தயாரிக்கப்பட்ட உணவை வீட்டிலேயே சமைத்து சாப்பிடுவது நல்லது என்பதே மருத்துவர்களின் ஆலோசனை.

அசைவம் வேண்டாம்னு சொல்லல. பார்த்து சாப்பிடங்கன்னுதான் சொல்கிறார்கள் மருத்துவர்கள்...



# பாடுகள் சுமந்த பெருமகனை தொழுபவர்களின் கைகள் வன்மங்கள் சுமக்கலாமா...?

## – குரு முதல்வருக்கு ஒரு பகிரங்கக் கடிதம் –

**அருட்பணி அ.விக்ரர் சூசை,**
**மன்னார் மாவட்டக் குரு முதல்வர்.**
**வணக்கம்.**

'கத்தோலிக்க குருவானவரின் வழிகாட்டலில் கத்தோலிக்க மக்களால் சேதமாக்கப்பட்ட நிகழ்வு பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகள்" என்று திருக்கேதீஸ்வர ஆலய சூழலில் கடந்த 03 ஆம் திகதி நடந்த சம்பவங்கள் குறித்து யாழ்ப்பாண மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி. யோ. செபரட்ணம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட விடயம் பற்றி நன்கு அறிந்திருப்பீர்கள்.

அதில், குரு முதல்வர் அருட்தந்தை பி.யோ. செபரட்ணம், "எமது இந்து மத சகோதரர்களின் மிகவும் பழமைவாய்ந்த, சரித்திரப் பிரசித்தி பெற்ற திருத்தலமாக விளங்கும் திருக்கேதீஸ்வரம் ஆலய வீதியில் அமைக்கப்பட்டிருந்த வளைவு ஒரு கத்தோலிக்கக் குருவின் வழிகாட்டலில் கத்தோலிக்க மக்களால் சேதமாக்கப்பட்ட நிகழ்வு பற்றி ஊடகங்களில் வெளியான செய்திகள் எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளன. கத்தோலிக்கர் என்ற வகையில் நாம் வெட்கித் தலைகுனிவதோடு எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம்." என ஒரு மத குருவாக மட்டுமல்ல ஒரு சத்தியத்தின் வடிவமாகவும், தனக்கிருக்கும் சமூகப் பொறுப்பு என்ன என்பதை அறிந்தும், புரிந்தும் இவ்வாறு விளக்கமளித்திருப்பது அவர் மேல் அட்டுமல்ல கிறிஸ்தவத்தின் மேலிருக்கும் நம்பிக்கையையும், மரியாதையையும் இன்னும் பன்மடங்காக்குகிறது.

அத்துடன் மாத்திரம் நின்றுவிடாது," இயேசுவின் வாழ்வாலும் போதனையாலும் நாம் பெற்றுக்கொண்ட அன்பு, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, தியாகம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், குழும வாழ்வு ஆகிய எமது கத்தோலிக்க மதத்தின் அடையாளங்களை நாம் இழந்துவிடாமல் பாதுகாப்போம். இப்படியான நிகழ்வுகளால் எமது கத்தோலிக்க மதத்தின் பரிசுத்தத்தனத்துக்கு ஏற்படும் களங்கங்களுக்காக நாம் மனம் வருந்திப் பிராயச்சித்தம் செய்யவேண்டும்." என்றும் தமது மதம் சார்ந்த நல்லுள்ளங்களையும், சிந்தனையாளர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதம் சார்ந்த நம்பிக்கையை வளர்க்கவும் அதனூடாக மக்கள் தெளிவடைந்து தமது வாழ்க்கையை அன்பும், பண்பும், அமைதியு ம் நிறைந்ததாக மாற்றிக் கொள்ளவும் பயன்பட வேண்டுமே ஒழிய மதம் மத வெறியைத் தூ ண்டுகின்ற சிந்தனையையும், கீழ்ப்போக்கான எண்ணங்களை விதைப்பதாகவும், அமைதியற்ற சமூகத்தை வளர்க்கவும் அது துணைபோவதாக ஒரு போதும் இருக்கக் கூடாது என்பதே அனைவரினதும் அவா.

கடந்த வருடம் நடைபெற்ற கண்டிக் கலவரத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதில் இஸ்லாமியருக்குச் சொந்தமான பள்ளிவாசலை தகர்க்கவும், சேதமாக்கவும் முன்னின்று செயற்பட்டவர்களாக பௌத்தத்தை சேர்ந்த – முக்கியமாக ஒரு பெண் அந்தப் பள்ளிவாசலை அடித்து நொறுக்கிச் சின்னாபின்னப்படுத்துவது சம்பந்தமான படங்கள் இணையத்தில் உலவின. அந்தப் பெண்ணே பௌத்த ஆண்களின் துணையோடு பள்ளிவாசலை முற்று முழுதாக முன்னின்று நாசப்படுத்தியவர்.

இதேபோல திருக்கேதீஸ்வர ஆலயத்துக்குச் சொந்தமான வளைவையும் சேதமாக்கி – அழிப்பதற்
கும் காரணமாக ஒரு கத்தோலிக்க குருவின் வழிகாட்டலில் முக்கியமாக மஞ்சள் நிற ஆடை அணிந்த ஒரு பெண்ணே அந்த அழிப்பு நிகழ்வை முன்னின்று நடத்தியிருக்கிறார் என்பது பதிவேற்றம் செய்யப்பட்ட நிழற்படங்களில் இருந்து தெரியவருகிறது.

எனவே அந்த சம்பவத்துக்கும் இந்த சம்பவத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன? இரண்டும் ஒன்றே. மிலேச்சத்தனமான தாக்குதல்கள். இரண்டிலும் வெறித்தனம் மிக்கதான சூழ்நிலையின் உச்சத்திற்கு மக்கள் சென்றிருப்பதையே காட்டுகிறது. அவர்களுள் இத்தகைய வெறித்தனம் முளைவிடக் காரணமானவர்கள் யார்? அவர்களை முன்னின்று நடத்த வேண்டிய மதகுருமார்களே, அவர்களுக்கு உண்மையின் தத்துவத்தைப் போதிக்க வேண்டியவர்களே முன்நின்று இது போன்ற வன்செயல்களைத் தூண்டுபவர்களாகவும், வழி நடத்துபவர்களாக இருப்பதுவும் வேதனைக்குரிய விடயம். இது கண்டிக்கத்தக்கது. இது போன்ற துர்சம்பவங்களை இனியும் கத்தோலிக்க பீடம் அனுமதிக்கப்போகிறதா?

மகாபாரதத்தில் ஓரிடத்தில் "கர்ணனுக்குத் துரியோதனன் தனது உறவுகளின் மீது வெறுப்பு வரும்படியாக விஷத்தை ஊட்டி வளர்த்தான்" என்று சொல்லப்படுகிறது. அதேபோல வங்காலையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அங்குள்ள பங்குத் தந்தையால் பிற மதங்களின் மீதான தவறான கருத்தை ஊட்டி வளர்த்ததன் விளவு, பல வருடங்களாக திருக்கேதீஸ்வர ஆலயம் செல்லும் வழியில் நிறுவப்பட்ட பதாதைகளை மிலேச்சத்தனத்தோடு வளைத்து –முறித்து , சின்னாபின்னப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தக் காட்சிகள் தொடர்பில் வெளியான படங்கள், வீடியோக்களில் மனிதர்கள் மனதர்களாக இல்லை, அவர்கள் மிருகங்களாக மாறியிருக்கிறார்கள் எனறே தோன்றும். எனவே இதை சாதாரண விடயமாகப் பார்க்காது அந்தச் சம்பவத்தில் பங்கேற்ற அனைவரும் (பங்குத் தந்தை உட்பட) உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களை மதம் நலன் சார்ந்து சிந்திக்க விடாது, தமது தவறான போதனைகள் மூலம் உள நோயாளர்களாகப் பங்குத் தந்தை மாற்றியிருக்கிறார் என்றே கூறலாம். இது அந்தப் பங்குத் தந்தையின் தவறே அன்றி மக்கள் தவறல்ல.


வழமையாக, கிறிஸ்தவத்திலிருந்து தோன்றிய கிளை மதங்கள்தான் இப்படியான ஈனச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். ஊழியம் என்ற பெயரில் இந்துக்கள் வீடுகளுக்குள் அத்துமீறிச் சென்று அவர்களுக்கு பேதானைகளை மேற்கொள்ளுவதும் அவர்களே. மதத்தை மாற்றிக் கொள்ளுமாறு வற்புறுத்துபவர்களும் அவர்களே. அவர்கள் இது போன்ற செயல்களில் ஈடுபட்டால் நாம் ஆச்சரியப்படுவதில் அர்த்தமில்லை. ஆனால் ஒரு கத்தோலிக்க திருச்சபையினர், மக்களிடையே அன்பை விதைப்பவர்கள், பண்பைப் பெருக்குபவர்கள், மனித நேயத்துற்கு முன்னுதாரணமானவர்கள், உண்மைக் கிறிஸ்தவர்கள் என்று போற்றப்படுபவர்கள், தம்மைப் போன்று பிற மதங்களையும் மதிப்பவர்கள் என்று கருதப்படுபவர்கள், இவர்களா? இப்படி நடந்து கொள்வது?

வங்காலை மக்கள் வங்கோலைகளாக மாறியதன் பின்னணி என்ன? இதற்கு முன்னரும் இது போன்று மன்னாரில் பல விடயங்கள் நடந்தேறின. எல்லாம் இந்து மதத்தைச் சார்ந்து மக்களின் மீது ஏவப்பட்ட அராஜக நடவடிக்கைகள். முடிவாக ஒன்றை மட்டும் உங்களிடம் கேட்க விரும்புகிறேன். இத்தனை பெரிய சரித்திரத்தைக் கொண்ட கிறிஸ்தவ மதத்தை, வரலாற்றைக் கொண்ட கிறிஸ்தவ சாம்ராஜ்ஜியத்தை இது போன்ற ஈனத்தனங்களாலா காப்பாற்றிக் கொள்ள வேண்டும்? தக்கவைத்துக் கொள்ள வேண்டும்? கடவுள் என்பதன் அர்த்தம் என்ன? ஆண்டவன் என்பதன் உட்பொருள் என்ன? அவருக்கு மதத்தைக் காக்க ஆற்றல் இல்லையா? அல்லது அத்தைகைய அருள் அவரிடம் இல்லையா? இது போன்ற பிற மதச் சின்னங்களை அழிப்பதன் மூலமா உங்கள் மத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறீர்கள்?

இதை அந்த மக்களின் தவறாக நாம் ஒரு போதும் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. உங்கள் மத நிறுவனத்தின் தவறான அணுகுமுறையும், பிழையான போதனைகளுமே அவர்களை இவ்வழியே இழுத்துச் சென்றிருக்கிறது, அவர்களை ஈனத்தை நோக்கிச் சிந்திக்க வைத்திருக்கிறது? அங்கு கடமையிலுள்ள பங்குத் தந்தை அந்த மக்களுக்கு உண்மையைப் போதிக்க மறுத்து விட்டார் போலத் தெரிகின்றது.

மன்னாரில் அந்தப் பங்குத் தந்தையின் நடவடிக் கைகளுக்குப் பின்னால் ஒரு தமிழ் கிறிஸ்தவ அரசியல்வாதி ஒருவரும் இருப்பதாக நம்பப்படு கிறது. அவரே இது போன்ற நடவடிக்கைகளுக்குத் தூபமிடுவதாக நாம் நம்புகிறோம்.

(05ஆம் பக்கம் பார்க்க)



# சீனாவின் விண்வெளி சூரிய சக்தி நிலையம்

# ஆற்றலுக்கா? ஆயுதத்துக்கா?

இன்று நீங்கள் உலகின் ஏதோ ஒரு பகுதிக்குச் சென்று கால் வைத்தாலும் அது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ யாரோ ஒருவரின் கட்டுப்பாட்டின் கீழ்தான் இருக்கும். மனிதர்கள் பூமியில் இருக்கும் பெரும்பாலான நிலப்பகுதிகளை அவர்களுக்கு ஏற்ற வகையில் எல்லைகளால் பிரித்து வைத்திருக்கிறார்கள். நிலம் என்ற ஒரு விடயம்தான் வரலாற்றில் நிகழ்ந்த பல போர்களுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது. இப்படி நிலத்தைக் கூறுபோட்டு வைத்திருக்கும் மனிதர்கள் இன்னும் மிச்சம் வைத்திருக்கும் இடம் விண்வெளி மட்டும்தான். பூமியைச் சுற்றிலும் பரந்து விரிந்து கிடக்கும் அங்கே எல்லைகளைப் பிரிப்பது அவ்வளவு சுலபமில்லை என்ற ஒரே காரணத்துக்காக அதை விட்டு வைத்திருக்கிறார்கள்.

உலக அரங்கில் அடுத்த வல்லரசாக யார் இருக்கப் போகிறார்கள் என்பது வரும் வருடங்களில் விண்வெளியில் யார் ஆதிக்கம் செலுத்தப்போகிறார்கள் என்பதை வைத்துதான் இருக்கப்போகிறது. விண்வெளியில் யார் ஆதிக்கம் அதிகம் என்பதைக் காட்டுவதற்காக அமெரிக்கா, ரஷ்யாவுக்கு இடையே கடந்த நூற்றாண்டு தொடங்கி நடந்து வரும் சம்பவங்களைப் பற்றி அனைவருக்குமே தெரிந்திருக்கும். சில காலம் கழித்து இந்தப் போட்டியில் வளர்ந்து வரும் நாடுகளான சீனா, இந்தியா போன்ற நாடுகளும் இணைந்துள்ளன. இப்படிப்பட்ட சமயத்தில் விண்வெ ளியில் சூரியசக்தி நிலையம் ஒன்றைச் சீனா அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான விவாதங்கள் அதிகரித்து வரும் நிலையில் சீனாவும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொடர் பான விடயங்களில் முதலீடு செய்யஆர்வம் காட்டுகிறது. அதன்படி 2.5 ரில்லியன் யுவான்களை, புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களில் அரசு முதலீடு செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரத்தில் தொடர்ந்து முன்னேறி வரும் சீனா தற்போது இந்த முடிவை எடுத்திருப்பது ஆச்சரியப்படும் விடயம் இல்லை. மறுபுறம் நாட்டின் மக்கள் தொகையும் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் தேவைப் படும் ஆற்றல் தேவைகளைச் சமாளிக்கத்தான் விண்வெளியில் சூரிய சக்தி நிலையம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

விண்வெளியில் அமையவுள்ள இந்த நிலையம் 2050 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டுக்கு வரலாம். இதற்கான ஆரம்பப் பணிகள் இன்னும் சில வருடங்களில் தொடங்கப்படலாம் எனவும், 2021 - 2025 ஆகிய இடைப்பட்ட வருடங்களில் வளிமண்டலத்தில் ஸ்ட்ராடோபியர் அடுக்கில் சிறிய அளவிலான சூரிய சக்தி நிலையத்தை நிறுவ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளார்கள்.

அது வெற்றியடையும் பட்சத்தில் திட்டம் அடுத்த கட்டத்தை நோக்கி நகரும். விண்வெளியில் இதை அமைக்க ரோபோக்கள் மற்றும் 3D பிரின்டிங் தொழில்நுட்பத்தை சீனா பயன்படுத்தும் என்றும் இவற்றின் எடை ஆயிரம் தொன்கள் கொண்டதாக இருக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எப்போதும் போலவே இப்படி ஒரு திட்டத்தை முதலில் முன் வைத்தது அமெரிக்காதான். நாசா பல ஆண்டுகளாகவே விண்வெளியில் சூரிய சக்தி நிலையத்தை நிறுவும் திட்டத்தைக் கையில் வைத்து சுற்றிக்கொண்டிருக்கிறது. ஜப்பானும் இதே யோசனையில்தான் இருக்கிறது. ஆனால், இதில் இருக்கும் ஒரு சிக்கலால்தான் இந்தத் திட்டம் சரிவர முன்னேற்றமடையாமல் இருக்கிறது. பொருள்களையும் மனிதர்களையும் அனுப்பி விண்வெளியில் சோலார் பவர் பிளான்ட் ஒன்றை அமைத்துவிடலாம். அதைப் பல நாடுகளால் எளிதாகச் செய்து விட முடியும். சிக்கல் என்னவென்றால் விண்வெளியில் கிடைக்கும் ஆற்றலை எப்படி பூமிக்குக் கொண்டு வருவது என்பதுதான். அதற்கான தீர்வு மட்டும் கிடைத்துவிட்டால் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். ஆனால், இந்தச் சிக்கலைத் தீர்க்க ஒரு திட்டமும் கைவசம் இருப்பதாகச் சீனா தெரிவித்துள்ளது. அதன்படி விண்வெளியில் அமைக்கப்படவிருக்கும் அந்த நிலையம் சூரியனிலிருந்து கிடைக்கும் ஆற்றலை உள்வாங்கும் வகையில் செயற்படும்.

அதன் பின்னர், அந்த ஆற்றல் நுண்ணலைகளாகவோ அல்லது சக்தி வாய்ந்த லேசர் கற்றைகளாகவோ மாற்றப்பட்டு பூமிக்கு அனுப்பி வைக்கப்படும். அதைப் பெறுவதற்காகப் பூமியில் ஓர் அமைப்பும் நிறுவப்பட்டிருக்கும் அதன் மூலமாக மின்சாரமாக மாற்றப்பட்டு பயன்பாட்டுக்கு அனுப்பி வைக்கப்படும். இப்படித் தொடர்ந்து விண்வெளியிலிருந்து ஓரிடத்தில் குவிக்கப்படும் ஆற்றலால் மனிதர்களுக்கோ, சுற்றுச்சூழலுக்கோ ஏதேனும் பாதிப்பு இருக்குமா என்பதைப் பற்றியும் ஆராய வேண்டியிருக்கும் என்றும் சீன ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்தத் திட்டம் சீனா சொல்வதைப்போலவே யாருக்கும் பாதிப்பின்றி செயல்பாட்டுக்கு வந்துவிட்டால் நல்லதுதான். ஆனால், இந்த விடயத்தில் பலருக்கும் ஒரு சந்தேகம் எழுந்திருக்கிறது. சீனா இதை உண்மையாகவே ஆற்றல் தேவைக்காகத்தான் அமைக்கப்போகிறதா அல்லது ஆயுதத்துக்காகவா ?

தரை, கடல், ஆகாயம் எனப் பல்வேறு களங்களில் பயன்படுத்தப்படும் போர்க் கருவிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் மேம்பாடு அடைந்து கொண்டே இருக்கின்றன. இரண்டாம் உலகப்போரின்போது போர் விமானங்களின் பங்களிப்பு என்பது மிக முக்கியமானதாக இருந்தது. அதன் பின்னர் சில காலத்திலேயே அதைவிடவும் திறன்வாய்ந்த ஆயுதம் தேவைப்பட்டது. எனவே, கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை உருவாக்குவதில் உலக நாடுகள் ஆர்வம் காட்டி வந்தன. நெடுந்தொலைவு செல்லும் இவற்றை சில நிமிடங்களில் தாக்குதலுக்குத் தயார் செய்துவிட முடியும். அது மட்டுமன்றி பல தொன் எடை கொண்ட அணுகுண்டுகளைக்கூட இவை சுமந்து செல்லும் திறன் படைத்தவை. இருக்கும் இடத்திலிருந்தே சில நிமிடங்களில் எதிரியின் நாட்டைச் சேதப்படுத்திவிட இவற்றால் முடியும்.

இப்போது அமெரிக்கா, ரஷ்யாவுக்கு இணையான ஏவுகணைகள் சீனாவின் கைவசம் இருக்கின்றன. இதன் அடுத்தகட்டம்தான் விண்வெளியில் ஆயுதக் கட்டமைப்பை உருவாக்குவது. விண்வெளியில் அப்படி ஒரு கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமாக எதிரியின் நாட்டை எளிதாகக் கண்காணிக்க முடிவது மட்டுமன்றி எந்த இடமாக இருந்தாலும் உடனே குறிவைத்துத் தாக்கிவிடலாம்.


குறிப்பாக சக்தி வாய்ந்த லேசர் ஆயுதங்களை விண்வெளியில் நிறுவுவதற்கான ஆராய்ச்சிகளில் சில உலக நாடுகள் ஈடுபட்டுள்ளன. லேசர் என்பதால் எளிதாக உருவாக்கவும் முடியும், அதற்கான ஆற்றலை விண்வெளியில் எளிதாகவும் பெற்றுக்கொள்ளலாம். இந்தச் சமயத்தில் கடந்த மாதம் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகனின் பாதுகாப்புப் புலனாய்வு அமைப்பு விண்வெளியில் ஆபத்தான ஆயுதங்களின் பயன்பாட்டைப் பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் ரஷ்யா மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகளும் சக்தி வாய்ந்த ஆயுதங்கள் மூலமாக விண்வெளியில் ஆயுதக் கட்டமைப்பை உருவாக்க முயற்சி செய்யக்கூடும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைக் கண்டித்த சீனா, 'விண்வெளி என்பது அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது. அதன் மீது எந்த ஒரு தனி நாடும் உரிமை கோர முடியாது. குறிப்பாக, அது ஒன்றும் அமெரிக்காவின் தனிப்பட்ட சொத்து கிடையாது" என்று கடுமையான முறையில் எதிர்வினையாற்றியிருந்தது. சீனா லேசர் ஆயுதங்களின் மூலமாக அமெரிக்காவின் செயற்கைக்கோள்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒருவேளை சீனாவின் விண்வெளி சூரிய சக்தி நிலையமும் ஓர் ஆயுதக் கட்டமைப்பாக இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. மேலும், அதில் பயன்படுத்தப்படவிருக்கும் லேசர் தொழில்நுட்பம் அந்தச் சந்தேகத்தை அதிகரிக்கிறது. சொன்னதுபோலவே விண்வெளி அமைப்பை மின்சாரம் தயாரிக்கப் பயன்படுத்தும் சீனா, அதை ஆயுதமாகவும் பயன்படுத்தலாம் அல்லவா? அதேநேரம் விண்வெளியை அமைதியாகவே பயன்படுத்த விரும்புகிறோம் என்றும் பென்டகனின் அறிக்கை விவகாரத்தில் சீனா தெரிவித்திருந்தது. எப்படிப் பார்த்தாலும் விண்வெளியில் இன்னும் சில காலத்தில் எல்லைகள் பிரிக்கப்படலாம். அப்போது எல்லைகளைப் பாதுகாப்பதற்காக ஆயுதங்கள்கூட நிறுவப்படக்கூடும். எதிர்காலத்தில் சீனாகூட வெளிப்படையாகவே இதைப் பற்றி அறிவிக்கக்கூடும்.

# தொற்று நோய்களின் உலகம்! 11


வி.ராமசுப்பிரமணியன்,
தொற்றுநோய் சிறப்பு மருத்துவர்.



கிருமிகள், அவற்றின் வளர்ச்சிகள், தொற்றுநோய் மருத்துவத் துறையின் வளர்ச்சிக்குப் பின்புலமாக இருந்த மருத்துவ மேதைகள் குறித்தெல்லாம் பார்த்தோம். இனி, தொற்றுநோய்களின் உலகத்திற்குள் நுழைவோம். தொற்றுநோய்களில், உலகை மிரட்டும் கொடூர நோய் என்றால் அது காச நோய்தான். 'மைக்கோபக்ரீரியம் ட்யூபர்குளோசிஸ்' (Mycobacterium Tuberculosis) என்ற நுண் கிருமியால் வரக்கூடிய இந்த நோயை ரீ.பி (TB) என்று அழைக்கிறோம்.

காசநோய் மிகப் பழைமையான நோய். 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்திய மம்மிகளின் தலை மற்றும் முதுகுத்தண்டு வடத்தில் காசநோய் கிருமிகள் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. ஆக, இது ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனித குலத்துக்குச் சவாலாக இருந்து வருகிறது. 1700- 1900-க்கு இடைப்பட்ட 200 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 10 கோடி பேர் காசநோயால் இறந்திருக்கிறார்கள்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக் கைப்படி, இந்தியாவில், 2016 இல் மட்டும் 28 லட்சம் பேர் காச நோயால் இறந்திருக்கிறார்கள். உலகத்தில், அதிக காச நோயாளிகளைக் கொண்ட நாடு இந்தியாதான். இங்கு, ஓர் ஆண்டுக்கு 63 லட்சம் புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படு கிறார்கள். அதிக அளவில் மக்களின் உயிர் பறிக்கும் காரணங்களில் ஒன்பதாவது இடத்தில் இருக்கிறது காசநோய். உயிரைப் பறிக்கும் தொற்றுநோய்களின் பட்டியலில் முதலிடத்தில் இருப்பதும் காசநோய்தான்.



1980-களில் காசநோயின் தாக்கம் திடீரென அதிகரிக்கத் தொடங்கியது. காரணம், ஹெச்ஐவி நோய் அதிவேகத்தில் பரவத் தொடங்கியது அப்போதுதான். ஹெச்.ஐ.வியும் காசநோயும் உடன்பிறந்த சகோதரர்கள் மாதிரி. யாருக்கு ஹெச்.ஐ.வி இருக்கிறதோ, அவருக்குக் காசநோய் வர வாய்ப்பு அதிகம். இப்போது ஹெச்.ஐ.வி ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டது. அதனால் காச்நோயும் கொஞ்சம் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கிறது.

ஆனால், காசநோய் கிருமிகள், மருந்துகளை மீறி வளரும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. இந்த நிலைக்குப் பெயர், 'மல்டி டிரக் ரெசிஸ்டென்ட் ரீ.பி'. (Multi-Drug-Resistant Tuberculosis). சுருக்கமாக எம்டிஆர்-ரீ.பி. (MDR-TB). ரிஃபாம்பிசின் (Rifampicin), ஐ.என்.ஹெச் (I.N.H. Tablet) போன்ற பிரதான மருந்துகளுக்குக் கட்டுப்படாத காசநோய்க்குப் பெயர்தான் எம்டிஆர்-ரீ.பி. தமிழில் இதை, 'பன்மடங்கு எதிர்ப்புக் காசநோய்' என்று சொல்வோம்.

இன்று உலகை அச்சுறுத்தும் பெரிய சுகாதாரப் பிரச்சினை, இதுதான். எம்டிஆர்-ரீ.பி.யைக் கண்டுபிடிக்க வழியிருக்கிறது. ஆனால், எல்லா இடங்களிலும் அதற்கான வாய்ப்பில்லை. பாதிக்கப்பட்டவரிடம் இருந்து கிருமியை எடுத்து, வளர்த்துதான் கண்டுபிடிக்க முடியும். சில இடங்களில்தான் சோதனை மையங்கள் இருக்கின்றன. அதனால், நோயாளி, நோயைக் கண்டுபிடித்துச் சிகிச்சையைத் தொடங்குவதற்கு முன்பாகவே நிறைய பேருக்கு காசநோயைப் பரப்பி விடு கிறார்.

காசநோய் மருத்துவத்தில் மிக முக்கிய மான தருணம் என்பது மார்ச், 24-1882. அன்றைய தினம் தான் ரொபேர்ட் ஹெர்மான் கொக், (Robert Hermann Koch) காசநோயைப் பற்றி ஓர் ஆய்வு முடிவை வெளியிட்டார். காசநோயை உருவாக்கும் கிருமியைக் கண்டுபிடித்து, அதை ஓர் எலிக்குச் செலுத்தி, அந்த எலி காசநோயால் பாதிக்கப்பட்டதை மெய்ப்பித்துக் காட்டினார். இதை 'கொக் பாஸ்ட்லேட்ஸ்' (Koch's Postulates) என்று மருத்துவத் துறையில் சொல்வார்கள். அதற்கு முன்புவரை, காசநோய் எதனால் பரவுகிறது என்றே யாருக்கும் தெரியாது. மருத்துவத் துறையில் நிகழ்ந்த மிக முக்கியமான கண்டுபிடிப்பு இது. இதற்காகவே 1905 இல் அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இரண்டு வாரங்களுக்கு மேல் சளியுடன் கூடிய இருமல், மாலை நேரத்தில் காய்ச்சல் வருவது, பசியின்மை, சளியுடன் இரத்தம் கலந்து வருவது, உடல் எடை குறைவது போன்றவை காசநோயின் அறிகுறிகள். 'காசநோய் என்றால், அது நுரையீரலில் தான் வரும்' என்று பெரும்பாலானோர் கருதுகிறார்கள். ஆனால், முடி, நகம்... இந்த இரண்டு உறுப்புகளைத் தவிர எங்கு வேண்டுமானாலும் காசநோய் வரும்.

அதுபற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

- களைவோம்



# தம்பியைக் காக்க தன்னுயிர் ஈந்த அக்கா!



சீனாவில் 12 வயது சிறுமி தன் தம்பியைத் தீ விபத்திலிருந்து காப்பாற்றுவதற்காகத் தன் உயிரையே கொடுத்த சம்பவம் பெரும் நெகிழ்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் சென் ஸிமோ என்னும் 12 வயது சிறுமி தன் குடும்பத்துடன் வசித்து வந்தார். பெப்ரவரி 22 ஆம் நாள் அதிகாலை தன் 5 வயது தம்பியுடன் தூங்கிக் கொண் டிருந்தார். பக்கத்து அறையில் தாய், தந்தையர் தூங்கிக் கொண்டிருந்தனர். திடீரென ஏதோ எரியும் வாசனை வந் ததும் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டார் சென் ஸிமோ.

அறை தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது. தீ மெத் தையிலும் பரவியிருந்தது. சென் ஸிமோ சற்றும் யோசிக் காமல் தன் போர்வையை தன் தம்பிமீது போர்த்தி விட்டு, வேறு போர்வையை கொண்டு தீயை அணைக்க முயற்சி செய்தார். அதற்குள் தீ விபத்து ஏற்பட்டதை உணர்ந்த அவ ரின் பெற்றோர்கள் வந்துவிட்டனர். சென் ஸிமோ மயங்கி விழுந்தார்.

இரண்டு போர்வைக்குள் குறைவான தீக்காயங்களுடன் மயங்கிக் கிடந்தார். ஸிமோ உடல் முழுவதும் தீக்காயம். நடந்ததை ஸிமோவின் பெற்றோர் புரிந்துகொண்டனர். இரண்டு குழந்தைகளையும் மருத்துவமனைக்கு அழைத் துச் சென்றனர். ஸிமோவுக்கு கடும் தீக்காயம். ஸிமோவின் தம்பிக்கு குறைந்தளவு தீக்காயமே. ஐந்து நாள் சிகிச்சை கொடுக்கப்பட்டும் பலனின்றி ஸிமோ உயிரிழந்தார். ஸிமோ வின் குட்டித் தம்பி பிழைத்துக்கொண்டார்.

ஊடகங்களுக்குப் பேட்டி அளித்த ஸிமோவின் தந்தை, 'ஒரு வேளை ஸிமோ தன் கனமான போர்வையை தானே போர்த்திக்கொண்டு இருந்திருந்தால் ஓரளவுக்கு காயங்களுடன் பிழைத்திருப்பாள். ஆனால் அவள் தன் தம்பியைத் தீ நெருங்கவிடாமல் இருக்கவே போராடிக் கொண்டிருந்திருக்கிறார்.


எங்களுக்கு இரண்டாவது மகன் பிறந்ததுமே ஸிமோவைப் பற்றி நாங்கள் அதிகம் கவலைப்பட்டதில்லை. அவளை அவளே பார்த்துக்கொள்வாள். எங்கள் மகனை பார்த்துக் கொள்ளவே அதிக நேரம் செலவிட்டோம். இன்று ஸிமோ எங்களோடு இல்லை. ஆனால், அவள் இல்லாத ஒவ்வொரு நொடியும் நரகமாகச் சுடுகிறது" என்று கதறி அழுதார்.

ஸிமோ உன் ஆத்மா சாந்தியடையட்டும்...!



## சொல்லேர் உழவு - 21

கவிஞர் மகுடேசுவரன்



# வெசை என்பது என்ன சொல்?

தா நாம் பேச்சளவில் சில நூறு சொற்களைத்தாம் பயன்படுத்துகிறோம் என்பது ஒரு கணக்கு. ஒருவர் தம் வாழ்நாளில் சில ஆயிரம் சொற்களை அறிந்திருந்தால் போதும், அம்மொழிப் புலத்தில் எவ்வோர் இடையூறுமில்லாமல் வாழ்ந்து முடித்துவிடலாம். ஒவ்வொரு துறையிலும் இயங்கக்கூடியவர்கள் அத்துறை சார்ந்த சில நூறு சொற்களைக் கூடுதலாக அறிந்திருப்பார்கள். அவ் எண்ணிக்கைக்கு மேலான சொற்கள் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவைப்படவில்லை. அவற்றைக் கற்றுத் தேரும் முனைப்பும் வாய்ப்பும் அவர்கட்கு இல்லை.

பாமரர்கள் பயன்படுத்தும் எளிய சொற்கள்தாமே, அவற்றில் என்ன மொழிநுட்பம் இருந்துவிடப் போகிறது? பொதுப் பயன்பாட்டில் உள்ளவாறு ஒரு சொல்லினைப் பேச்சில் வழங்குவார்கள் என்று நாம் எளிமையாகக் கருதிவிடுகிறோம். ஆனால், உண்மை அஃதன்று. எளியவர்கள் பயன்படுத்தும் மிக எளிய சொல் ஒவ்வொன்றிலும் தொன்மையான மொழி இலக்கணக் கூறு முறையாகப் பின்பற்றப்பட்டிருக்கிறது.

இச்செய்தி எவர்க்கும் வியப்பூட்டுவதாகும். அத்தன்மையால்தான் தமிழ் மொழியானது பன்னூற்றாண்டுகளாக வேற்றாட்சி மொழியாளர்கள் ஆண்ட போதிலும் அழியாமல் நலியாமல் உயிர்ப்போடு வாழ்ந்து வருகிறது. பேச்சு வழக்கில் அருஞ்சொற்களும் இலக்கணக்கூறுகளும் தொடர்ந்து வாழ்கின்றன. அவை என்றென்றும் அழியாது நிலைத்தன.

அத்தன்மைக்கு நான் அடிக்கடி கூறும் எடுத்துக்காட்டு ‘அதற்கு, இதற்கு, எதற்கு’ என்னும் சொற்களாகும். அது + அன் + கு என்பதுதான் அதற்கு என்ற சொல்லின் உருபுப் பகுப்பாகும். அது என்னும் சுட்டு முற்றியலுகரத் தன்மையோடு இருப்பதனால் அச்சுட்டோடு ஓர் வேற்றுமை உருபு சேர்வதற்கு அன் என்ற சாரியை இடையில் தோன்றுகிறது.

அதற்கு, இதற்கு, எதற்கு என்பனவற்றைத்தாம் நாம் இன்னும் எழுத்து வழக்கில் பயன்படுத்துகிறோம். அதற்கு, இதற்கு, எதற்கு என்பனவற்றைப் பேச்சு வழக்கில் ‘அதுக்கு, இதுக்கு, எதுக்கு’ என்று கொச்சையாகச் சொல்கிறோம். பேச்சில் ற் என்னும் வல்லின மெய்க்குக் கொச்சைத்தன்மை ஏறுவதால் அதுக்கு என்று சொல்லிவிடுகிறோம். அது + அன் + கு என்பதனை அதனுக்கு என்று நாம் எழுதுவதில்லை. சிலர் அவ்வாறு எழுதினால் அது பிழையாகும். நாமனைவரும் அதற்கு என்றே எழுதுகிறோம், அதுக்கு என்றே வாயால் வழங்குகிறோம்.

இங்கே ன்+கு சேர்ந்தால் ற்கு என்று ஆவது திருக்குறள் தொட்டு வழங்கப்பட்டு வரும் புணர்ச்சி இயல்பாகும். மகன்+கு ஸ்ரீ மகற்கு என்று ஆள்கிறார் வள்ளுவர். ஆனால், தற்காலத்தில் மகற்கு என்ற வழக்கொழிந்து மகனுக்கு என்று எழுதுகிறோம். அவன்+கு அவற்கு என்பதே சரியானதாகும். ஆனால், அவனுக்கு என்றே எழுதுகிறோம். அவனுக்கு, இவனுக்கு, எவனுக்கு என்பனவற்றை அவற்கு, இவற்கு, எவற்கு என்று ஆள்வதே தெள்ளிய தமிழாகும். அவர்களுக்கு என்று எழுதாமல் அவர்கட்கு என்பதே முறையாகும். ற்கு என்று பயன்படுத்துவதை மொழிப்பெரும் புலவர்களின் எழுத்துகளில் தொடர்ந்து காணலாம். சொல்+கு = சொல்லுக்கு என்று நாம் எழுதிக்கொண்டிருக்கிறோம். தமிழ்ப்பெருமக்கள் அதனைச் ‘சொற்கு’ என்று எழுதுவார்கள். அவ்வாறுதான் எழுத வேண்டும். ஆனால், நாம் சொல்லுக்கு என்று எழுதுகின்றோம். ஆனால், அது + அன் + கு = அதன்+கு என்பதனை முறையாக ‘அதற்கு’ என்று பயன்படுத்துகிறோம். அதற்கு, இதற்கு, எதற்கு என்பதனையே பேச்சிலும் பயன்படுத்துகிறோம். ஆக, திருக்குறளில் ஆளப்படும் புணர்ச்சி வழக்கு இன்றைய பேச்சு வரைக்கும் தொடர்ந்து உயிர்ப்போடு விளங்குகிறது. அந்த வழக்கம் பிழையாகப் பயிலப்படும் பலவற்றினை அடையாளம் காட்டிக் களையவும் பயன்படுகிறது.

புணர்ச்சி இலக்கணத்தின் நுண்ணிய வடிவமொன்று பாமர மக்களின் பேச்சளவிலும் ஊடிப் பரவியிருக்கிறது. அவ்வாறே அருஞ்சொற்கள் பலவும் மக்கள் பேச்சினில் கலந்திருக்கின்றன.

“என்ன மெதுவாகப் போறே? வெசையாப் போ” என்று சொல்வார்கள்.

“ஆடி அசைஞ்சு நடந்தா எப்படி? வெசையாத்தான் நடக்கலாமுல்ல?” என்று கடிவார்கள்.

இந்த வெசை என்ற சொல்லை நம் எழுத்துகளில் எப்போதேனும் ஆண்டிருக்கிறோமா ? இல்லை என்றே கூறலாம்.

வெசை என்பது என்ன சொல்? விசை என்ற சொல்தான் பேச்சு வழக்கில் ‘வெசை, வெசையாக’ என்று வழங்குகிறது. விசை என்ற சொல்லைப் பயன்படுத்தியே விசைத்தறி போன்ற சொற்றொடர்களை ஆக்கியிருக்கிறோம்.

படிப்பாளர்களைப் பொறுத்தவரையில் விசை என்பது அருஞ்சொல். பாமரர்களைப் பொறுத்தமட்டில் அச்சொல் அவர்களின் அன்றாடப் பயன்பாட்டில் வழங்கும் எளிய சொல். இவ்வாறு பேச்சில் பொதிந்திருக்கும் சொற்கள் ஒன்றிரண்டல்ல, பல்லாயிரம் சொற்களை அகழ்ந்து எடுக்க முடியும்.

---



# அழகிய சீனத் தமிழ் மகள்!

‘மலர்கள் போன்ற வடிவமைப்பு உள்ள தமிழ் எழுத்துகள் என்னை வசீகரித்தன. தமிழ் மொழியின் மீதான காதலால் சீனப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆசிரியையாக மாறி உள்ளேன். தமிழ் மொழிக்கும், சீன மொழிக்கும் உள்ள தொடர்புகள் குறித்து ஆராய்ச்சி செய்ய ஆர்வமாக உள்ளேன்” என்கிறார் யுனான் மின்சு பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியை நிறைமதி.

சீனப் பெண்ணுக்கு நிறைமதி என்ற பெயரா என யோசிக்கிறீர்களா? அவருடைய இயற் பெயர் கிகி ஜாங். தமிழ் மீது கொண்ட பற்றால் நிறைமதி என்று மாற்றியுள்ளார். தமிழைக் கற்றுத் தேர்ந்த நிறைமதிக்கு சீன வானொலியின் தமிழ்ப் பிரிவில் வேலை கிடைத்தது. இரண்டு வருடங்களின் பின், ஹொங்காங்கில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் முதுகலை பட்டப்படிப்பை படித்தார். பின் அங்கேயே வேலை பார்த்து வந்தார்.

ஹொங்காங்கில் யுனான் பல்கலைக்கழகத்தின் மொழிப் பிரிவின் தலைவர் ஒருநாள் ‘எங்கள் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையைத் தொடங்கவுள்ளோம். அந்தத் துறையில் நீங்கள் பணியாற்ற வேண்டும்” என்று அழைப்பு விடுத்தார். சேரலாமா, வேண்டாமா என்று யோசித்தேன். அப்போது பல்கலைக்கழகத்தில் பிற துறைகளில் பணி செய்தவர்கள், ‘நீங்கள் வரவில்லை என்றால் தமிழ்த் துறை தொடங்காமல் போக வாய்ப்பு இருக்கிறது’ என்று சொன்னார்கள்.

அந்த அழைப்பை ஏற்று, ஹொங்கொங் பணியிலிருந்து விலகி யுனான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தேன். தற்போது 6 சீன மாணவர்கள் தமிழ்ப் படித்து வருகின்றனர். இவர்கள் தமிழ்ப் பாடநூல்கள், காணொலிகள் வழியாக விரைவாகத் தூய்மையான தமிழைக் கற்று வருகின்றனர்.

# கம்யூனிஸ்ட்களை கொன்று குவித்த தென்கொரியா



கொரியாவின் கதை #16

இரண்டாம் உலகப்போர் முடிந்த சமயத்தில் செஞ்சேனையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 13 இலட்சம் ஆகியது. அதுபோக, கொரில்லா போராளிகள் எண்ணிக்கை 26 லட்சமாக உயர்ந்தது. சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மொத்தம் 10 கோடிப் பேர் வாழ்ந்தனர். இந்நிலையில்தான் ஜப்பான் சரணடைந்தது. சீனாவில் சோவியத் இராணுவமோ, அமெரிக்க இராணுவமோ இல்லை. எனவே, சீனாவில் சரணடையும் ஜப்பான் இராணுவத்தினர், சீன கம்யூனிஸ்ட் கட்சியிடமோ, தேசியவாத அரசின் இராணுவத்திடமோ சரணடையலாம் என்று சோவியத் யூனியனும் அமெரிக்காவும் கூறிவிட்டன.

மன்சூரியாவைத் தாக்கிய 20 இலட்சம் ஜப்பானிய வீரர்களுடன் சோவியத் யூனியன் போரிட்டு, மன்சூரியாவை முழுமையாக சோவியத் இராணுவம் கைப்பற்றியது. அங்கு மட்டும் 7 இலட்சம் ஜப்பான் இராணுவத்தினர் சரணடைந்தனர். தனது இராணுவம் வரும்வரை மன்சூரியாவை சீன கம்யூனிஸ்ட்களிடம் கொடுக்கக் கூடாது என்று சியாங்கே ஷேக் கூறினார். ஆனால், சோவியத் இராணுவம் சீன கம்யூனிஸ்ட்களிடம் மன்சூரியாவை ஒப்படைத்தது. இதையடுத்து, மன்சூரியாவிலிருந்த தேசியவாத அரசின் இராணுவத்தை அமெரிக்க இராணுவ விமானங்கள் ஏற்றிச் சென்று சீனாவின் வடக்குப் பகுதிகளில் உள்ள முக்கிய நகரங்களை ஆக்கிரமிக்க வசதியாக இறக்கிவிட்டன.

சீனாவின் கிராமப் பகுதிகள் முழுமையாக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பிடியில் இருந்ததால், சியாங்கே ஷேக்கை தனது ஆதரவாளராக உருவாக்க அமெரிக்கா இராணுவம் திட்டமிட்டு செயற்பட்டது.

அதாவது சீனா முழுமையாக கம்யூனிஸ்ட்களின் பிடியில் போய்விடக்கூடாது என்று அமெரிக்கா நினைத்தது. இதே நினைப்பில்தான் கொரியாவைப் பிரிக்கவும் அமெரிக்கா திட்டமிட்டு செயற்பட்டது. ஆனால், சீனாவில் சியாங்கே ஷேக் அரசின் இராணுவத்துக்கு எதிராக சீனாவின் செஞ்சேனை தீவிரமாக போரிட்டது.

இந்தச் சண்டை 1946 இல் தொடங்கி 1949 வரை நீடித்தது. அதற்குள் வடகொரியாவில் கம்யூனிஸ்ட் அரசாங்கம் நிறு வப்பட்டுவிட்டது. அங்கிருந்து கொரிய கம்யூனிஸ்ட் கொரில்லா போராளிகள் 70 ஆயிரம் பேர் சீன கம்யூனிஸ்டின் செஞ்சேனையில் இணைந்து போரிட்டனர். சீனாவில் குடியேறிய ஆயிரக்கணக்கான கொரியர்களும் சீன கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருந்தனர்.

1948 மற்றும் 1949 ஆம் ஆண்டுகளில் தென்கொரியாவை வடகொரியாவுடன் இணைக்கும் போராட்டத்தை முன்னெடுத்த கம்யூனிஸ்ட்களுக்கு உதவியாக சீனா துணை நின்றது. சீனாவில் இருந்து சியாங்கே ஷேக் தாய்வான் தீவுக்கு தப்பி, அங்கு சீனக் குடியரசை நிறுவினார். சீனாவை முழுமையாக கைப்பற்றிய கம்யூனிஸ்ட்கள் அங்கு சீன மக்கள் குடியரசை நிறுவினார்கள். இதற்கிடையில்தான், கொரியா இரண்டாக பிரிக்கப்பட்டு, தென்கொரியாவில் போலியான தேர்தல் நடத்தப்பட்டது. அமெரிக்க ஆதரவாளரான சிங்மேன் ரீ ஜனாதிபதியாக பொறுப்பேற்றாலும், அவருக்கு எதிரான மக்கள் போராட்டத்தை அடக்க முடியவில்லை. தென்கொரியா முழுவதும் அவருக்கு எதிராக கொந்தளித்துக் கொண்டிருந்தது.

தென்கொரியாவில் தனக்கெதிராக இலட்சக்கணக்கான கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் இருப்பதாக சிங்மேன் ரீ நினைத்தார். அவர்கள் பற்றிய பட்டியலைத் தயாரிக்கும்படி உத்தரவிட்டார். கம்யூனிஸ்ட்களும், அவர்களுடைய ஆதரவாளர்களும்தான் தனது அரசியல் எதிரிகள் என்று ரீ முடிவு செய்தார். ஜப்பானியர்களோடு இணைந்து செயற்பட்ட கொரிய நீதிபதிகள் போடோ லீக் இயக்கத்தை தொடங்கினார்கள். இந்த இயக்கத்தினர் தயாரித்த பட்டியலில் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் அல்லாதவர்களும், விவசாயிகளும் கட்டாயப்படுத்தி இணைக்கப்பட்டனர். இந்த போடோ லீக் இயக்கத்தில் விடுதலைப் போராட்ட ஆதரவாளர்கள் இருப்பதாக தென்கொரியா அரசு 1949 ஆம் ஆண்டு ஜூன் மாதம் குற்றம்சாட்டியது.

தென்கொரியாவில் தனது அரசுக்கு எதிரானவர்களை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையில் அவர் தீவிரமாக இருந்தார். அதேசமயத்தில் இரண்டு கொரியாக்களையும் பிரிக்கும் எல்லைப்புறத்தில் வடகொரிய இராணுவம், அமெரிக்கா தலைமையிலான தென்கொரிய இராணுவத்துடன் அடிக்கடி சண்டையில் ஈடுபட்டுவந்தது.

ஒரு கட்டத்தில் சிங்மேன் ரீயின் அடக்குமுறை கட்டுக்கடங்காமல் போனது. அதையடுத்து, 1950 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் தேதி தென்கொரியா மீது வடகொரிய இராணுவம் படையெடுத்தது. தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்கிய தென்கொரிய இராணுவமும், கம்யூனிஸ்ட் குழுக்களுக்கு எதிரானவர்களும், சிறைப்பட்டிருந்த கம்யூனிஸ்ட்களை ஈவிரக்கமில்லாமல் கொன்றனர். விசாரணையோ, தண்டனையோ அறிவிக்கப்படாமல் அவர்கள் கொல்லப்பட்டனர்.

தென்கொரியாவின் பல பகுதிகளில் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களும், கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்டோரும் கொல்லப்பட்டு ஒரே இடத்தில் மொத்தமாக புதைக்கப்பட்டனர். 1990களுக்குப் பிறகு இத்தகைய அத்துமீறல்கள் தொடர்பான புகைப்பட ஆதாரங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. இப்போதும் இந்த போர்க் குற்றங்கள் விசாரணையில் இருக்கின்றன.

2008 ஆம் ஆண்டு தென்கொரியாவில் உள்ள டாயேஜியோன் என்ற இடத்தில் ஏராளமான குழந்தைகள் உள்பட நூற்றுக்கணக்கானோர் கொன்று புதைக்கப்பட்ட சவக்குழி கண்டுபிடிக்கப்பட்டது.

தென்கொரியா மீது போர் தொடங்கியபோது அந்த நாட்டின் வீரர்கள் எண்ணிக்கை 95 ஆயிரம் பேராக இருந்தது. ஐந்தே நாட்களில் அந்த எண்ணிக்கை 22 ஆயிரம் பேராகக் குறைந்தது. இதையடுத்து ஐ.நா. உத்தரவின் பேரில் என்று சொல்லி அமெரிக்கப் படை தென்கொரியாவுக்கு வந்தது.

அந்தச் சமயத்தில் ஐ.நா. சபையில் அமெரிக்காவின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது. வீட்டோ அதிகாரம் உள்ள சோவியத் யூனியன், ஏற்கெனவே தைவான் அரசாங்கத்தை சீன குடியரசாக ஐ.நா. அங்கீகரித்ததை எதிர்த்து கூட்டங்களை புறக்கணித்து வந்தது. இந்நிலையில்தான், தென்கொரியா மீது வடகொரியா போர் தொடுத்ததை ஐ.நா. பாதுகாப்புச் சபை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது. அதைத் தொடர்ந்து ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உறுப்பினராக உள்ள நாடுகள் தென்கொரியாவில் வடகொரியாவை எதிர்த்து போரிட இராணுவ உதவி செய்ய வேண்டும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.


(இன்னும் வரும்)


> **தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்கிய தென்கொரிய இராணு வமும், கம்யூனிஸ்ட் குழுக்களுக்கு எதிரானவர்களும், சிறைப்பட்டிருந்த கம்யூனிஸ்ட்களை ஈவிரக்கமில்லாமல் கொன்றனர். விசாரணையோ, தண்டனையோ அறிவிக்கப்படாமல் அவர்கள் கொல்லப்பட்டனர்.**

## எஸ்.கே. ரஜினி போலவாம்

இஷா கோபிகர் நீண்ட இடைவெளிக்கு பின் எஸ்.கே. 15 படத்தில் நடிக்கிறார். கதை ஏலியன்ஸ் பற்றியது.

சிவகார்த்திகேயனை பார்க்கும்போது எனக்கு இளவயது ரஜினியை பார்த்தது போன்று தெரிகிறது. அவரின் முகம், தலைமுடி ஸ்ரைல், கண்கள், கலர் எல்லாம் ரஜினியை நினைவுபடுத்துகிறது என்று கூறியிருக்கிறார் இஷா.





## விஜய் சேதுபதியின் புதிய படம்

மாமனிதன் படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து விட்டது. இதையடுத்து சிந்துபாத் படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொண்டுள்ளார் விஜய் சேதுபதி.

இந்நிலையில் ஸ்கெட்ச் படத்தை இயக்கிய விஜய் சந்தர் படத்தில் விஜய் சேதுபதி நடிக்கவுள்ளார். இதில் அவருக்கு ஜோடியாக ராஷி கண்ணா, நிவேதா பெத்துராஜ் நடிக்கவுள்ளனர்.

சூரி, நாசர், மொட்டை ராஜேந்திரன் எனப் பல நட்சத்திரங்கள் நடிக்கும் இந்தப் படத்தின் படப்படிப்பு விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

## மீண்டும் சினேகா

தனுஷுடன் சினேகா நடித்த படம் 'புதுப்பேட்டை'. இந்தப் படம் இன்றும் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகும்போது ரசிகர்களின் நல்ல வரவேற்பு உள்ளது.

இந்நிலையில், 13 வருடங்கள் கழித்து மீண்டும் தனுஷுடன் ஜோடி சேர்கிறார் சினேகா. சத்யஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் படத்தில் தனுஷ் நாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்திலேயே நாயகியாக சினேகா இணைந்துள்ளார்.





## என்னை பின்பற்றாதீர்கள்

என் சினிமா வாழ்க்கையைப் பின்பற்றாதீர்கள் என ஓவியா தன் ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரின் நடிப்பில் வெளியான 90 எம்.எல். படம் ஆபாசம் நிறைந்தது என எழுந்த ஆட்சேபத்துக்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

90 எம்.எல். படம் மூலம் பாலியல் உணர்வு தூண்டப்படவில்லை. என் சினிமா வாழ்க்கையைப் பின்பற்றாதீர்கள். நான் நிஜ வாழ்வில் எப்படி இருக்கிறேன் என்று மட்டுமே பாருங்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

## அழகிகள் மேல் கோபம்

காஜல் அகர்வால், தமன்னா, சமந்தா, ரகுல் ப்ரீத் சிங் இவர்கள்தான் தென்னிந்தியாவின் முன்னணி நடிகைகள். ஹொலிவூட் படமான கப்டன் மார்வெல் படம் ஆங்கிலம் தவிர தமிழ், ஹிந்தி, தெலுங்கு மொழிகளிலும் வெளியாகிறது. இதன் புரொமோசன் நிகழ்விலேயே நால்வரும் பங்கேற்றனர். அவர்களின் இந்த செயலால் தயாரிப்பாளர்கள் கொதித்துப் போயிருக்கிறார்களாம். கோடியில் சம்பளம் வாங்கும் இவர்கள் படத்தின் புரொமோசனில் பங்கேற்பதில்லை என்றுதான் கோபமாம்.

ஆனால், மார்வெல் நிறுவனமோ அழகிகளுக்கு இலட்சங்களை வாரியிறைத்துத்தான் நிகழ்வுக்கு அழைத்ததாம்.



தமிழ்த் திரையுலகில் நாயகியாக ஜொலித்துவரும் 'மில்க் பியூட்டி' தமன்னா, ஒரு வைர வியாபாரியின் மகள். மும்பைவாசி. மும்பைக்கும் சென்னைக்கு பறந்துகொண்டிருக்கும் தமன்னா பற்றிய சுவாரசியத் தகவல்கள் இதோ...!

'கண்ணே கலைமானே' படம் வரையிலும் ஒரு கோடியே 40 லட்சம் இந்திய ரூபா சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார், தமன்னா. 'தேவி-2' படத்திலிருந்து சம்பளத்தை 2 கோடி ரூபாவாக மாற்றியிருக்கிறாராம்.

'கேடி' படம் மூலம் தமிழில் அறிமுகமான தமன்னா, த்ரிஷா நாயகியாக நடித்த 'எனக்கு 20 உனக்கு 18' படத்தில் ஒரு சிறிய பாத்திரத்தில் நடித்திருக்கிறார். அதில் இவருக்குச் சம்பளம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

'ராஜ்மஹால்' புடவை விளம்பரத்தில் முதன்முதலில் நடித்தபோது, தமன்னாவுக்கு 14 வயது. அதில் இவருக்கு ஜோடியாக சாயா சிங்கின் கணவர் கிருஷ்ணா நடித்திருந்தார்.

அனுஷ்கா, சமந்தா, காஜல் அகர்வால் ஆகிய மூவரிடமும் நெருங்கிப் பழகுகிறார், தமன்னா. இவர் சினிமாவுக்கு வந்தபோது, தனியாக ஆடை வடிவமைப்பாளரை வைத்திருக்க வேண்டும் என்பதே இவருக்குத் தெரியாதாம். அதை அவருக்குச் சொல்லிக் கொடுத்தவர், அனுஷ்கா.

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், சிந்தி, உருது, மராத்தி ஆகிய மொழிகள் பரிச்சயமாக இருப்பது, தமன்னாவின் ப்ளஸ்.

'சாந்த் சா ரோஷன் சேரா' என்ற ஹிந்தி படம் மூலம் தமன்னா அறிமுகமாகியிருந்தாலும், தமிழ் படங்களில் நடிக்கவே அவர் விரும்பினார். 2013 இல், அஜய் தேவ்கனுடன் நடித்து வெளியான 'ஹிம்மத்வாலா' திரைப்படம், 1983 இல் அதே பெயரில் வெளியான படத்தின் மீளுருவாக்கம். அதில் ஸ்ரீதேவி நடித்த ரோலில் இவரை நடிக்கும்படிக் கேட்டதால், தனது சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கை மட்டும் பெற்றுக்கொண்டு நடித்துக்கொடுத்தாராம் தமன்னா.

வர்த்தகப் படங்களில் அதிகம் நடித்து விட்ட தமன்னாவுக்கு, கதை சார்ந்த படங்களில்தான் தற்போது அதிக நாட்டம் இருக்கிறதாம். ராதாமோகன், சசிகுமார், கௌதம் மேனன் ஆகிய இயக்குநர்களின் படங்களில் நடிக்க தமன்னா விருப்பப்படுகிறாராம்.

யோகா, நடனம் இரண்டிலும் அதிக நாட்டம் கொண்டவர், தமன்னா. தினமும் காலையில் யோகா செய்வதும், மாலையில் நடனம் ஆடுவதும்தான் இவரது அழகின் ரகசியம்.





# ஓர் அடிமையின் விடுதலைப் போர்

பிரெட்ரிக் டக்ளஸ்

தொடர் 07

இவை எல்லாவற்றையும் செய்து முடித்தபிறகு இளைஞர்கள், வயதானவர்கள், ஆண்கள், பெண்கள், மணமானவர்கள், மணமாகாதவர்கள் என்று எல்லோருமே ஒருவருக்கொருவர் அடுத்தடுத்து பொதுவான ஒற்றைப் படுக்கையில் அதாவது குளிரான ஈரத் தரையில் கந்தலான போர்வையைப் போர்த்திக் கொண்டு சுருண்டு விடுவார்கள். வாகன ஓட்டியின் ஒலிப்பான் சத்தம் அவர்களைப் பண்ணைக்கு அழைக்கும்வரை இங்கே தூ ங்குவார்கள். ஒலி கேட்டதும் எழுந்து பண்ணைக்குச் சென்றுவிட வேண்டும். பின்தங்குதல் கூடாது எல்லோரும் அவரவர் இடத்தில் இருந்தாக வேண்டும்.

பண்ணைக்குச் செல்வதற்கான இந்த அழைப்பு காதில் விழாமல் போவோருக்கு பெருந்துன்பம் காத்திருக்கும். சத்தம் கேட்டு எழுந் திருக்கிறார்களோ இல்லையோ அப்படியொரு உணர்விலேயே எழுந்து கொண்டுவிடுவார்கள். வயதோ, ஆண், பெண் பேதமோ எவ்வித சலுகையையும் பெற்றுத் தராது. ஒலிப்பான் சத்தமிட்டவுடன் சத்தம் காதில் விழாததாலோ அல்லது வேறு காரணத்தினாலோ பண்ணைக்குப் புறப்படத் தயா ராகாத துரதிர்ஷ்டசாலிகளை அடிப்பதற்கென்று குறுந்தடியோடும் தோல் சவுக்கோடும் மேற்பார் வையாளன் சிவியர் கொட்டகை வாசலில் தயாராக நிற்பான்.

சிவியர் என்ற பெயர் அவனுக்கு மிகப் பொருத்தமானதுதான். குரூரமான மனிதன். தொடர்ந்து அரைமணி நேரம் இரத்தம் பெருகுமளவு ஒரு பெண்ணை சவுக்கால் விளாசியதை நான் பார்த்திருக்கிறேன். தன் தாயை விட்டுவிடுமாறு மன்றாடும் அவள் குழந்தையின் எதிரிலேயே அவ்வாறு அடித்தான். தனது காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்துவதில் அவனுக்கு இன்பம்போலும்.

கொடூர குணத்திற்கும் மேலாக அவனொரு தெய்வ நிந்தனை யாளன். அவன் பேசுவதைக் கேட்டாலே போதும் சாதாரணமான ஒருவன் இரத்தம் உறைந்துபோய் மயிர்கூச்செறிந்து நின்றுவிடுவான். அவன் வாயைத் திறந்தாலே அரு வருப்பான வசைகள்தான். அவனது கொடுமைகளையும் தெய்வ நிந்த னைகளையும் காண்பதற்குச சரியான இடம் பண்ணைதான். அந்த இடத்தை அவனது இருப்பே சபிக்கப்பட்ட ரத்தக்களமாக மாற்றி விடும். உதித்த சூரியன் மறை யும்வரையிலும் அங்கிருக்கும் அடிமைகளை விரட்டுவான் - திட்டு வான் - கர்ஜித்துக் கொண்டு அடித்து விளாசியபடி திரிவான். குறுகிய காலமே அவன் உயிர் வாழ்ந்தான்.


கேணல் லொய்ட்டின் பண்ணைக்கு நான் சென்ற சில நாள்களிலேயே அவன் இறந்து போனான். வாழ்ந்த காலத்தில் இருந்தது போலவே சாகும்போதும் பிதற்றிக் கொண்டிருந்தான். சகிக்க முடியாத வசைகளைச் சபித்தவாறு மரண முனகல்களோடு அவன் இறந்தான். அடிமைகள் அவனது மரணத்தைக் கடவுளின் கருணையாகவே கருதினார்கள்.

சிவியரின் இடத்தில் ஹொப் கின்ஸ் நியமிக்கப்பட்டான். இவன் வித்தியாசமானவன். சிவியரோடு ஒப்பிடும்போது இவனின் கொடு மைகள் குறைவு. குறைவாகவே சத்தமும் போட்டான். குரூரதனத்தின் உச்சபட்ச செயல்கள் எதுவும் இல்லாமல் இருந்ததே அவன் கண்காணியாய் இருந்த காலத்தின் சிறப்பாகும். அடிமைகளை அவன் சவுக்கால் அடித்தது உண்டு. ஆனால் அதில் அவன் இன்பம் காண்பவனாய் இல்லை. அடிமைகள் அவனை நல்ல கண்காணி என்றே அழைத்தனர்.

கேணல் லொய்ட்டின் வீட்டுப் பண்ணை ஒரு கிராமத்தைப் போலத் தோற்றம் கொண்டிருந்தது. அனைத்துப் பண்ணைகளுக்குமான இயந்திர வேலைகள் இங்குதான் மேற்கொள்ளப்பட்டன. காலணிகள் தயாரிப்பது, அவற்றைப் பழுது பார்ப்பது, தச்சு வேலைகள், கொல்லப்பட்டறை வேலைகள், வண்டிகளை சரிபார்த்தல், பீப்பாய்கள் செய்வது, நெசவு, தானிய அரைப்பு போன்ற எல்லா வேலைகளும் அடிமைகளால் செய்யப்பட்டன. பக்கத்துப் பண்ணைகள் போல் இல்லாமல் இந்த இடம் ஒரு வியாபார மையம் போலிருந்தது. இங்கிருந்த வீடுகளின் எண்ணிக்கையும்கூட மற்றப் பண்ணைகளை விட இதற்குக் கூடுதல் அனுகூலத்தைத் தருவதாக இருந்தது. அடிமைகளால் இது 'பெரிய வீட்டுப் பண்ணை' என்றே அழைக்கப்பட்டது.

பண்ணைக்கு வெளியே இருந்த அடிமைகளின் மத்தியில் 'பெரிய வீட்டுப் பண்ணை'யில் வேலை செய்வதை விட மிகச் சில உரிமைகளே சிறந்தவனவாகக் கருதப்பட்டன. அவர்களது மனதில் அது மகத்தானதாக இடம்பிடித்திருந்தது. வெளியே இருந்த மற்ற பண்ணைகளிலிருந்து பெரிய வீட்டுப் பண்ணையில் வேலை செய்யத் தெரிவு செய்யப்பட்ட ஒரு அடிமையை விட அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தெரிவான ஒருவர் பெருமிதம் கொண்டுவிட முடியாது. தங்களது மேற்பார்வையாளர்களின் பெரும் நம்பிக்கையைப் பெற்றுவிட்டதற்கான அடையாளமாக அவர்கள் அதைக் கருதினார்கள். இதன் காரணமாகவும் பண்ணை வேலைகளிலிருந்தும் கசையடிகளில் இருந்தும் விடுபட்டாக வேண்டும் என்ற தீராத ஆசையின் காரணமாகவும் இதற்காகவே வாழலாம் என்று எண்ணுமளவு ஒரு பெரிய கௌரவமாக மதித்தார்கள்.

பண்ணைக்கு வெளியே இருந்த அடிமைகளின் மத்தியில் 'பெரிய வீட்டுப் பண்ணை'யில் வேலை செய்வதை விட மிகச் சில உரிமைகளே சிறந்தவனவாகக் கருதப்பட்டன. அவர்களது மனதில் அது மகத்தானதாக இடம்பிடித்திருந்தது. வெளியே இருந்த மற்ற பண்ணைகளிலிருந்து பெரிய வீட்டுப் பண் ணையில் வேலை செய்யத் தெரிவு செய்யப்பட்ட ஒரு அடிமையை விட அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குத் தெரிவான ஒருவர் பெருமிதம் கொண்டுவிட முடியாது. தங்களது மேற்பார் வையாளர்களின் பெரும் நம்பிக்கையைப் பெற்றுவிட்டதற்கான அடையாளமாக அவர்கள் அதைக் கருதினார்கள்.



அடிக்கடி யாருக்கு இந்த கௌரவம் சித்திக்கிறதோ அவர் மிகுந்த புத்திசாலியாகவும் நம்பகமானவராகவும் கருதப்பட்டார். பதவி ஆசை கொண்ட அரசியல்வாதிகள் மக்களைக் கவர்ந்து ஏமாற்றுவது போல இந்த வேலைக்காகப் போட்டி போடும் அடிமைகளும் தங்களது மேற்பார்வையாளர்களைத் திருப்தி செய்யும் விதமாக எல்லாக் காரியங்களையும் செய்வார்கள். அரசியல் கட்சிகளில் உள்ள அடிமைகளிடம் காண முடிகிற அதே குணங்களை கேணல் லொய்டின் அடிமைகளிடமும் காண முடியும்.

தங்களுக்கெனவும் சக அடிமைகளுக்காகவும் மாதாந்திர உணவுப் படியைப் பெற்றுவர பெரிய வீட்டுப் பண்ணைக்கு செல்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிமைகள் விநோதமான ஆர்வம் கொள்வார்கள். பண்ணை வீட்டுக்குச் செல்லும் வழியில் பல மைல் தூ ரம் விரிந்து கிடக்கும் அடர்ந்த காட்டின் வழியாகப் போகும்போது உச்சபட்ச சந்தோசத்தையும் ஆழ்ந்த துக்கத்தையும் ஒருசேரத் தரும் தங்களது கரடுமுரடான பாடல்களைக் காடெங்கும் எதிரொலிக்கச் செய்வார்கள். ராக தாளத்தைகப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நடைவழியில் பாடல்களை இயற்றிப் பாடுவார்கள். நினைப்பதையெல்லாம் சொற்களாக இல்லாவிட்டாலும், ஓசைகளாகக் கொட்டி விடுவார்கள். சில சமயம் துயரமான உணர்ச்சிகளைப் பரவசம் மிகுந்த குரலிலும் குதூ கலமான உணர்ச்சிகளை சோகமான குரலிலும் பாடுவார்கள். எல்லாப் பாடல்களிலும் பெரிய வீட்டுப் பண்ணையைக் குறித்து ஏதேனுமொரு வரியைக் கோத்துவிடுவார்கள். அதிலும் புறப்படும்போது இவ்வாறு செய்வார்கள்.

'பெரிய வீட்டுக்கு நான் போகிறேனே...
ஓ... யே.... ஓ...' என்ற வரியை மிகப் பேரானந்தத்துடன் பாடுவார்கள். பலர் சேர்ந்து பாடும் இவ்வரிகளின் சொற்கள் பலருக்குப் புரியாத வார்த்தைகளாக இருக்கக்கூடும் - ஆனால் பாடும் அவர்களுக்கு அவை மிகுந்த பொருள் பொதிந்தவையாகும். அடிமைத்தனத்தின் கொடூரமான பண்பைப் புரிந்துகொள்ள, அதைக் குறித்து முழுக்கப் படிப்பதை விட வெறுமனே இந்தப் பாடல்களைக் கேட்டாலே போதுமென்று நான் சிலசமயம் நினைப்பதுண்டு.

(போர் நீளும்)

## ஆட்டோசங்கரின் கதை

# அதிகாரியின் மனைவி... ஆட்டோ சங்கரின் தோழி!

ஆட்டோவா, ஆகாய விமானமா என சந்தேகப்படும்படியான, நம்ப முடியாத வேகத்தில் வண்டி பறந்தது.

'கடைக்குப் பலத்த சேதமா...?''

'ஆமாண்ணே...! யாரோ நாலு பேர் புகுந்து. இந்த மிஷின்லே ஏதோ பிராடு இருக்குது... எப்பவுமே காசு விழறதில்லை... ஏமாத்தவா செய்யறீங்க''ன்னுஅடிச்சு நொறுக்கிறாங்களாம்... நாமும் வேணா ஒரு நாலைந்து சேர்த்துப்போமா... சந்தடி சாக்கிலே கடையைத் தரை மட்டமாக்கிடலாம்!?''

'உளறாதே, பேசாம போ!''

சண்டையில் அமளி துமளிப்பட்டது கடை... அந்த நாலுவாட்ட சாட்டன்களும் பிரதேசத்தை உண்டு, இல்லை பண்ணிக் கொண்டிருந்தனர். முதலாளியம்மா பதற்றமாகி போனுக்குப் பாய, ஸ்டூல் ஒன்று பறந்து வந்து தொலைபேசியில் மோத சிதறித் தெறித்தது. அம்மையார் அலறித் தீர்த்தார்.

இன்னொருவன் கல்லாப் பெட்டியில் கை வைக்க முயன்ற நிமிஷம், கடைக்கு முன்னால் பெரிய சப்தத்துடன் போய் நின்றது அவசர ஆட்டோ., சரேலென வெளிப்பட்டேன். ஒரு நிமிடம் சண்டையை நிதானமாய் கவனித்தேன். வெறுப்புடன் காறித் துப்பினேன்! தம்பி மோகனிடம் 'நான் மட்டும் உள்ளே போய் கவனிச்சுக்கறேன்... நீ ஆட்டோவிலேயே இரு!'' சொல்லிவிட்டு உள்ளே பாய்ந்து சண்டை ஜோதியில் சேர்ந்து கொண்டேன். அவர்கள் நான்கு பேரோடும் ஒற்றை ஆளாகச் சமாளித்தேன்.

வாசகர்களே, நீங்கள் யாருடைய ரசிகர்? ரஜினி? கமல்? விஜயகாந்த்? சத்யராஜ்? அல்லது வாத்தியார்?



உங்கள் அபிமான நடிகர் யாரோ அவரை நினைவுக்குக் கொண்டு வாருங்கள்! திரையில் அவர் எப்படி எதிரிகளை சமாளிப்பாரோ அப்படி ஒரு ஸ்ரைல்! சாகஸம்! கெட்டிக்காரத்தனம்!

ஒரு ஆளாக நின்று கொண்டு எதிரிகளைப் பந்தாடினேன். ரௌடிகள் நான்கு பேரும் உதட்டில் எட்டிப் பார்த்த ரத்தத்துடன் துடித்தனர். வலி தாங்காமல் பெற்றவளைக் கூப்பிட்டுக் கொண்டே கீழே சாய்ந்தனர். கடையை விட்டு வெளியே பாய்ந்து மறைந்தனர். அம்மையார் கண்களில் ஆச்சரியம், பிரகாசம் காட்டிற்று. என்னை பரவசம் பொங்கப் பார்த்தார்.

'எங்க வீட்டுப் பிள்ளை' படத்தில் திருடனை விரட்டின எம்.ஜி. ஆரின் பலம் பார்த்து பிரமித்த சரோஜாதேவி கூட அப்படித்தானே பார்த்தார்?!'

### இந்தியாவை உலுக்கிய ஒரு சீரியல் கில்லரின் வாக்குமூலம் 22

அது சரோஜாதேவி, இவர்... ஏதோ ஒரு தேவி! அம்மணி என்னைப் பார்த்து தோழமையுடன் சிரித்தார்.

"ரொம்ப நன்றி...! நல்ல நேரத்தில் வந்து கை கொடுத்தீங்க!''

உதட்டில் புன்னகை உருவாக்கிக் காட்டினேன்.

'அதனால என்னங்க... உங்களுக்கு எப்ப, என்ன உதவி தேவைப்பட்டாலும் எனக்குப் போன் பண்ணுங்க'' விசிட்டிங் கார்டை அவர் கையில் திணித்தேன். என் உதவி அவருக்கும் அவர் உதவி எனக்கும், அப்புறம் அடிக்கடி தேவைப்பட்டது.

அந்த பெண்மணிக்கு அடிக்கடி போன் செய்து என்னைக் கூப்பிடத் தெரிந்தது. பரஸ்பரம் தொழிலுதவி செய்யத் தெரிந்தது. பொலிஸ் வட்டாரத்தில் என்னை மேலும் நெருக்கமாக்க தெரிந்தது.

வீடியோ கடையில் நடந்த மோதல் – சண்டை போட்டவர்கள் என்னுடைய ஆட்கள்... அந்த சண்டையே ஒரு "செட்அப்'' என்பது மட்டும் தெரியாது!

சூரியனும், சந்திரனும் கூட அப்போதெல்லாம் நான் சொன்னபடி கேட்டது என்றே சொல்லலாம்! சூரிய, சந்திரர் மட்டுமா? ஒரு சில நட்சத்திரங்களும் கூட! சினிமா நட்சத்திரங்கள்! நடிகைகள்! என் ஓட்டு எப்போதும் சூரியனுக்குத்தான்! கட்சி உறுப்பினராகவும் அந்த வட்டாரத்தில் ஒரு பொறுப்போடும் இருந்தேன். ஆனால் அப்போது ஆட்சியிலிருந்தது அந்தக் கட்சியில்லை!

அதனாலென்ன...! அந்தக் கட்சியில் அரசியல்வாதிகளுடன் நெருக்கமென்றால், ஆளும் கட்சியில் அதிகாரிகளிடம் செல்வாக்கு! அதுவும் அந்த உயர் அதிகாரி! 'ஐயா'வின் மனைவியின் நட்பு என்னை அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக்கிற்று!

செருப்புக்கு பாட்டாவும் இரும்புக்கு டாட்டாவும் இருந்தது மாதிரி சாராயத்துக்கு சங்கர் என பேரெடுக்க முடிந்தது, தேவியின் தயவால்!

எனக்கு இதில் இன்னொரு சந்தோஷம் கூட உண்டு! சட்டத்தின் நீள அகலமான கதவுகள் எனக்காக திறந்துவிடப்பட்டதே... இதற்கு எந்தக் கொமிஷனும் கேட்கவில்லை தேவி! ஆனால் வேறு ஒன்று கேட்டார்... எனக்கு அது சம்மதமானதும் சந்தோஷமானதும்!

(தொடரும்)

# 'குளிரில் நிற்காதீங்க நானே வாங்கிறேன்''

## நெகிழ வைத்த இளைஞர்


நாயகத் தன்மை மிதமிஞ்சிய திரைப்படங்களில் ஒரு காட்சி கட்டாயம் இடம்பிடிக்கும். அது வீதியோரத்தில் பூ விற்கும் பாட்டி அல்லது ஏதாவது சிறு பொருட்களை விற்கும் சிறுவர்கள் என ஏழை மனிதர்களிடம் நாயகன் அல்லது நாயகி அவர்களின் அனைத்துப் பொருட்களையும் பணத்தைக் கொடுத்து வாங்கி அவர்களின் அன்றைய தேவையை அவர்களின் அன்றைய கஷ்டத்தை தீர்த்து விடுவர்.

இதில் சினிமாவில்தான் என்றாலும், நிஜத்திலும் இப்படி ஒரு விடயத்தைச் செய்துள்ளார் இளைஞர் ஒருவர். அமெரிக்காவே இப்போது பனியில் உறைந்து கிடக்கிறது. அதுவும் தென்கரோலினா பகுதியில் நிலைமை இன்னும் மோசம். அங்கு வீதியோரத்தில் இரு சிறுமிகள் பிஸ்கெற் விற்பனை செய்து கொண்டிருந்தனர். இதைப் பார்த்த இளைஞர் ஒருவர் மனமிரங்கி 7 பிஸ்கெற் பைக்கெற்றுகளை 40 டொலர் கொடுத்து வாங்கிச் சென்றார்.

சிறிது நேரத்தில் மீண்டும் அவ்விடத்துக்கு வந்த அந்த இளைஞர் சிறுமிகளிடம் இருந்த அனைத்து பிஸ்கெற் பைக்கெற்றுகளையும் வாங்கி அதற்கான 500 டொலர் தொகையையும் கொடுத்தார்.

சிறுமிகளுக்கு மகிழ்ச்சி தாளவில்லை. வாங்கிய இளைஞரோ 'நீங்கள் விற்றது போதும் இந்தக் குளிரில் வெளியே நிற்க வேண்டாம் வீட்டுக்குச் செல்லுங்கள்...'' என அக்கறையுடன் கூறினார்.

இந்தக் காட்சியை அங்கிருந்த நபர் புகைப்படத்துடன் முகநூலில் பதிவிட்டார். சிறிது நேரத்தில் உலகம் முழுவதும் வைரலாகிவிட்டது. அந்த இளைஞருக்குப் பாராட்டுகள் குவிகின்றன. வாழ்த்துக்கள் சகோதரரே...!





# பூச்சிகளும் நம் நண்பர்களே...!

புதிய தொடர் - 02

**வயலில் ஏதாவது பூச்சியைப் பார்த்ததும் உடனடியாகப் பூச்சி கொல்லி வாங்க ஓடுபவரா நீங்கள்... அப்படியிருந்தால், உங்களுக்காகத்தான் இத்தொடர்!**

பூச்சிகள் இல்லாமல் விவசாயம் சாத்தியமே இல்லை. பயிர்கள் அவற்றுக்கான நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிக் கொள்ளப் பூச்சிகளும் முக்கிய காரணிகள்.

பூச்சிகள் மூலம் எதிர்ப்புத் திறனை உருவாக்கிக் கொள்ளும் செடிதான் தரமான செடி. அதிலிருந்துதான் விதைகளைச் சேமித்தனர், நம் முன்னோர். அதனால், வயலில் பூச்சிகளைக் கண்டவுடனே பயப்பட வேண்டிய அவசியமில்லை. வயலில் ஏற்பட்டுள்ள பிரச்னைக்குக் காரணம் பூச்சியா, நோயா என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நமக்குச் சளி, காய்ச்சல் போன்றவற்றை ஏற்படுத்துபவை வைரஸ்கள். வாந்தி, பேதி போன்றவற்றை ஏற்படுத்துபவை, பக்ரீரியாக்கள். சொறி, சிரங்கு, படை போன்றவற்றை ஏற்படுத்துபவை, பூஞ்சணங்கள்.

> ஒரு புழு செடியில் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தப் புழு இலையை உண்ணும் புழுவா... வேரைக் குடையும் புழுவா... தண்டைக் குடையும் புழுவா... காயைத் தின்னும் புழுவா... எனத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு, தீமை செய்யும் பூச்சிகளை உண்ணக்கூடிய நன்மை செய்யும் பூச்சிகள் நம் வயலில் இருக்கின்றனவா எனப் பார்க்க வேண்டும். நன்மை செய்யும் பூச்சிகள் இருந்தால்... அவை தீமை செய்யும் பூச்சிகளைப் பிடிக்கும் திறனைக் கொண்டுள்ளனவா என்பதையும் அறியவேண்டும்.

சுகாதாரமின்மையால் குடலில் புழுக்கள் உண்டாகின்றன. தாவரங்களில் நோய்களை உண்டாக்குபவையும் இவைதான். வைரஸ்கள், பக்ரீரியாக்கள், பூஞ்சணங்கள், நூற்புழுக்கள் போன்றவற்றால்தான் தாவரங்களுக்கு நோய்கள் வருகின்றன.

பூச்சி தாக்கங்களால் உண்டாகும் சில அறிகுறிகளும், நோய்த் தாக்குதலால் உண்டாகும் சில அறிகுறிகளும் மேம்போக்காகப் பார்க்கும்போது ஒன்று போலத் தோன்றும். அதனால், குழம்பிப்போய் நோய்க்கான மருந்து, பூச்சிக்கொல்லி இரண்டையும் வாங்கிச் சிலர் தெளிப்பார்கள். இப்படிச் செய்வதால் பயிரிடல் செலவு அதிகரிக்குமே தவிர, எந்தப் பிரயோசனமும் இருக்காது. அதனால், பூச்சிக்கும் நோய்க்கும் வித்தியாசம் தெரிந்துகொள்ளப் பழக வேண்டும். பூ, காய், பழம் போன்றவற்றில் உள்ள அறிகுறிகளை விவசாயிகள் எளிதாக இனம் கண்டுவிடுவார்கள். ஆனால், இலை, வேர், தண்டு போன்றவற்றில் ஏற்படும் பாதிப்புகளைப் புரிந்துகொள்ள முடிவதில்லை. அதனால், முதலில் பூச்சிகளைப் பற்றிய புரிதல் அவசியம்.


வயலில் உள்ள பூச்சிகளின் நிலைகள் மற்றும் அவற்றின் வளர்ச்சி நிலைகள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும். ஒரு புழு செடியில் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தப் புழு இலையை உண்ணும் புழுவா... வேரைக் குடையும் புழுவா... தண்டைக் குடையும் புழுவா... காயைத் தின்னும் புழுவா... எனத் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பிறகு, தீமை செய்யும் பூச்சிகளை உண்ணக்கூடிய நன்மை செய்யும் பூச்சிகள் நம் வயலில் இருக்கின்றனவா எனப் பார்க்க வேண்டும். நன்மை செய்யும் பூச்சிகள் இருந்தால்... அவை தீமை செய்யும் பூச்சிகளைப் பிடிக்கும் திறனைக் கொண்டுள்ளனவா என்பதையும் அறிய வேண்டும். இப்படிப் பல்வேறு தகவல்களைத் தெரிந்துகொண்டு திட்டமிட்டுதான், தீமை செய்யும் பூச்சிகளை விரட்டியடிக்க வேண்டும். இவற்றை விரட்ட நன்மை செய்யும் பூச்சிகளைக் கூலிப்படையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, தீமை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கை, மண்ணின் ஈரப்பதம், காலச் சூழ்நிலை, பயிரின் வளர்ச்சி நிலை, பயிரின் தாங்கு திறன் ஆகியவற்றைக் கொண்டு முடிவெடுத்தால்தான் விவசாயத்தில் வெற்றிகரமான மகசூல் சாத்தியம்.தாவரங்களில் அதிக நோய்களை உருவாக்குபவை வைரஸ்கள்தான். வைரஸ்கள் பரவுவதற்குக் காரணமாக இருப்பவை... பலவிதமான சாறு உறிஞ்சும் பூச்சிகள். ஒரு செடியிலிருந்து அடுத்த செடிக்கு வைரஸைக் கொண்டு செல்பவை சாறு உறிஞ்சும் பூச்சிகள்தான். வைரஸ் தாக்குதலுக்கு மருந்துகள் இல்லை என்பதால், சாறு உறிஞ்சும் பூச்சிகள்மீது அதிகக் கவனம் வைக்க வேண்டும்.

சாகுபடிக் காலம் தெரிந்துதான் ஒவ்வொரு பயிரையும் விதைப்போம். எந்தப் பயிரைச் சாகுபடி செய்கிறோமோ... அதன் சாகு படிக்காலத்துக்குள் எந்தெந்த நாள்களில் என்னென்ன நோய்கள் மற்றும் பூச்சிகள் அப்பயிரைத் தாக்கக்கூடும் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

அவற்றை முன்கூட்டியே தெரிந்து கொண்டு 'வருமுன் காப்போம்' முறையைக் கடைப்பிடித்தால் பிரச்னையே இருக்காது. குறிப்பாக இயற்கை விவசாயத்துக்கு வருமுன் காப்போம் முறைதான் சிறந்தது. நோயோ, பூச்சியோ தாக்கியபிறகு நடவடிக்கை எடுப்பது, சேதாரத்தை அதிகமாக்கிவிடும். வருமுன் காப்பது மூலமாகச் சேதாரத்தைக் குறைப்பதோடு, செலவுகளையும் குறைக்கலாம். நன்மை செய்யும் பூச்சிகள், தீமை செய்யும் பூச்சிகள் பற்றிப் பார்த்திருக்கிறோம். தீமை செய்யும் பூச்சிகள் என்றால்... அவை பயிரைத் தாக்கும் பூச்சிகள் மட்டுமல்ல.

மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு நோயைப் பரப்பும் பூச்சிகளும் தீமை செய்யும் பூச்சிகள்தான். சேமித்து வைக்கப்பட்ட தானியங்களைச் சேதப்படுத்தும் பூச்சிகளும் உள்ளன. அதேபோல நன்மை செய்யும் பூச்சிகள் என்றால்... மற்ற பூச்சிகளைச் சாப்பிடும் அசைவ இனங்கள் என்று மட்டும் எண்ணிவிடக் கூடாது. தனது வம்சத்தையே உணவாகக் கொள்ளும் அபாயகரமான பூச்சிகளும் உள்ளன. மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகள், உயிரினங்களுக்கு நோயைப் பரப்பும் பூச்சிகள், களைகளைக் கட்டுப்படுத்தும் பூச்சிகள், இலைதழைகளை மட்க வைக்கும் பூச்சிகள், தடய அறிவியலில் தடம் பதிக்கும் பூச்சிகள்... எனப் பல்வேறு விதமான பூச்சிகள் உள்ளன.



பொதுவாக, தேனீக்களும், பட்டாம்பூச்சிகளும்தான் மகரந்தச் சேர்க்கைக்கு உதவக்கூடிய பூச்சிகள் என நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மரத்தைக் குடைந்து உள்ளே போய்க் கூடுகட்டும் வண்டுகள், அத்திப்பழக் குளவிகள், எறும்புகள் போன்ற பல பூச்சிகள் மகரந்தச் சேர்க்கைக்கு உதவி வருகின்றன. அதேபோல மரபணு மாற்றுத்தொழில்நுட்ப ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்பவை பழ ஈக்கள். இப்படி மண்ணை வளமாக்குவதில் தொடங்கி... மனிதர்கள், கால் நடைகள் எனப் பூமியில் வாழும் உயிரினங்களின் வாழ்விலும் பூச்சிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. குறிப்பாக விவசாயத்தில் பூச்சிகளின் பங்கு அளப்பரியது. அவைகுறித்துத் தொடர்ந்து பார்ப்போம்.

(அறிவோம்)

# வியக்க வைத்த மலைக்கோட்டை

## பயண அனுபவம் - 6

## ஜெருசலேம் யாத்திரை...!

-ஏ.ஜே.ஞானேந்திரன்-

மோசே நியாயப் பிரமாணத்தைக் கொடுப்பவராக இருந்தார். தாவீது ஒப்புயர்வற்ற அரசராக இருந்ததோடு, அவரது ஆட்சியானது நாட்டள விலான வல்லமை, மற்றும் வளத்தின் உச்சக் கட்டத்தை குறிப்பிடுவதாக இருந்தது என்று சொல்லப்படுகின்றது. மோசேக்கு அடுத்தபடியாக, எபிரேய இலக்கியத்தில் தாவீதின் வாழ்வும், எழுத்துக்களும் பெருமளவு இடத்தைப் பிடிக்கின்றன.

**அதிசய மலைக் கோட்டை**

இந்த மலைக் கோட்டையை மஸாடா என்று அழைக்கிறார்கள். இந்தக் கட்டுரை தொடங்கும்போது குறிப்பிட்டதுபோல, யூதேய மன்னன் ஏரோது என்பவனால் யூதேய பாலைவனத்தில் மலை உச்சியில் கட்டப்பட்டதுதான் இந்தக் கோட்டை. இன்று கேபிள் காரில் ஏற்றி எம்மை கோட்டை இடிபாடுகளுக்கு கொண்டு சென்றார்கள். அன்று எப்படி இந்த மலைக் கோட்டையைக் கட்டினார்கள்? ஆச்சரியம்தான். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க, உரோமர்களுக்கு எதிராக யூத விடுதலைப் போராளிகள் இங்குதான் இறுதியாகப் போராடி


மலைக்கோட்டை

உயிரை விட்டுள்ளார்கள்.

யூதருக்கும் உரோமருக்கும் இடையில் வெடித்த முதல் போர் இதுவே. கோவில் தீப்பற்றி எரிந்தபோது, யூதப் போராளிகள் நிலத்திற்கு அடியில் கழிவுநீர் செல்ல அமைத்திருந்த பாதைக்குள் ஒளித்திருந்தனர். அவர்களை உரோம வீரர்கள் ஈவிரக்கமின்றி கொன்றுள்ளார்கள் என்கிறது சரித்திரம். இந்த யூதேய வனாந்தரம் சாக்கடலுக்கு அண்மித்தே காணப்படுகின்றது. உரோமரின் முற்றுகை சில மாதங்களுக்கு நீடித்திருக்கின்றது.

1860 இல்தான் தாவீதின்


இடிபாடுகளுடன் கோட்டை

நகரம் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்களால் அகழ்வுப் பணிகளில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் தேசிய பூங்கா என்றாகி விட்ட இப் பிரதேசத்தில் 50 களில் தொடங்கிய அகழ்வுப் பணிகள் இன்றும் நீடிக்கின்றன. 1971இல் கேபிள் காரும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பூங்காவிற்குள் நடந்து சென்றபோது, ஒரு அழிந்த மன்னரது மாளிகையில் , என்னவெல்லாம் எஞ்சியிருக்கும் என்பதை நேரில் காணமுடிந்தது.

**வியக்க வைத்த நீர் சுரங்கம்**

இது தாவீது மன்னர் வாழ்ந்த நகரம் என்பதில் இன்னமும் கருத்து முரண்பாடுகள் நிலவி வருகின்றன. புராதன ஹீப்ரூ மொழியில் எழுதப்பட்ட பல ஓலைச் சுவடிகளையும் கண்டெடுத்துள்ளார்கள். கி.மு.7ஆம் நூற்றாண்டில் மன்னன் எசக்கியாவினால், நிலத்துக்கடியில் கட்டப்பட்ட குகைப் பாதையூடாக நாம் நடந்தபோது பிரமித்துப் போனோம். கோட்டையில் உள்ளவர்களுக்கு குடிதண்ணீர் வரவழைப்பதற்காக, எந்த நவீன தொழில்நுட்பமும் இயந்திரங்களும் இல்லாத அன்றைய காலத்தில் ஒரு சுனையூற்றிலிருந்து நீரை வரவழைக்க 530 மீற்றர் நீளமான இந்தச் சுரங்கப் பாதையை எப்படி அமைத்தார்கள் என்று இன்றுவரை நானும் வியந்துகொண்டே இருக்கிறேன்.

நகருக்குள் உள்ள சிலோம் தடாகத்திற்கே (Pool of Siloam) இந்த நீர் கொண்டுவரப் பட்டுள்ளது. வேதகாமத்தில் குருடன் கண்களில் குளத்துச் சேற்றைப் பூசி இயேசு கிறிஸ்து கண்பார்வை கொடுத்த புதுமையான சம்பவம் இங்கே நடந்ததாக எழுதப்பட்டுள்ளது. படிகளுடன் கூடிய இந்தத் தடாகம் 2004 இல்தான் அகழ்வாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டதாக அங்கு கூறினார்கள். அந்தப் படிகளில் நான் உட்கார்ந்த போது, எவ்வளவு தொன்மையான இடத்தில் உட்கார்ந்திருக்கிறேன் என்று ஒருகணம் வியப்பு என்னை ஆட்கொண்டது.

பாறைகளை வெட்டி, கி.மு. 8ஆம் நூற்றாண்டில் மன்னர் எசக்கியாவின் பணியாட்கள். நிலத் துக்கடியிலான தண்ணீர் விநியோகத்தை செய்திருக்கிறார்கள். இந்தக் குறுகலான நிலத்தடிப் பாதையூடாக. ஒருவர் பின் ஒருவராக நடந்துவந்தபோது. அன்றைய பொறியிய லாளர்களின் திறமை எம்மைப் பெருவியப்புக்கு உள்ளாக்கத் தவறவில்லை.

**ஓயாமல் தொடரும் அகழ்வு**

பழைய ஜெருசலேம் நகரின் கிழக்குப் பகுதியை, இஸ்ரவேல் 70 களில் பலவந்தமாகக் கைப்பற்றி, அந்தக் குடியேற்றப் பகுதிக்கு அலுவலக ரீதியாக வைத்த பெயர்தான் தாவீதின் நகரம். ஆனால் இப்படிப் பெயரிட்டு அழைப்பது நிஜமானதா என்ற சர்ச்சை தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களி டையே இருந்து வருகின்றது. 1997 இல் இந்தத் தேசியப் பூங்காவை நிர்வ கிக்கும் பொறுப்பை டேவிட்பௌண்டே ஸன் என்ற அமைப்பு தனதாக்கிக் கொண்டது. ஜெருசலேம் நகரசபை எல்லைக்குள் இந்தப் பிராந்தியம் அமைந்திருந்தாலும், இதை ஒரு குடியேற்றமாகவே நோக்குகிறார்கள்.

வெஸ்ட் பாங் (West Bank) எனப்படும் நிலப்பிராந்தியத்தில் இந்த நகரம் கட்டப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டாலும், 1967 இல் இடம்பெற்ற 6 நாள் யுத்தத்தின் முடிவில் , 1980இல் இயற்றப்பட்ட இஸ்ரேல் சட்டத்திற்கு அமைய, .இந்தப் பிராந்தியம் இஸ்ர வேலுடன் இணைக்கப்பட்டு விட்டது. 1948 இல் அரபு - இஸ்ரேல் போரைத் தொடர்ந்து பழைய நகர் யோர்தானால் கைப்பற்றப்பட்டு, யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.

1967இல் நடந்த ஆறு நாள் போரில் இஸ்ரவேல், பழைய நகரையும் கிழக்கு ஜெருசலேமையும் கைப்பற்றி. இன்று இஸ்ரேல் முழுப் பகுதியையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, ஜெருசலேமை தேசிய தலைநகராக்கியுள்ளது. இதைப் பன்னாட்டுச் சமூகம் சட்டரீதியற்ற ஒரு செயலாகவே இன்றுவரை நோக்குகின்றது. இன்று இஸ்ரேலில் தீவிரமான அகழ்வுப் பணிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பிரதேசமாக இந்தத் தாவீது நகரம் மாறியிருக்கின்றது. .

பாறைகளை வெட்டி , கி.மு. 8ஆம் நூற்றாண்டில் மன்னர் எசக்கியாவின் பணியாட்கள், நிலத்துக்கடியிலான தண்ணீர் விநியோகத்தை செய்திருக்கிறார்கள். இந்தக் குறுகலான நிலத்தடிப் பாதையூடாக, ஒருவர் பின் ஒருவராக நடந்துவந்தபோது, அன்றைய பொறியியலாளர்களின் திறமை எம்மைப் பெருவியப்புக்கு உள்ளாக்கத் தவறவில்லை. இவர்கள் எந்தப் பல்கலைக்கழகத்திற்குப் போனார்கள்? எப்பொழுது பொறியியல் பட்டதாரியானார்கள்? எதுவுமே இல்லாமல், அளவற்ற திறமை கொண்ட இவர்களது நுட்பமான சேவை அப்பொழுது மன்னன் எசக்கியாவுக்கு கிடைத்திருக்காவிட்டால், தாவீதின் நகரில் பெரிய குடிநீர்ப் பஞ்சம் வந்திருக்கும் என்று நாம் நினைத்துக் கொண்டோம்.

**(பயணிப்போம்)**


மலைக்கோட்டைக்கு குடி தண்ணீர் வரும் சுரங்கப் பாதை


**கடந்த இதழில் ஜெருசலேம் அழிக்கப்பட்ட காலம் கி.மு. 70 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அது தவறு கி.பி. 70 ஆம் ஆண்டு என்பதே சரியானது.**

# இந்த வார இராசி பலன்

**மார்ச் 10 முதல் மார்ச் 17 வரை**



**மேஷம்:**
செவ்வாய்,ராகு இருவரும் அனுகூலமான பலன்களை தருவார்கள். சொத்து சம்பந்தமான பிரச்சினைகள் ஒரு முடிவுக்கு வரும். பதவி உயர்வை எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு. ன்மிக தாகம் அதிகரிக்கும். பாடல் பெற்ற தலங்களுக்குச் சென்று தரிசிப்பீர்கள். சுக்கிரன் சாதகமாக இருப்பதால் பெண்கள் விரும்பிய வாகனம் வாங்கி மகிழ்வார்கள். வீடு மாற இடம் பார்த்தவர்களுக்கு நல்ல வசதியான வீடு அமையும். தொழில் லாபகரமாக நடக்கும். பணப்புழக்கம் இருக்கும்.



**ரிஷபம்:**
சாதக, பாதகங்கள், வரவு, செலவுகள் என பலன்கள் கலந்து இருக்கும். புதன் வக்கிரமாக இருப்பதால் பேச்சில் நிதானம், கவனம் தேவை. பயணத்தின்போது பொருட்களை பாதுகாப்பாக வைத்திருங்கள். பொருள் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது. செவ்வாய் ஆட்சியாக இருப்பதால் வழக்கு சம்பந்தமாக சாதகமான தீர்ப்பு வரும். சகோதர உறவுகளால் ஆதாயம், ஆதரவு கிடைக்கும். சூரியன் சொந்த வீட்டைப் பார்ப்பதால் வீடு கட்ட அரசு அனுமதி கிடைக்கும். தாயாரிடம் இருந்து உதவி கிடைக்கும். அவசிய தேவைக்காக வாங்கிய கடனை அடைப்பீர்கள்.



**மிதுனம்:**
ராசியில் ராகு, 7 இல் சனி கேது இருப்பதால் நிறை, குறைகள் இருக்கும். சொந்த பந்தங்களின் குடும்ப விவகாரங்களில் கருத்து சொல்லாமல் இருப்பது நல்லது. சுக்கிரனின் பார்வையால் பொருள் சேர்க்கை உண்டு. எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நண்பர்களிடையே சில கருத்து வேறுபாடுகள் வரலாம். புதன் வக்கிரமாக இருப்பதால் எதையாவது சிந்தித்து மனதை குழப்பிக்கொள்வீர்கள். கர்ப்பமாக இருப்பவர்கள் உரிய மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம். வெளிநாட்டில் இருப்பவர்களின் எதிர்பார்த்த தொடர்பு கிடைக்கும்.



**கடகம்**
செவ்வாய் ஆட்சி பலத்துடன் இருப்பதால் சௌபாக்கிய யோகத்தை தருவார். வீடு, நிலம் வாங்க இடம் பார்த்தவர்களுக்கு நல்ல இராசியான சொத்து அமையும். மகள் திருமணம் சம்பந்தமாக தடைகள் நீங்கும். நல்ல சம்பந்தம் கூடிவரும். சுக்கிரன் இராசியைப் பார்ப்பதால் பொன், பொருள் சேரும். பெண்களுக்கு தாய் வீட்டில் இருந்து உதவிகள் கிடைக்கும். சனி, கேது இருவரின் சேர்க்கையால் நிறை, குறைகள் உண்டு. அடிக்கடி குழப்பமான சிந்தனைகள் வரவாய்ப்புள்ளது.



**சிம்மம்**
சூரியன் இராசியைப் பார்ப்பதால் புதிய உத்வேகத்துடன் செயல்படுவீர்கள். தந்தை வழி சொத்தில் இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உங்களுக்குரிய பங்கு கூடிய விரைவில் கைக்கு வரும். புதன் வக்கிரமாக இருப்பதால் அவசிய, அநாவசிய செலவுகள் உண்டு. கண் சம்பந்தமான குறைபாடுகள், சிகிச்சைகள் வந்து நீங்கும். உத்தியோக வகையில் மனஉளைச்சல் தீரும். உங்கள் கோரிக்கையை நிர்வாகம் ஏற்றுக்கொள்ளும். அரசியலில் இருப்பவர்களுக்கு திடீர் பதவி யோகம் உண்டு.



**கன்னி**
குரு, சந்திரன் இருவரும் சாதகமாக இருப்பதால் மனமகிழ்ச்சி காரிய வெற்றி உண்டு. குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு இனிக்கும் செய்தி உண்டு. கொடுக்கல், வாங்கலில் நின்றுபோன பெரிய தொகை வசூலாகும். சமையலறைக்குத் தேவையான மின்சாதனங்கள் வாங்குவீர்கள். சனி, கேது இருவரும் 4 இல் இருப்பதால் அலைச்சல், பயணங்கள் இருக்கும். ஒரு வேலையை முடிக்க பலமுறை அலைய வேண்டி வரும். தாயார் மூலம் மருத்துவச் செலவுகள் வரலாம். உத்தியோகத்தில் ஊர் விட்டு ஊர் செல்ல வேண்டிய சூழ்நிலைகள் வரும்.



**துலாம்**
சுகஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் மனநலம், உடல்நலம் சீராக இருக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலைகள் மாறும். பிள்ளைகள் உங்களைப் புரிந்துகொண்டு நடப்பார்கள். 3 இல் சனி, கேது இருப்பதால் பக்தி மார்க்கத்தில் மனம் லயிக்கும். இஷ்ட தெய்வ ஆலயங்களுக்குச் சென்று தரிசிப்பீர்கள். விளையாட்டுத் துறையில் இருப்பவர்கள் பதக்கம், விருது பெறும் யோகம் உள்ளது. செவ்வாய் 7 இல் பலமாக இருப்பதால் வீடு கட்ட எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். கையில் பணம் புரளும்.



**விருச்சிகம்**
தொட்டது துலங்கும். உத்தியோகத்தில் சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும். குடும்ப ஸ்தானத்தில் சனி, கேது இருவரும் இருப்பதால் பேச்சில் கவனம் தேவை. நகைச்சுவையாக ஏதாவது சொல்ல அது சங்கடத்தில் முடியும். குருவின் பார்வையில் சுபநிகழ்ச்சிகளுக்கான தேதியை முடிவு செய்வீர்கள். உயர்கல்வி பயில வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. நிலம் சம்பந்தமாக இருந்த குத்தகை பிரச்சினைகள் நல்லபடியாக முடியும். புதிய முயற்சிகள் பலன் தரும்.



**தனுசு**
இராசியில் சனி, கேது இருவரும் இருப்பதால் அலைச்சல், சோர்வு, குழப்பங்கள் வந்து நீங்கும். வீண் செலவுகள், மருத்துவச் செலவுகள் ஏற்படும். சுக்கிரன் 2ல் இருப்பதால் நிறை, குறைகள் உண்டு. பெண்களால் சில சங்கடங்கள் வந்து நீங்கும். குருவின் பார்வையால் பூர்வீக சொத்து சம்பந்தமாக சமாதான தீர்வு உண்டாகும். சுயதொழில் செய்பவர்கள் தொழிலை விரிவுபடுத்துவார்கள். மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். வெளிநாடு செல்ல வாய்ப்புக் கிட்டும்.



**மகரம்**
சுகஸ்தானத்தில் செவ்வாய் ஆட்சி பலத்துடன் இருப்பதால் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். சொத்து வாங்குவதற்கு முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் செய்வீர்கள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். சுக்கிரன் பாக்கிய யோகத்தைத் தருவார். பெண்களின் சேமிப்பு பணம் தங்க, வைர நகைகளாக மாறும். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த கடிதம் கைக்கு கிடைக்கும். ராகு 6 இல் இருப்பதால் திடீர் யோகங்கள் வரும். கலை, இசைத்துறையில் இருப்பவர்களுக்கு திடீர் அதிர்ஷ்டம் அடிக்கும். அரசாங்க விருது, பாராட்டு கிடைக்கும்.



**கும்பம்**
இராசி நாதன் சனியுடன், கேது சேர்ந்திருப்பதால் முடிவுகள் எடுப்பதில் சில குழப்பங்கள் தோன்றும். குறிப்பாக பெண்கள் எதையும் உணர்ச்சிவசப்படாமல் அணுகுவது நல்லது. செவ்வாயின் பார்வை காரணமாக உத்தியோக விடயத்தில் உங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். உங்கள் உழைப்பிற்கும், திறமைக்கும் உரிய அங்கீகாரம் கிடைக்கும். தனஸ்தானத்தை குரு பார்ப்பதால் செல்வாக்கு உயரும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். நிச்சயதார்த்தம், வளைகாப்பு போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகளைச் செய்வீர்கள். தொழில் சீராக இருக்கும்.



**மீனம்**
இராசிநாதன் குரு, செவ்வாய் இருவரும் உங்களுக்கு யோகத்தைத் தருவார்கள். நிலம், வீடு வாங்க முன்பணம் கொடுத்து ஒப்பந்தம் செய்வீர்கள். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஏற்பட்டு வந்த மருத்துவ செலவுகள் வெகுவாகக் குறையும், ஒப்பந்தம், தரகர் வகையில் நல்ல வருமானம் கிடைக்கும். அதிக வட்டிக்கு வாங்கிய கடனை அடைப்பீர்கள். 4 இல் ராகு இருப்பதால் வீண் அலைச்சல் இருக்கும். வயிறு சம்பந்தமான உபாதைகளை உடனடியாக கவனிப்பது நல்லது. வீடு மாற வேண்டிய கட்டாய சூழ்நிலைகள் வரவாய்ப்புள்ளது.

# விபத்துகளும் விழிப்புணர்வும்...

■ லம்போதரன்

கொழும்புக்குப் போவதற்கான தேவைகள் அதிகம் இருக்கிறது. இதுவரை பஸ் பிரயாணமே வசதியாகவும், வாய்ப்பானதுமாக இருந்தது. ஆனால் தொடர்ந்து நடைபெற்ற பஸ் விபத்துகள் எம்மை பயப்படுத்தி இருக்கிறது. கட்டணத்தை அதிகம் செலுத்துவதைப் பற்றிப் பறவாயில்லை. ஆனாலும் பணத்தையும் செலுத்தி வில்லங்கங்களையும் விலைக்கு வாங்குதாகப் பயணம் இருக்குமானால் அது தான் சங்கடமாக இருக்கிறது," என்று சொல்லுகிறார் யாழ்ப்பாணத்து வியாபாரி ஒருவர்.

வழமையாகப் விபத்துகள் பல வழிகளில் நிகழ்கின்றன. போக்குவரத்து விதி மீறல்கள், அதீத



வேகம், தலைக்கவசம் அணியாமல் பயணித்தல், இரு சக்கர வாகனங்களில் இரண்டுக்கும் மேற்பட்டோர் பயணித்தல், மது போதையில் வாகனம் செலுத்துதல், பயணிகள் கார்களில் சீட் பெல்ட் அணியாது செல்லுதல் என விபத்துக்கான காரணங்கள் பல உண்டு. இருந்தும் இவை மாத்திரமா விபத்துகளுக்குரிய காரணங்கள்? என்றால் இல்லை என்றுதான் சொல்லலாம். சாலை விதிகளை நீங்கள் மதித்துச் சென்றாலும் உங்களுக்கு முன்னாலும், பின்னாலும் எதிரேயும் பயணிப்பவர்கள் வீதி ஒழுங்கையும், சட்டத்தையும் மதிக்கவில்லை என்றால், உங்கள் பாடும் அம்போதான்!

அண்மையில் நடைபெற்ற அனைத்து பஸ் விபத்துகளும் இரவு நேரத்திலேயே அதிகம் நடைபெற்றிருக்கிறது. நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களில் மோதியே அத்தகைய விபத்துகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த விபத்துகளில் எல்லா விபத்துகளும் அவற்றைச் செலுத்திய ஓட்டுநர்கள் கவலையீனத்தால் ஏற்பட்டதன்று. சாலையில் பொறுப்பற்ற முறையில் எதுவித சமிக்ஞையும் இல்லாது நிறுத்தி வைக்கப்பட்ட டிப்பர் எனப்படும் பார ஊர்திகளினாலும் ஏற்பட்டிருக்கிறது. வேலைகள் முடிவடைந்ததும் அவற்றைத் தத்தமது இடங்களுக்கு எடுத்துச் செல்லாது தொடரும் வேலைகளின் வசதிக்காகச் சிலர் சாலையோரத்தில் நிறுத்தி விட்டுச் செல்கின்றனர். நிறுத்தும்போது சாதாரணமாக கைக்கொள்ளப்படும் விதிமுறைகளைக் கூட அவர்களால் பின்பற்ற முடிவதில்லை. விபத்துகள் நடைபெற்ற இடங்களைச் சென்று பார்ப்போமானால் அவைகள் பெரும்பாலும் நெடுஞ்சாலைகளில் காணப்படும் வளைவுகளிலேயே நடைபெற்றிருக்கிறது.

நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களில் சிவத்த லாம்பு அல்லது ஒளிரும் சிவப்புக் கல்லு அல்லது பாக்கிங் லைட் போன்றவற்றைப் முன்புறமும், பின்புறமும் பொருத்த வேண்டும். ஆனால் இரவு நேரங்களில் எதுவித அபாயச் சமிக்ஞைகளையும் பொருத்தாது அப்படியே நிறுத்தி வைப்பதனால்தான் பின்னால் வரும் வாகனங்களுக்கும், எதிரே வரும் வாகனங்களுக்கும் அப்படி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களைத் தெரிவதில்லை.திமர் வளைவுகளில் தமது வாகனத்தின் ஹெட் லைட்டின் வெளிச்சம் முன்பிருந்த பொருட்களில் பட்டு அவற்றை ஓட்டுநர் கிரகிக்க முன்னரே உள்ள கணப்பொழுதில் பல விபத்துகள் நிகழ்ந்து முடிவடைந்துவிடும்.

இத்தகைய சில நொடி நேரங்களில் நடைபெறும் விபத்துகள் பலரின் வாழ்க்கையையே கேள்விக் குறியாக்கி விட்டுப் போய்விடுவது கண்கூடு. சாதாரணமாக இருந்த ஒருவர் ஒரு கணப்பொழுதில் தனது காலையையோ அல்லது கையையோ அல்லது பிற உறுப்புகளையோ இழந்து வலுவிழந்தவராகப் போவது... என்ன கொடுமையிது? விபத்து நடந்த அந்தக் கண நேரந்தொட்டு மீதமுள்ள அவரது வாழ்க்கைக் காலத்தை ஒரு முறை மனதில் ஓடவிட்டுப் பாருங்கள். பிறப்பிலேயே வலுவிழந்தவராகப் பிறப்பது அத்தகைய கொடுமை அல்ல. ஆனால் அவரே நல்லாக வாழ்ந்தவராக இருந்து இடையே விபத்தைச் சந்தித்தவராக இருந்திருந்தால்......

எனவே இதுபோன்ற வீதி விபத்துகளை உடனடியாக நிறுத்த வேண்டுமெனில் சாலை விபத்துகளைப் பற்றிய விழிப்புணர்வுகளை வாகனச் சாரதிகளிடம் மட்டுமல்ல எல்லாப் பொது மக்களிடமும் ஏற்படுத்த வேண்டும். விபத்துகளைத் தவிர்ப்பது பற்றி மக்கள் விழிப்புணர்வைப் பெற்றாலே பாதிப் பிரச்சினைகள் முடிந்தது போலகிவிடும். உதாரணத்துக்கு மக்கள் அதிகம் பயணிக்கும் பொதுப் போக்குவரத்து பஸ்களிலே சாரதிகள் வீதி ஒழுக்கத்தையும் விதி மறைகளையும் மதிக்காது அல்லது பின்பற்றாது பயணித்தால், மக்கள் விழிப்புணர்வைப் பெற்றவர்களாக இருந்தால் உடனடியாக அவர்கள் சாரதியை கண்டிப்பர். இல்லாவிடில் ஒரு மினிப்போராட்டமே நடத்துவர்.

பாடசாலைகளிலும், மற்றும் பொது இடங்களிலும் வாகனப் போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அவசியம். பிரதேச செயலகங்களிலும், பிரதேச சபைகளிலும் எத்தனை அதிகாரிகள் மனித மேம்பாடுக்கான பணிகளில் உள்ளனர். அவர்கள் ஊடாகவும் இச் செயற்பாடுகளை முன்னெடுக்கலாமே?

இதிகம் விபத்துகள் நடைபெறும் இடங்களை அடையாளப்படுத்தி அந்த இடங்களில் சாலைகளை அகலப்படுத்துவது, அதிலே வேகத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய ஸ்பீட் பிரேக்கர் எனும் மேடு பள்ளங்களை அதிகம் ஏற்படுத்துவது. போக்குவரத்து நெரிசல் இருக்கும் இடங்களில் மேம்பாலங்களை அமைப்பது, அந்தந்த இடங்களிலே மக்கள் அதிகம் பார்க்கக் கூடிய வகையில் எச்சரிக்கைப் பலகைகளை நடுவது, வேகக் கட்டுப்பாட்டைப் பொலிஸாரின் உதவியுடன் செயற்படுத்துதல், எல்லாவற்றுக்கும் மேலாகப் பொதுப் போக்குவரத்தில் தனியார் வாகனங்களைக் கட்டுப்படுத்தி, பொதுப் போக்குவரத்தை ஊக்குவித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அதிகாரிகள் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

போக்குவரத்துக்கென ஆணைக் குழு ஒன்று இருக்கிறது. இது போன்ற விடயங்களை அவர்களே அரசுக்குப் பரிந்துரைக்க வேண்டும். அவர்கள் மக்களிடம் குறைகளைக் கேட்டு அறிய வேண்டும். மக்களுக்கு ஏற்றவாறு அவர்கள் வாழும் சூழ்நிலைக் கேற்றவாறு, புவியியல் அமைப்புக் கேற்றவாறு போக்குவரத்து விதிமுறைகளை உண்டாக்க வேண்டும்.போக்குவரத்துக்காக மக்கள் என்றில்லாது மக்களுக்கானதாகப் போக்குவரத்துச் சாதனங்களையும், விதிமுறைகளையும் மாற்றியமைக்க வேண்டும்.



இதுவரை காலமும் எல்லாவற்றிற்கும் யத்தத்தைக் காரணம் காட்டியபடி நாட்களை நகர்த்தி வந்துள்ளோம்.


இனியும் தாமதம் வேண்டாம். முதலில் மக்களுக்குப் போக்குவரத்தையும் அதன் ஒழுக்கத்தையும் கண்காணிக்கவென நாட்டில் என்னென்ன அரச நிர்வாகங்கள் தொழிற்படுகின்றன என்ற விழிப்புணர்வை ஏறப்படுத்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் அந்தந்த நிர்வாக அலகுகளை அணுகித் தத்தம் குறைநிறைகளைத் தெரிவிப்பார்கள். பொதுப்போக்குவரத்துப் பணிமனைகளிலே மக்கள் குறைகளை எழுதிப் போடுவதற்கெனப் பெட்டியொன்று முன்நாளில் இருந்ததாக ஞாபகம். தற்போதுள்ளவர்களைக் கேட்டால் அப்படி ஒன்று இருக்கிறதா? என்ற கேட்பார்கள். எனவே போக்குவரத்தைப் பற்றிய விழிப்புணர்வு என்பது எல்லா வழிகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

விபத்துகள் நடைபெற்ற பின்னால் உள்ள அது பற்றிய அணுகுமுறை என்ன என்பதுவும் மிகவும் முக்கியமானதாகும். விபத்து ஒன்று நடைபெற்றால் அது பற்றிய வழக்குகளில் சாட்சி சொல்ல மக்கள் வராததும் சாட்சி சொல்ல அஞ்சுவதுவும் அது பற்றிய சரியான விழிப்புணர்வு இல்லாததே காரணம் எனலாம். அத்துடன் அப்படி சாட்சி சொல்ல வருபவர்களுக்குப் பொலிஸ் பக்கமிருந்து கொடுக்கப்படும் பிரச்சினைகள்.

எனவே விபத்துகளைத் தனியே ஒரு சாராருக்குரியதாகப் பார்க்காமல் அதை ஒரு பொது விடயம் எனவும் பலரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படுத்த வேண்டியதொன்று எனவும் பார்ப்போமானால் விரைவில் இதற்கு ஒரு நிரந்தர தீர்வைக் காணலாம்.

**சண்டே ஒவ்சேவரின் More Bombs Drop in the 'Mig Deal' கட்டுரையின் தமிழாக்கம்**

# இன்னும் குண்டுகள் வீழும் மிக் வியாபாரம்



அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர சபையின் பரிந்துரைகளை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தபோதிலும், அரசாங்கங்களுக்கு இடையில் இடம்பெறுவதாக இருந்தாலும் புதிய யோசனைகளை கோருவது என்பதை தீவிரமாக ஆராய்ந்த பின்னரே செய்ய வேண்டியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. மிக் விமானங்களை பழுதுபார்ப்பதற்காக கோரப்பட்ட நான்கு கேள்விப் பத்திரங்களை ரத்துச்செய்துவிட்டு பொருத்தமான நிறுவனத்திடமிருந்து – அரசாங்க அடிப்படையில் புதிய யோசனைகளை கோருவதற்கான அனுமதியையும் அமைச்சரவையிடமிருந்து அந்த ஆவணம் கோரியிருந்தது.

அதேவேளை, ஏப்ரல் 6 ஆம் திகதி அமைச்சரவை தனது அங்கீகாரத்தை வழங்கிய அத்தருணத்தில் ஏற்கனவே, ராஜபக்ஷ உக்ரின்மாஸிட மிருந்தும் உறவினர் உதயங்க வீரதுங்கவிடமிருந்தும் 'கோரப்படாத யோசனைகளைப்' பெற்றிருந்ததுடன் அதனை விமானப் படையினரிடமும் சமர்ப்பித்திருந்தார். மேலும், உக்ரைன் நிறுவனத்தின் யோசனையையும், இந்தியாவின் HAL ஏரோஸ்பேஸ் என்ற நிறுவனத்தின் யோசனையையும் ஆராய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமிப்பதற்கான உதவியையும் அவர் தேசிய கொள்வனவு அதிகார சபையிடமிருந்து பெற்றிருந்தார்.

மிக் விமானக்கொள்வனவு குறித்து வேறு எவரும் விருப்பத்தினை சமர்ப்பிக்காததால் 2006 ஏப்ரல் 26ஆம் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உக்ரின்மாஸின் யோசனையை ஏற்று மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விமானப்படைக்குப் பரிந்துரைசெய்தது. இவ்வாறு கொள்வனவு செய்யப்படவிருக்கின்ற விமானங்கள் 2000ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த விமானங்களை விட பழையது மட்டுமல்லாது அதனை விட அதிக விலை கூடியது என்பது பிரச்சினையாக இருக்கவில்லை.

உக்ரைனின் உக்ரின்மாஸ் யோசனைக்கும் இந்தியாவின் HAL யோசனைக்கும் இடையில் நிதி விடயங்கள் தொடர்பில் காணப்படும் வேறுபாடு குறித்து மதிப்பீட்டுக் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. உக்ரின்மாஸின் யோசனை குறித்த அறிக்கையின் ஒரு பகுதியில் கொடுப்பனவுகள் யாரிடம் மேற்கொள்ளப்படும் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படாத அதேவேளை இந்திய நிறுவனம் கொடுப்பனவுகள் தனது நிறுவனத்திடமே மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவித்துள்ளது.

உக்ரிமாஸ் எனத் தெரிவிக்கப்படும் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் ஆரம்பம் முதல் நிதி உக்ரைன் அரசாங்கத்திற்கு செல்லாது பெயர் குறிப்பிடப்படாத மூன்றாம் தரப்பிற்கே செல்லும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அந்த மூன்றாம் தரப்பு யார் என்ற விபரம் வெளியிடப்படும் எனவும் கூறப்பட்டிருந்தது. இந்த விடயம் மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் தெளிவாக தவிர்க்கப்பட்டிருந்தது. அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தால் மிக் விமான கொள்வனவு இரு நாடுகளிற்கு இடையில் இடம்பெறவில்லை என்பதும் மாறாக மூன்றாம் தரப்பொன்றே இதன் மூலம் நன்மையடையவுள்ளது என்பதும் கவனத்தை ஈர்த்திருக்கும்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப் படுவதற்கு முன்னர் அந்த மூன்றாம் தரப்பு யார் என்ற விபரம் வெளியிடப்படும் எனவும் கூறப்பட்டிருந் தது. இந்த விடயம் மதிப்பீட்டுக் குழு அறிக்கையில் தெளிவாக தவிர்க்கப்பட்டிருந்தது. அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருந்தால் மிக் விமான கொள்வனவு இரு நாடுகளிற்கு இடையில் இடம்பெறவில்லை என்பதும் மாறாக மூன்றாம் தரப்பொன்றே இதன் மூலம் நன்மையடையவுள்ளது என்பதும் கவனத்தை ஈர்த்திருக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷ, தேசத்தை கட்டியெழுப்பும் விவகாரங்களிற்கான அமைச்சர் எம்.எஸ். ஜயசிங்க, பிரதி திறைசேறி செயலாளர் எஸ்.பி. திவாரட்ண ஆகியோரை உள்ளடக்கிய கேள்விப் பத்திர சபை 2006 மே 5 இல் இடம்பெற்ற தனது சந்திப்பில் மதிப்பீட்டுக் குழு அறிக்கை குறித்து ஆராய்ந்தது. ஆரம்ப யோசனையை பெற்றுக்கொண்ட ராஜபக்ஷவிற்கு மாத்திரம் மூன்றாம் தரப்பிற்கே பணம் செல்லப் போகிறது என்ற விபரத்தை மதிப்பீட்டுக் குழு அறிக்கை விட்டிருந்தமையை கேள்விப் பத்திர சபைக்கும் தெரிந்திருந்தது.

ஆனால், அதன் அறிக்கையும் பணம் மூன்றாம் தரப்பிற்கே செல்லப்போகின்றது என்ற விடயத்தை தவிர்த்திருந்ததுடன் இது அரசாங்கங்களிற்கு இடையிலான நடவடிக்கை என்ற தோற்றத்தை ஏற்படுத்த முயன்றிருந்தது.

ராஜபக்ஷ கேள்விப் பத்திர சபையின் அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருந்ததுடன் அமைச்சரவையை அரசாங்கங்களுக்கு இடையிலான பரிவர்த்தனையின் கீழ் உக்ரின்மாஸ் யோசனைக்கு அனுமதி வழங்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார். அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருந்தது. உக்ரின்மாஸிடமிருந்து விமானங்களை கொள்வனவு செய்வதற்கான இந்த யோசனையை பயன்படுத்தி அமைச்சரவை பல வழிகளில் தவறாக வழிநடத்தப்பட்டது. அதில் இந்த வழிமுறையும் ஒன்று. உக்ரின்மாஸின் யோசனையை அமைச்சரவைக்கு பரிந்துரை செய்வதென கேள்விப் பத்திர சபை தீர்மானித்து இரண்டு வாரங்களின் பின்னர், உக்ரின்மாஸின் இயக்குநர் டீ.ஏ.பெரெகுடொவ், விமானப் படைக்கு கடிதமொன்றை எழுதினார்.

குறிப்பிட்ட கடிதத்தில் அவர் மிக்27 விமானங்களில் பொருத்துவதற்குத் தாங்கள் பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவித்திருந்த இயந்திரங்களை வேறொரு வெளிநாட்டு வாடிக்கையாளருக்கு விற்றுவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தார். அதற்குப் பதிலாக வேறு நான்கு இயந்திரங்களை வழங்குவதற்கு தயார் என பெரெகுடொவ் தெரிவித்திருந்தார். இந்த இயந்திரங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதேவேளை, கேள்வி பத்திர சபையினாலும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தோடு, வேறு வகையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வது குறித்து பாதுகாப்பு அமைச்சு அமைச்சரவைக்கும் தெரிவிக்கவில்லை.

2006 இல் ஒப்பந்தம் இறுதியாக கைசாத்திடப்பட்ட பின்னரே இந்த விமானக் கொள்வனவு நடவடிக்கை மூலம் உண்மையில் பயனடையப்போகின்றவர் யார் என்பது தெரியவந்தது. லண்டன் முகவரியையும் பக்ஸ் இலக்கத்தையும் கொண்டிருந்த பெலிமிசா ஹோல்டிங்ஸ் லிமிடெட் என்ற நிறுவனமே இதன் மூலம் நன்மையடையவிருந்தது. அந்த நிறுவனத்தின் முகவரி உட்பட ஏனைய விடயங்கள் உண்மையானவையா என்பதை பாதுகாப்பு அமைச்சு ஆராயவில்லை.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு மாதங்கள் ஆவதற்குள் செப்டெம்பர் 2006 இல் விமானப் படையைச் சேர்ந்த வட்டாரங்கள் எனக்கு பெருமளவு ஆவணங்களை வழங்கின என இக்பால் அத்தாஸ் குறிப்பிடுகின்றார். நான்கு மிக் 27 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையே இந்த ஆவணம் எனவும் அவர் தெரிவிக்கின்றார். "நான் இது குறித்து பல மாதங்களாக ஆராய்ந்தேன், பாதுகாப்பு விவகாரத்தில் நிபுணத்துவம் பெற்ற இராஜதந்திரிகள் உட்பட பல தரப்பினருடன் ஆராய்ந்தேன்" என அவர் தெரிவிக்கின்றார். அதன் பின்னரே என்ன நடக்கின்றது என்ற முழுமையான விபரத்தை அறிந்துகொள்ள முடிந்தது எனவும் இக்பால் அத்தாஸ் குறிப்பிடுகின்றார்.

(தொடரும்)

# அந்த... ஒரு நிமிடம்

எஸ்.கணபதி

அன்று ஞாயிறுக்கிழமை என்பதால் விடுமுறை. பாடசாலைக்குச் செல்லாததனால் சிறிது காலம் தாழ்த்தி எழுந்திருந்தனர் பிள்ளைகள்... காலைக் கடன் கூட முடிக்காத படி முற்றத்திலிருந்து விளையாடத் தொடங்கியவர்களைப் பார்த்து "என்ன புதுப் பழக்கம். போய் பல்லைத் தீட்டுங்கோ" எனச் சத்தமிட்டாள் அகிலா.

அகிலாவின் கணவன் ஈசன் காலையிலேயே எழுந்து சந்தைக்குப் போய்விட்டான். சந்தையால் வரும்போது காய்கறி தொடக்கம், மீன் வரை வாங்கி வந்துவிடுவான். அன்றைய தினம் எல்லோரும் ஒருமித்து வீட்டில் நிற்பதால் சமையல் தடல்புடலாக இருக்கும்.

முந்தைய தினம் மதியம் செய்த குரும்பட்டித்தேர் முற்றுப் பெறாமல் அப்படியே முற்றத்தில் கிடந்தது. வார்ந்து வைத்த தென்னம் ஈர்க்கைக் குரும்பட்டியில் செலுத்தி தேரைப் பூரணப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தான் விஷ்ணு. "அண்ணை பெரிய தேர் கட்டுவம்" என்றான் சின்னவன் ரமணா.

"இல்லை நேற்றைக்குச் செய்ததுதான் அளவு. அதையே செய்வம்." என்றான் விஷ்ணு. சிறிது நேரம் அப்படியே பேசிக் கொண்டிருந்தவர்கள் எதுவித தீர்மானம் எடுக்காததால் "அப்பா வரட்டும்" என்று அப்பாவின் முடிவுக்காகக் காத்திருந்தனர்

**நேரம்**

**காலை 07 மணி 27 நிமிடம் 16 செக்கன்.**

அகிலா இயங்கிக் கொண்டிருந்தாள். அடுப்பு ஒன்றில் கேற்றிலும் மற்றதில் பிட்டுப் பானையும் வைத்தபடி... "இண்டைக்குச் சமையல் கனக்க" வீட்டுக்குப் பின்னாலிருந்த பனங்காட்டில் பாளைகளையும் பன்னாடைகளையும் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டிருந்தாள் அகிலா.

அடுத்த மாதம் கோயில்கள் ஒவ்வொன்றாய் கொடியேறத் தொடங்கிவிடும். ஒன்றன் பின் ஒன்றாய் வரும் திருவிழாக்களின் நடுவே மச்சம், மாமிசம் எதையும் சமைக்க முடியாது.

"சின்னவன் குடுத்ததைச் சாப்பிடுவன். பெரியவனுக்கு ஏதேன் மணக்க வேணும். இல்லாட்டிச் சோறு தொண்டேக்குள்ளாலை இறங்காது." அவள் பார்வைக்குள் அகப்பட்ட சில கங்குமட்டைகளையும், பன்னாடைகளையும் சேர்த்துக் கொண்டு வந்து முற்றத்தில் போட்டபடி சற்று இடுப்பைப் பிடித்தபடி நிமிர்ந்து கொண்டாள் அகிலா.

காற்றுக்குக் காவோலைச் சத்தம் பேரிரைச்சலாய்க் கேட்டது. அடுப்படியிலும் கேற்றில் சத்தமும், பிட்டுப் பானையின் இரைச்சலும் ஒன்றாய்க் கேட்டன. "புட்டுக்குச் சம்பல் இல்லாட்டி குழம்பு வைக்க வேணும். அதுக்கு அவர் வரவேணும். அதிலை ஏதாச்சும் எடுத்துத்தான் வெட்டிப் போட வேணும்" கணவன் வருகைக்காய் காத்திருந்தாள் அகிலா.



**நேரம்**

**காலை 07 மணி 23 நிமிடம் 34செக்கன்**

"அப்பா வந்திட்டார்." என்றபடி விஷ்ணு கேற்றடி வரை ஓடிச் சென்றான். ரமணாவும் கத்தியபடி அவனைப் பின் தொடர்ந்து ஓடினான். ஈசன் தன் கையிலிருந்த வெள்ளரிப் பழக் குடலையை விஷ்ணுவிடம் நீட்டினான். சின்னவன் ஈசனின் கையிலிருந்த மரக்கறி பாக்கைப் பறித்துக் கொண்டான். ஈசன் சைக்கிளை உருட்டியபடி அவர்களைப் பின் தொடர்ந்தான். ஈசனின் பொழுது போக்கு தனது பிள்ளைகளின் குறும்பை ரசிப்பது. இடையிடையே இராமர் இலக்குவனராக இருக்கும் அவர்களில் ஒருவன் இராவணனும் ஆகிவிடுவான். சண்டை நடக்கும். பின்னர் ஈசன் தலைமையில் சமாதானப் பேச்சு நடக்கும்.

இடையிடையே அவர்களின் முறைப்பாட்டை விசாரிக்க அகிலாவும் வருவாள். சமாதனப்படுத்த ஈசன் ஏதாவது வாங்கித் தருகிறேன் என உறுதி கொடுத்து இருவரையும் சமாதானப்படுத்துவான். அந்த நடுவே அகிலாவும் தனக்கும் ஏதாவது வேண்டும் என்று கேட்டு அடம்பிடிப்பாள்.

**நேரம்**

**காலை 07 மணி 29 நிமிடம் 59 செக்கன்**

திண்ணையிலிருந்தபடி தேநீரைப் பருகிக் கொண்டிருந்தான் ஈசன். முற்றத்தில் இருந்த கோழிக் கரப்பைச் சுற்றி ஓடி விளையாடிக் கொண்டிருந்தனர் பிள்ளைகள். அவர்கள் விளையாட்டு அங்கிருந்த கோழிகளுக்குப் பிடிக்கவில்லை. முற்றத்துப் புழுதியைக் கிளப்பியபடி தாறுமாறாகப் பறந்தன. "டேய் கண்ணுக்கை புழுதியெடா." ஈசன் கத்தினான். அவர்கள் அதைப் பொருட்படுத்தியதாக இல்லை. தொடர்ந்தும் விளையாட்டோடு சங்கமித்திருந்தனர். சில கோழிகள் பயத்தால் வீட்டுக்குள் வருவதும் போவதுமாக இருந்தன.

சமையலறையிலிருந்து கிழங்குப் பொரியல் வாசனை மூக்கைத் துளைத்தது. கிழங்கும், சின்ன வெங்காயமும், கத்தரிக்காயும் பொரித்து, அதுவும் நல்லெண்ணெயில் பொரித்து, கோதுமைப் பிட்டோடு... ஈசனின் நாக்கில் எச்சில் ஊறியது.

படலை திறக்கும் சத்தம். பக்கத்து வீட்டுச் செல்லம்மா அக்கா புளி கொஞ்சம் வாங்க வந்திருந்தாள். வழமையாக வந்தால் கொஞ்ச நேரம் கதைத்துவிட்டு முடிந்தால் ஒரு தேநீரோடு விடைபெறும் அவள், இன்று சற்று வேகமாக விடைபெற்றுக் கொண்டாள். "அவ போனதும் நல்லதுதான். நிண்டால் கதைச்சுக் கொண்டிருப்பா. இண்டைக்குச் சாப்பிட்ட மாதிரித்தான் இருக்கும்" என்று ஈசன் மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

> அந்த ஒரு நிமிடம் என்ற இத்தொடரில் ஒரு சம்பவம் நடைபெற்ற அந்த நிமிடத்தில் அதில் சம்பந்தப்பட்டவர் அல்லது சம்பந்தப் பட்டவர்கள் இருந்த மனோநிலை பற்றிக் கூறப்படுகிறது. சம்பவம் உண்மையோ அல்லது புனைவோ என்றது இங்கே முக்கியமல்ல. அது கற்றுத் தரும் பாடமும் வாசகர்கள் அதிலிருந்து பெறும் படிப்பினையும்தான் மிகவும் முக்கிய மானது. இதிலே அவ்வப்போது துக்கமும் சந்தோசமும் கலந்து வரும். ஜீரணியுங்கள்.

**நேரம்**

**காலை 07 மணி 35 நிமிடம் 16செக்கன்**

மக்கள் இருவரும் விளையாட்டைத் திடீரென இடை நிறுத்தினர். சற்று முன்பு அரைகுறையாக அடுக்கி வைத்த தேரும், குரும்பட்டிகளும், தென்னம் ஈர்க்கும் அவர்கள் கண்களில் பட்டன.

"எட விஷ்ணு அப்பாட்டைக் கேட்பம். தேரைக் கட்டித்தரச் சொல்லி" ரமணன் கேட்டான்.

"ஓ மெடா!" என்றவாறு இருவரும் ஈசனின் கைகளைப் பற்றிப் பிடித்திழுத்தனர். எழும்பிவர ஈசன் பிகு பண்ணினான்.

"பாப்பம் ஆர் வீரனெண்டு. இழுங்கோ... இழுங்கோ" ஈசன் சவால் விட்டான். அகிலா தலையை நீட்டி அவர்களின் குறும்பை ரசித்துக் கொண்டிருந்தாள்.

**நேரம்**

**காலை 07 மணி 36 நிமிடம் 13செக்கன்**

முற்றத்திலிருந்தவாறு ஈசன் தேரைக் கட்டிக் கொண்டிருக்க, விஷ்ணு குரும்பட்டியைக்கையி லெடுத்துக் கொடுத்துக் கொண்டி ருந்தான். ரமணன் வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்தான். "குரும் பட்டி எல்லாம் காய்ஞ்சு போச்சுதெடா தம்பி. சரியில்லை" விஷ்ணு சொன்னான். "இல்லை..இல்லை" என்று மறுத்தான் ரமணன். "காயேல்லை எல்லே. நல்லாக் கிடக்கெல்லே அப்பா" என்று ஈசனைப் பார்த்துக் கேட்டான் ரமணன்.

**நேரம்**

**காலை 07 மணி 37 நிமிடம் 32 செக்கன்**

வீட்டு முற்றத்திலிருந்த தென்னை மரத்தை அண்ணார்ந்து பார்த்தபடி குரும்பட்டிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான் விஷ்ணு. எடுப்பதும் "காய்ஞ்சு போச்சுது" என்று எறிவதுமாகக் குரும்பட்டிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான் அவன்.

"வாருங்கோ எல்லாரும் சாப்பிட" அகிலா கூப்பிட்டாள்.

பலமாக வீசிய காற்று காவு கேட்கும் காளித் தாயைப் போலத் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது தென்னை மரம். சடார் எனத் தேங்காய்களும் , பாழைகளும் தென்னோலைகளும் விழும் சத்தம்.

"ஐயோ தென்னை மரத்துக் கீழ விஷ்ணு நிண்டவன்" அகிலா சத்தமிட்டாள்.

**நேரம் காலை 07 மணி 38 நிமிடம் 04 செக்கன்**

விஷ்ணு தலையில் இரத்தம் வடிய வீழ்ந்து கிடந்தான். பலத்த அழுகை ஒலிகள் அந்தச் சூழலை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. தென்னை மரம் மீண்டும் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அநீதியை நடைமுறைப்படுத்தும் நவீன அனுமதிப் பத்திரமா?

ருக்கி பெர்னாண்டோ & தமித் சந்திமால்

சுமார் 40 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சித்திரவதைக்கு உட்படுத்துவதற்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும், வலுக்கட்டாயமாக ஆட்களைக் காணாமல் ஆக்குவதற்கும், நீண்டகாலம் ஆட்களைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கும் வழங்கப்படும் ஓர் அனுமதிப்பத்திரமாகப் பயங்கரவாத தடைச் சட்டம் (Prevention of Terrorism Act – PTA) பயன்படுத்தப்படுகிறது. பயங்கரவாதம் தொடர்பாக, ஒரு சாதாரண சந்தேக நபர் மாத்திர மல்லாமல் ஊடகவியலாளர்கள், சமூகச் செயற் பாட்டாளர்கள் என்போர் இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதோடு, அரசாங்கத்திற்கு எதிராக முன்வைக்கப்படும், விமர்சன ரீதியான கருத்துக்களை ஒடுக்குவதற்கும், இச்சட்டம் மிக மோசமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிராக, இது அநேகமான சந்தர்ப்பங்களில் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய அரசு பதவிக்கு வந்த பின்னர், இவ்வொடுக்குமுறை ரீதியான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகவும், சர்வதேச ரீதியாக சிறந்த நடைமுறைக்கு ஏற்பவும் பயங்கரவாதத்திற்கு எதிராக ஒரு சட்டத்தை சமர்ப்பிப்பதாகவே பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுதிமொழிகள் வழங்கப் பட்டன. இதன் விளைவாகவே, கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் புதிய பயங்கர வாதத் தடைச் சட்டம் ஒன்று வரையப்பட்டது. இவ்வரைவு ஆங்கிலத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் (Counter Terrorism Act – CTA) எனப் பெயரிடப்பட்டது. சிங்கள மொழியில் பழைய பெயரில் பயங்கரவாதத் தடைச் சட்டம் என அறிமுகப்படுத்தப்பட்டு, வர்த்தமானியில் வெளியிடப்பிடப்பட்டமை ஒரு வகையில் கேலிக்கூத்தாகும்.

“பயங்கரவாதம் என அறிமுகப்படுத்தப்படும் தவறுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு சுமார் 14 சட்டங்கள் - தண்டனைச் சட்டக் கோவையின் 6 வாசகங்கள் உட்பட சுமார் 20 சட்டங்கள் இலங்கைச் சட்டத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளன. அதேசமயம், அவசரகால நிலைமையின் கீழ் செயற்படுவதற்கு ஜனாதி பதிக்கு அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தும் அதிகாரமும் உண்டு. நிலைமை இவ்வாறு இருக்கையில், பயங்கரவாதம் தொடர்பாக தனியான விசேட சட்டத்தின் அவசியம், வெறுமனே சிறுபான்மை சமூகங்கள் அரசுக்கு எதிராக முன்வைக்கும் விமர்சன ரீதியான கருத்துக்களை ஒடுக்குவதாகவே அமையும். ஆகவே, பயங்கர வாதத்தை ஒடுக்குவதற்கு ஏற்கனவே உள்ள சட்டங் கள் போதுமானவை என்பது எமது கருத்தாகும்.”

முன்னைய பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது போலவே, இப்புதிய சட்ட மூலமும் சாதாரண மக்களுக் கும், ஊடகவியலாளர்களுக்கும் சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் எதிராக தொந்தர வுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் பயன்படுத்துவதற்கு அவசியமான வாய்ப்புக் களை முறையே வழங்கியுள்ளன. இச்சட்டத்தில் பரந்துபட்ட தெளிவின்மை காணப்படுகிறது. பயங்கரவாதம் என்பதற்கு வரைவிலக்கணமாக கருதக்கூடிய தவறுகள் பற்றி சரியான விளக்கம் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக இச்சட்டத்தைப் பயன்படுத்தி, அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் மற்றும் ஒரு சங்கத்தை உருவாக்கும் சுதந்திரம் என்பன மட்டுப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உண்டு. அடிப்படை மனித உரிமைகள் கூட நல்லெண்ணத்தோடு அமுல்படுத்தியிருந்தால் மாத்திரமே பயங்கரவாத செயலாகக் கருதப்படமாட்டாது.

இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட நபர் உடல் ரீதியாக பாதிப்புக்கு உள்ளாக் கப்படாத வகையில் பேணப்படுவது கட்டாயப் படுத்தப்படவில்லை. கைது செய்யப்படும் நபர், கைது செய்யப்படுவதற்கான காரணமும் அதற்கு ஏற்புடைய ஏனைய தகவல்களையும் அறிவித்தல் கட்டாயமாக்கப்படவில்லை. பின்னர் இவ்வாறு செய்வதற்கான காலச் சட்டகம் வழங்கப்படவும் இல்லை. குடும்ப உறுப்பினர்கள் கைதுசெய்யப்படும்போது அந்த இடத்தில் பிரசன்னமாக இருந்தாலும் கைது செய்யப்பட்டமைக்கான விவரங்களை அவர்களுக்கு அறிவிப்பதற்குக் கூட 24 மணித்தியாலங்கள் வழங்கப்படவில்லை.




குடும்பத்தவர்கள் கைதுசெய்யப்படக்கூடிய வேறு சந்தர்ப்பங்களில் அவ்விடத்தில் இருந்தவர் அல்லது அவர்கள் கைது செய்யப்பட்டமையை அறிவிப்பது கட்டாயப்படுத்தப்படவில்லை. அதேசமயம் பெண் சந்தேக நபர்கள் பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட வேண்டுமெனவும் அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படும் போது கட்டாயமாக ஒரு பெண் உத்தியோகத்தர் அவ்விடத்தில் பிரசன்னமாக வேண்டுமென்பதும் அவசியமாக்கப்படவில்லை.

பொலிஸார் தாக்கல் செய்த தடுத்து வைக்கும் கட்டளைக்கு நீதிவானின் அங்கீகாரம் பெறல் வேண்டும். அதே சமயம், ஒரு நபர் இரண்டு வாரங்கள் வரை தடுத்து வைப்பதைத் தீர்மானிப்பவர் பொலிஸாரே. மேலும், இத்தகைய தடுத்துவைக்கும் கட்டளையை, 8 வாரங்கள் வரை நீடிப்பதை நீதிவான் அங்கீகரிக்க முடியும்.

இத்தகைய தடுத்து வைத்தலுக்கு எதிராக 'மீளாய்வுக் குழுவிடம்' மேன்முறையீடு செய்ய முடியும். எனினும் இம்மீளாய்வுக்குழு அமைச்சர், அமைச்சுச் செயலாளர், அமைச்சரினால் நியமிக்கப்படும் மேலும் இருவரை உள்ளடக்கியதாக அமையும். சமூகச் செயற்பாட்டாளர்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எதிரணி அரசியல்வாதிகளுக்கும் எதிராக ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகளும் பொலிஸாரும் பயங்கவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தும் எமது வரலாற்றைக் பின்னோக்கிப் பார்க்கையில், இச்சட்டத்தின் மூலம் அமைச்சருக்கும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் ஒரு நரியிடம் கோழிக் குஞ்சுகளை ஒப்படைப்பதற்கு ஈடாகும் என்ற கருத்து எமக்கு மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

அமுலில் உள்ள பயங்க்ரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுதல், குறிப்பிட்ட அமைவிடங்களுக்குப் பிரவேசித்தல் மற்றும் பொருட்களை கைப்பற்றுதல் ஆகிய நடவடிக்கைகளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரமே மேற்கொள்ள முடியும். ஆனால், புதிய சட்டத்தின் கீழ் முப்படையினருக்கும், கரையோரப் பாதுகாப்பு பிரிவினருக்கும் இவ் அதிகாரங்கள் கிடைக்கின்றன. அதேசமயம் பொலிஸ ார், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு அவர்களது மனக்குறைகளை எடுத்துக்கூற சந்தர்ப்பம் வழங்காமல், ஒரு கூட்டத்தை, ஒரு பேரணியை அல்லது ஒரு செயற்பாட்டை நிறுத்துவதற்கு நீதிவானிடம் கோரிக்கை விடுக்கலாம்.


மறுபுறம் ஏதாவது ஓர் அமைப்பை, பொது அமைவிடத்தை அல்லது வேறு ஓர் இடத்தைத் தடை செய்யப்பட்ட அமைவிடமாக கால வரையறையின்றி பிரகடனப்படுத்தும், கட்டளையை விடுப்பதற்கு முன்னர், அவ்விடயத்தைச் சவாலுக்கு உட்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வாய்ப்பு கிடைக்கமாட்டாது. தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் வழங்கப்படாத, புதிய சட்டமூலத்தின் மூலம் ஒப்படைக்கப்படும் மேலதிக அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு உண்டு.

புதிய சட்டத்தின் கீழ் பகிரங்கமாக மன்னிப்புக் கோருவதற்கும், புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்கும், சமூக சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அதிகா ரம் உண்டு. இவற்றின் மூலம் இழைத்த குற்றத்திற்கு நஷ்ட ஈடு செலுத்துவது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்நிலைமையின் கீழ் வழக்கு விசாரணைகளுக்கு நீண்டகாலம் எடுக்கப்படுவதனால், சட்டத்தரணிகளின் கட்டணம் என்பன பாதிக்கப்பட்டோரால் தாங்கமுடியாது. புதிய சட்டத்தை வரைந்து வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்ட பின்னர், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் இச்சட்டத்தின் மூலம் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக பிரகடனப்படுத்தி, உயர் நீதிமன்றத்தில் மனுக்களை சமர்ப்பித்ததோடு, உயர் நீதிமன்றம் மனுக்களைப் பொருட்படுத்தாமல் மரண தண்டனையை கொண்டுவருவதன் மூலம் அனைத்தும் ஏற்கனவே இருந்ததை விட மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அமுலில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் புதிய வரைவு ஆகிய இரண்டின் மூலம் தடுத்து வைக்கப்படுவோரின் உயிர்வாழ்வுக்கான பாதுகாப்பு, சுதந்திரம், உடல் உள நலத்திற்கான அச்சுறுத்தல் ஏற்படும் அதேவேளை, அடிப்படை மனித உரிமைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. அதேசமயம் பரந்துபட்டதும் தெளிவற்றதுமான வரைவிலக்கணங்களின் மூலம், சட்ட ரீதியாக வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கும் ஜனநாயகப் பிரஜைகள் என்ற வகையில் செயற்படுவதும், பயங்கரவாத நடவடிக்கைகளாக மாறுகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அதற்கு ஒப்பான மற்றுமோர் சட்டத்துடன் தொடர்புபடுத்துவது எந்த வகையிலும் அவசியமில்லை: நாடாளுமன்றத்தின் மூலம் கட்டாயமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். அதனைச் செய்ய முடியும். அமைச்சரவை புதிய சட்ட வரைவை வாபஸ் பெற வேண்டும் அல்லது நாடாளுமன்றத்திலேயே அது கட்டாயமாக தோல்விக்குட்படுத்தப்பட வேண்டும். தற்போது அமுலில் உள்ள சட்டங்களின் ஊடாக பயங்கரவாதம் என அடையாளப்படுத்தப்படும் தவறுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியும்.

## சூரியனா சந்திரனா



அறிஞர்கள் கூடியிருந்த ஒரு சபையில் மிகவும் பயனுடையது எது சூரியனா அல்லது சந்திரனா? என்பது குறித்துப் பட்டிமன்றம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அங்கே பேசியவர்கள் பெரும்பான்மையினர் சந்திரனைவிட சூரியனால்தான் உலகத்திற்கு அதிகப் பயன் உண்டு என்ற கருத்தையே வலியுறுத்திப் பேசினர்.

அப்போது பேசியவர்களை நையாண்டி செய்து வேடிக்கை பார்க்க வேண்டும் என்று முல்லாவுக்குத் தோன்றியது. அவர் உடனே எழுந்து "அறிஞர் பெருமக்களே, இங்கே நடந்த பட்டிமன்றம் தொடர்பாக எனது கருத்தைக் கூறலாமா?" என்று கேட்டார். இது பொதுமன்றம், இங்கு யாரும் தங்கள் கருத்தை எந்தவிதத் தடையுமின்றிக் கூறலாம். முல்லா அவர்களே உங்கள் கருத்தைக் கூறுங்கள் என்று அறிஞர் பெருமக்கள் கேட்டுக் கொண்டனர். சூரியனைவிடச் சந்திரனால்தான் உலத்துக்கு அதிகமான பயன் கிடைக்கிறது என்று நான் கருதுகிறேன் என்றார் முல்லா.

அது எவ்வாறு விளக்குங்கள் என்று அறிஞர்கள் கேட்டனர். பகலில் நமக்கு இயற்கையாக வெளிச்சம் இருக்கிறது. அதனால் சூரியனுடைய உதவி நமக்குத் தேவையே இல்லை. இரவில் இருளாக இருக்கிறது. சந்திரன் இருளை அகற்றி நமக்குத் தேவையான ஒளியை இரவிலே அளிக்கிறது. அதனால் சந்திரன் தான் நமக்கு அதிகப் பயனை அளிக்கின்றது என்றார் முல்லா.

முல்லா தங்களை நையாண்டி செய்கிறார் என்பதை உணர்ந்து அறிஞர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள்.

## கேள்விக்கென்ன பதில்


1. சீனாவின் துயரம் என்று அழைக்கப்படும் நதி?
2. தொலைநோக்கியில் மட்டும் பார்க்கக் கூடிய கோள்கள் எவை?
3. மிகப்பெரிய மஞ்சரியை(பூங்கொத்து) உடைய பூ எது?
4. தையல் இயந்திரம் கண்டுபிடித்தவர் யார்?
5. முதன் முதலாக எந்த மொழியில் யாரால் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டது?





விடைகள்
1.மஞ்சள் நதி
2. யுரேனஸ்,நெப்டியூன்
3. சூரியகாந்தி
4.ஐசக் சிங்கர்
5. ஜெர்மானியர் ஒருவர் இலத்தீனில்.

## அப்துல் கலாம் பொன்மொழிகள்



- வானத்தைப் பாருங்கள். நாம் தனித்து இல்லை. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நம்மிடம் நட்பாக உள்ளது. கனவு காண்பவர்களுக்கும் , உழைப்பவர்களுக்கும் மட்டுமே அது சிறந்தவற்றை வழங்குகின்றது
- கரைகளைக் கடக்கும் துணிவிருந்தால்தான், புதிய கடல்களைக் கண்டுபிடிக்க முடியும்.
- அதிகம் பயணிக்காத பாதைகளில் செல்லும் துணிவை வளர்த்தெடுங்கள். அதுதன் உண்மையான தலைமைப் பண்பு.
- உங்களுக்கு சிறகுகள் உள்ளன. தவழ்ந்து செல்லாதீர்கள். அதைக் கொண்டு மேலே மேலே பறந்து செல்லுங்கள்.


## அட அப்படியா?



உலகில் சமாதான தருணங்களிலும், யுத்த தருணங்களிலும் வெவ்வேறு விதத்தில் தேசியக்கொடியை பறக்கவிடும் ஒரே நாடு பிலிப்பைன்ஸ் ஆகும். பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசியக்கொடியானது நீலம் மற்றும் சிவப்பு நிறங்களைக் கொண்டிருக்கின்றது.

சமாதான தருணங்களில் நீல நிறப் பாகமானது மேற்பாகத்திலிருக்கு மாறு தேசியக்கொடி பறக்கவிடப்படும். அதேவேளை யுத்த தருணங்களில் சிவப்பு நிறப்பாகமானது மேற்பாகத்தி லிருக்குமாறும் பிலிப்பைன்ஸ் நாட்டில் தேசியக்கொடி பறக்கவிடப்படும்

## வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



## காட்டில் ஒரு காகம்

காகம் ஒன்று காட்டிலே
தாகத்தாலே தவித்தது
வீட்டின் பக்கம் வந்தது
குடம் ஒன்று கண்டது
அந்தக் குடத்தின் அடியிலே
கொஞ்சத் தண்ணீர் இருந்தது
கல்லைப் பொறுக்கிப் போடவே
தண்ணீர் மேல் வந்தது
ஆசைதீரக் குடித்தது
தாகம் தீர்ந்த காகமும்
வேகமாகப் பறந்தது



## புதிரோ புதிர்

1. படபடக்கும் பளபளக்கும். மனதுக்குள் இடம்பிடிக்கும். அது என்ன?
2. தலையில் கிரீடம் வைத்த தங்கப் பழம். அது என்ன?
3. நிலத்தில் முளைக்காத செடி. நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?
4. கையை வெட்டுவார். கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர். யார் அவர்?



விடைகள்
1.பட்டாசு 2. அன்னாசி
3. முடி 4. தையல்காரர்

தொகுப்பு : காவலூர் ஞானம்

# அரபு மண்ணில் விசேட ஒலிம்பிக்




பொதுவாகவே கொழுத்த பணக்கார அரபு நாடான எமிரேட்ஸ் குடியரசுக்கு விளையாட்டில் ஆர்வம் அதிகம். இன்று உச்சத்தில் இருக்கும் மன்செஸ்டர் சிற்றி கால்பந்தாட்டக் கழகத்தை 2008 இல் விலைக்கு வாங்கியவர் எமிரேட்ஸ் நாட்டின் உதவி பிரதமர் ஷேக் மன்சூர். இந்த விளையாட்டுப் பிரியர்கள் இப்பொழுது தனியான ஒலிம்பிக் விளையாட்டை அரங்கேற்றத் தயாராகின்றனர்.

170 நாடுகளிலிருந்து வந்துள்ள வலுக்குறைந்த 7,000 தடகள வீரர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர். மார்ச் 8 இல் ஆரம்பித்த இந்த விளையாட்டுகள் 22 ஆம் திகதி வரை நடக்கும். தலைநகரான அபுதாபியில்தான் அனேகமான விளையாட்டுகள் இடம்பெறப் போகின்றன. வலுக்குறைந்தோருக்கான போட்டிகளே இவை. இந்த ஒலிம்பிக் அமைப்பு 1990 இல் ஆரம்பிக்கப்பட்டது.

வருடம் முழுவதும் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. ஒலிம்பிக் விளையாட்டுகளில் பங்குபற்றுவதற்கான உற்சாகத்தையும், தகைமையையும், மகிழ்ச்சியையும் இந்தப் பயிற்சிகள் இவர்களுக்கு வழங்குகின்றன.

1990இலிருந்து 12 தடவைகள் (Mena and World Games) விஷேட ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெற்றுள்ளன. பதிவு செய்யப்பட்ட 5,000 தடகள வீரர்கள் இந்த அமைப்பில் இருக்கிறார்கள். பிரத்தியேக பயிற்றுவிப்பாளர்களாக 300 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். 2017 இல் இடம்பெற்ற போட்டியில் 70க்கு மேற்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில், எமிரேட்ஸ் தடகள வீரர்கள் பங்குபற்றியிருந்தனர்.



# டென்னிஸ் இழக்கும் அற்புத வீரர்

கண்ணீர் மல்க, தனது ஓய்வு முடிவை அறிவிததுள்ளார் அன்டி முர்ரே!

77 வருடங்களில் முதற் தடவையாக தன் நாட்டுக்கு ஒரு விம்பிள்டன் சம்பியனைப் பெற்றுக் கொடுத்த பெருமை, இந்தப் பிரித்தானிய வீரரையே சாரும். இரண்டு ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை வென்ற இவர், தொடர்ந்து 41 வாரங்கள் தரப்படுத்தலில் முதலாம் இடத்தில் இருந்தவர்.

இவருக்கு வயது அதிகமில்லை – இப்பொழுது 31 வயது. அடுத்தடுத்து காயங்கள் காயங்கள தொடர்ந்ததால், இந்த அற்புத வீரர் ஆடுவதிலிருந்து ஒதுங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். பெடரர், செரீனா போன்றவர்கள் இன்னமும் அழகாக ஆடிக் கொண்டிருக்க, இவ்வளவு சீக்கரம் தான் வெளியேறுவதையிட்டு, மனம் நொந்த நிலையில், தன் ஓய்வை அறிவித்துள்ளார்.

விம்பிள்டன் 2012 இல் இறுதி மோதலில் தோல்வியைத் தழுவியவர் மனம் சோர்ந்து விடவில்லை. சில வாரங்கள் கழித்து, அதே அரங்கில் ஒரு ஒலிம்பிக் வீரராக களமேறி, தங்கப் பதக்கம் வென்றவர் முர்ரே. பெடரர், நடால், ஜொகோவிக் என முன்னணி நட்சத்திரங்களுக்கு சவால் விடுத்து ஒளிர்ந்த முர்ரேயின் ஓய்வு டென்னிஸ் ரசிகர்களுக்குப் பெரும் இழப்புத்தான்.

# உருளும் பந்தில் புரளும் மில்லியன்கள்


நைக் (Nike), பூமா(Puma)- இந்த இரண்டுமே இராட்சத நிறுவனங்கள். விளையாட்டு உலகில் மிகப் பிரபலம். தங்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனைக்காக கோடி கோடியாக விளையாட்டு வீரர்களுக்கும், கழகங்களுக்கும் கொட்டுபவர்கள் பெரிய பெரிய விளையாட்டுக் கழகங்களுடன் விளையாட்டு உபகரண விநியோகத்திற்காக, ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும்போது பெருந்தொகை டொலர்களும் கைமாறும்.

மன்செஸ்டர் சிற்றி என்ற பணக்கார ஆங்கிலக் கால்பந்தாட்ட




கழகம் கட்சி மாறியிருக்கின்றது. இதுகாலம் வரையிலும் நைக் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து வந்தவர்கள் இப்போது பூமா நிறுவனத்தோடு ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத்தின் பெறுமதி 65 மில்லியன் பவுண்ஸ் (நம் நாட்டு மதிப்பில் ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 680 கோடி ரூபா) பிரிமியர் லீக் சரித்திரத்தில், மன்செஸ்டர் யுனைட்டெட் கழகம் அடிடாஸ் நிறுவனத்துடன் செய்த ஆண்டுக்கு 75 மில்லியன் பவுண்ஸ் ஒப்பந்தத்திற்கு அடுத்து, ஒரு நிறுவனம் கழகத்திற்கு கொடுக்கும் இர்ண்டாவது பெரிய தொகை இதுவேதான்!

எதிர்வரும் ஜுலை தொடக்கம் இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வருகிறது. அவுஸ்ரேலியா, ஸ்பெயின், உருகுவே, சீன நாடுகளிலுள்ள சகோதர கழகங்களை யும் இந்த ஒப்பந்தம் உள்ளடக்குகிறது என்கிறது பூமா! 10 பத்து வருட காலத்திற்கு நீடிக்கும் இந்த ஒப்பந்தத்திற்காக, பூமா கொடுக்கும் பணம், தற்போதைய விநியோகஸ்தர் நைக்கை விட, மூன்று மடங்கு அதிகமாம்.



# பிறந்த நாளையே மறக்க வைத்த அடி...!

மல்யுத்த ரசிகர்கள் றிக் பிளேயரை அவ்வளவு சீக்கிரம் மறந்துவிட மாட்டார்கள். (இவரது மகள்தான் இன்று மகளிர் உலகை ஆட்டிப் படைக்கும் சார்லொட்) அண்மையில் இவர் தனது 70 ஆவது வயதைப் பூர்த்தி செய்தார். மல்யுத்த உலகமே கேக் வெட்டி கொண்டாட ஆசைப்பட்டது.

ஆனால் ஆறு தடவை உலக சம்பியனாக இருந்து பின்னர் ஒதுங்கிய பற்றிஸ்ரா. இவரின் பிறந்த நாளை மறந்த நாளாக்கி விட்டார். றிக்கை அடித்து துவைத்து. இந்தா பார் உன் நண்பனை என்று "றிபிள் எச்சுக்கு கமராவில் மயங்கிக் கிடந்த றிக்கைக் காண்பித்துள்ளார் பற்றிஸ்ரா. இவர். றிபிள் எச்சை வம்புக்கு இழுக்கிறார் என்று பேச்சடிபடுகின்றது.

இதேவேளை. என்னதான் எச்சரித்திருந்தும். நொண்டி நொண்டி வந்த பெக்கி லிஞ்ச். மீண்டும் களத்தில் குதித்து அடிதடியில் இறங்கியுள்ளார். விலங்கு மாட்டிப் பொலிஸார் கைது செய்து கொண்டு சென்றனர். றொண்டாவுக்கு இது பிடிக்கவில்லை. கோபாவேசத்தோடு நிர்வாகத்தினரை மேடைக்கு அழைத்து. லிஞ்சை விடுவித்து தன்னுடன் மோதவிடுமாறு கேட்டார். ஆனால் கோரிக்கை மறுக்கப்பட்டது. 'இந்தா நீயே வைத்துக் கொள்" என்று பட்டியை. ஸ்டெபானியின் காலடியில் போட்டுவிட்டு போயே போய்விட்டார் றொண்டா.

மற்றொரு பக்கம். இரத்தப் புற்றுநோயால் சண்டையில் இருந்து ஒதுங்கிய பிக் போக்கும் களத்தில் குதித்து பரபரப்பூட்டி இருக்கிறார். மூவர் அடங்கிய "ஷீல்ட்" என்ற உடைந்த கூட்டணி மீண்டும் உதயமாகலாம் என்றும பரப்பி விட்டுப் போயிருக்கின்றார்.

இப்பத்திரிகை இல.10, வில்வம் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நோர்சி மீடியா ( பிறைவேட் ) லிமிடெட் நிறுவனத்தால் 10.03.2019 அன்று வெளியிடப்பெற்றது.